பக்கங்கள் : பதின்னான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 ஆனி 08 வியாழக்கிழமை (22.06.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 206

## நோர்வேக்கு எழுதிய கடிதத்தில் தெரிவிப்பு

# யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடிக்க

# புலிகள் திட்டவட்டமான நிபந்தனை

## அரசுப் படைகள் செம்மையாகப் பின்பற்றினால் தாங்களும் அதே மாதிரிச் செயற்படுவார்களாம்

கிளிநொச்சி, ஜூன் 22

**யுத்த நிறுத்தத்தைத் தொடர்ந்து கடைப்பிடிப்பதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் திட்டவட்டமான நிபந்தனை ஒன்றை விதித்திருக்கின்றார்கள். யுத்த நிறுத்த ஏற்பாடுகளை அரசுப் படைகள் செம்மையாக - முழுமையாக - கடைப்பிடித்தால் மட்டுமே தாங்களும் யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடிப்பார்கள் என்பதை எழுத்து மூலம் அனுசரணைத் தரப்பான நோர்வேக்கு விடுதலைப் புலிகள் தெரியப்படுத்தியிருக்கின்றனர்.**

ஒஸ்லோ கலந்துரையாடல் எதிர்பார்த்த வெற்றியைத் தராமல், பயனின்றி முடிந்த நிலையில் அனுசரணைப் பணிக்குப் பொறுப்பான நோர்வே அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் ஐந்து கேள்விகள் அடங்கிய கடிதம் ஒன்றை இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வே. பிரபாகரனுக்கும் அனுப்பி வைத்திருந்தார்.

அதற்கு விடுதலைப் புலிகளின் தரப்பில் அவர்களின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் ஒப்பமிட்டு அனுப்பி வைத்த பதில் தற்போது நோர்வே அனுசரணையாளர்களுக் குக் கிடைத்திருக்கின்றது.

(14ஆம் பக்கம் பார்க்க)

## கோப்பாய் மாவீரர் இல்லத்தின் பணியாளர் விடுதி தீக்கிரை

யாழ்ப்பாணம், ஜூன்23

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்ல வளாகத்தில் அமைந்திருந்த பணியாளர் விடுதி நேற்றுமுன்தினமிரவு ஆயுததாரிகளால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

விடுதியின் யன்னல் கண்ணாடிகள் அடித்து நொருக்கப்பட்டுள்ளதுடன் விடுதிக்குள்

(14ஆம் பக்கம் பார்க்க)

உதயன்

மாற்றப்பட்ட தொலைபேசி இலக்கங்கள்

| | |
|---|---|
| பழைய தொ.இல. | 222 2085<br>222 2050 |
| புதிய தொ.இல. | 222 9955<br>222 9944 |

## நோர்டிக் நாடுகளின் பதில் அடுத்த வியாழனன்று

### கிளிநொச்சியில் வைத்து நோர்வேத் தூதுவர் தகவல்



கிளிநொச்சி, ஜூன்22

நோர்ட்டிக் நாடுகளின் பதில் எதிர்வரும் 29ஆம் திகதி வியாழக்கிழமை வெளியாகும் என்று இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினரை நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் நேற்று கிளிநொச்சியில் சந்தித்துக்

(14ஆம் பக்கம் பார்க்க)

## ரோந்துசென்ற படையினர் மீது தாக்குதல்: கோப்ரல் உட்பட மூன்று சிப்பாய்கள் படுகாயம்

### துன்னாலையில் நேற்று மாலை சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூன்22

வடமராட்சி, துன்னாலைப் பகுதியில் நேற்று மாலை 6மணியளவில் இடம்பெற்ற மோதல் சம்பவமொன்றில் இராணுவ கோப்ரல் ஒருவர் உட்பட மூன்று சிப்பாய்கள் படுகாயமடைந்தனர்.

மந்திகைச் சந்தியிலிருந்து கலிகைச் சந்திக்குச் செல்லும் வீதியில் - இந்திர அம்மன் கோவிலடியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வழமையாக ரோந்து செல்லும் படையினரை இலக்குவைத்து ஆயுததாரிகள் கிரனேட் தாக்குதல் நடத்தியதுடன், துப்பாக்கிப்

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஈழ அகதிகளுக்காகத் தமிழகத்தில் 50,000 வீடுகள் அமைக்க சிபாரிசு

சென்னை, ஜூன் 22

இலங்கையிலிருந்து வந்து தமிழகத்தில் வாழும் அகதிகளுக்கென 50 ஆயிரம் வீடுகள் கட்டிக் கொடுக் கப்பட வேண்டுமென்று தமிழகத்தின் இரண்டு அமைச்சர்கள், முதலமைச்சர் கருணாநிதியிடம் பரிந்துரை செய்துள்ளனர்.

இராமேஸ்வரத்தில் இலங்கை அகதிகளின் நிலைமை மோசமாக உள்ளதால், அவர்களுக்கு உதவ வேண்டும் என விடுதலைச் சிறுத்தைகள் கட்சியைச் சேர்ந்த சட்டப் பேரவை உறுப்பினர் ரவிக்குமார் தமிழக சட்டசபையில் கோரிக்கை விடுத்திருந்தார். இதைக் தொடர்ந்து அகதிகள் முகாமுக்கு நேரில் சென்று ஆய்வு நடத்தி அறிக்கை அளிக்குமாறு அமைச்சர்கள் பெரியகருப்பன், சுப. தங்கவேலன் ஆகியோரை முதல்வர் கருணாநிதி நியமித்தார்.

இவர்கள் இருவரும் இராமேஸ்வரம்

(14ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியப் பிரதமருடன் இன்று மங்கள புதுடில்லியில் சந்திப்பு

கொழும்பு, ஜூன் 22

இந்தியாவிற்கான விஜயமொன்றை இன்று மேற்கொள்ளவுள்ள வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர புதுடில்லியில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்துப் பேசவுள்ளார்.

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள மோசமான நிலைமைகள் குறித்து இருவரும் கலந்துரையாடவுள்ளனர்.

இந்திய எதிர்க்கட்சித் தலைவர் அத்வானியையும் அமைச்சர் மங்கள சமரவீர சந்தித்துப் பேசவுள்ளார்.

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள மோசமான நிலைமை மற்றும் ஈழத் தமிழர் பிரச்சினை ஆகியன குறித்து தமிழக முதல் இவருடன் கலந்து பேசுவதற்காக புதுடில்லியிலிருந்து தேசிய பாதுகாப்புத்துறை ஆலோசகர் என்.கே. நாராயணனை தமிழ்நாட்டுக்கு அனுப்புவதற்கு இந்தியப் பிரதமர் நேற்று முன்தினம் தீர்மானித்த சூழ்நிலையில், இன்றைய மேற்படி சந்திப்பு முக்கியத்துவம் பெறுகின்றது.

(14ஆம் பக்கம் பார்க்க)

# தமிழீழ மக்களின் உரிமைப் போராட்டத்தை இந்திய அரசு ஏற்று அங்கீகரிக்க வேண்டும்

## நோர்வேத் தூதரைச் சந்தித்த பின் தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு



கிளிநொச்சி, ஜூன் 22

"தமிழீழ மக்களின் உரிமைப் போராட்டத்தை இந்திய அரசு அங்கீகரிக்கவேண்டும்."

- இவ்வாறு கோரியிருக்கின்றார் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கரை கிளிநொச்சியில் நேற்றுச் சந்தித்துப் பேசிய பின்னர் ஊடகவியலாளர்களுக்குப் பேட்டியளித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நோர்வேத் தூதுவர் கிளிநொச்சிக்கு வருவதற்கான ஹெலிகொப்டர் வசதியை இலங்கை அரசு வழங்க மறுத்ததையடுத்து கொழும்பிலிருந்து வவுனியாவரை ஹெலிகொப்டரில் வந்த நோர்வேத் தூதுவர் அங்கிருந்து தமது உதவியாளர் சகிதம் வாகனத்தில் - தரை மார்க்கமாக - கிளிநொச்சி வந்தார்.

நேற்றுக் காலை 10 மணிக்கு புலிகளின் அரசியல்துறை நடுவப் பணியகத்தில் தமிழ்ச்செல்வன் குழுவினரை அவர் சந்தித்தார்.

இச்சந்திப்பின் பின்னர் ஊடகவியலாளர்களைச் சந்தித்த தமிழ்ச்செல்வன், அங்கு வழங்கிய பேட்டியின் விவரம் வருமாறு:-

*கே:-* இன்றைய சந்திப்பு தொடர்பாக?

*ப:-* நோர்வே அனுசரணையாளர்களை வழமையாக சந்திக்கின்ற சந்திப்பாகவே இச் சந்திப்பும் அமைந்தது. முக்கியமாக ஒஸ்லோ சந்திப்புக்களுக்கு பின்னரான ஒன்று என்ற வகையிலும் அரசும் அரச படைகளாலும் படுகொலைகளும், வன்முறைகளும்

(02ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பலத்த இராணுவ பாதுகாப்புடன் நகருக்கு தெற்கு பத்திரிகையாளர்

தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தின் ஏற்பாட்டில் தென்பகுதி ஊடக வியலாளர் குழுவொன்று கடந்த 19ஆம் திகதி திங்கட்கிழமை யாழ். வந்தது.

இந்தக் குழுவினர், நேற்று நண்பகல் பலத்த இராணுவப் பாதுகாப்புடன் யாழ். நகரப் பகுதிக்கு விஜயம் செய்தனர். இவர்களது வருகையையொட்டி நேற்று யாழ். நகரப் பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

இந்த ஊடகவியலாளர் குழுவினர் யாழ். பஸ் நிலையப் பகுதியில் வியாபார நிலையத்தின் உரிமையாளர்கள், பொதுமக்கள் ஆகியோரைச் சந்தித்துத் தற்போதைய நிலைவரம் தொடர்பாகக் கலந்துரையாடினர்.

ஊடகவியலாளர்களின் விஜயத்தையொட்டி யாழ். நகரப்பகுதியில் சுமார் ஒரு மணிநேரம் போக்குவரத்தும் தடைப்பட்டிருந்தது.

## கடவுச்சீட்டு பெறச் சென்ற இளைஞர் இருவர் கைது

கடவுச்சீட்டு (பாஸ்போட்) பெறுவதற்காக யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு சென்ற இளைஞர் இருவரை பொரளை பொலீஸார் கைது செய்துள்ளனர் என்று, அவர்களது உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குருநகரைச் சேர்ந்த ஜெயசீலன் ஜோன் ஹென்றி நியூமன் (வயது 32), அருள்தாசன் தயான் (வயது 22) ஆகிய இருவருமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர். இந்த முறைப்பாடு தொடர்பாக, மனித உரிமை ஆணைக்குழு அதிகாரிகள் உரிய தரப்பினருடன் தொடர்பு கொண்டுள்ளனர்.

# மின் ஊழியர் வேலைநிறுத்தம் தற்காலிகமாக ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூன் 22

இலங்கை மின்சாரசபை மறுசீரமைப்பு சம்பந்தமான சட்டமூலத்தை இன்றைய தினம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்காதிருக்க அரசு உறுதிமொழி தந்திருப்பதால் இன்றைய தினம் ஆரம்பிக்கப்படவிருந்த இலங்கை மின்சாரசபை ஊழியர்களின் தொழிற்சங்கப் போராட்டம் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

இந்தத் தகவலை நேற்று 'உதயன்'இற்குத் தெரிவித்தார் இலங்கை மின்சாரசபைக் கூட்டுத் தொழிற்சங்கங்களின் தலைவர் ரஞ்சன் ஜயலால். அவர் மேலும் கூறியதாவது:-

''மின்சாரசபை மறுசீரமைப்புச் சட்டமூலம் இன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டால் பெரும் வேலை நிறுத்தமொன்று நடைபெறுமென்று நாம் திட்டவட்டமாகக் கூறியிருந்தோம். இதனால், சட்டமூலத்தை இன்று சபையில் சமர்ப்பிப்பதில்லை என்று அரசு எமக்கு உறுதியளித்துள்ளது.

''இந்தச் சட்டமூலத்தை மீண்டும் அடுத்த மாதம் 4 ஆம் திகதி சபையில் சமர்ப்பிக்க அரசு உள்ளூர நடவடிக்கைகளை எடுத்து வருவதாக நாம் அறிந்தோம். ஆனால், அதற்கு முன்னர் நாம் முன்வைத்த திருத்தங்களை அரசு ஏற்கவேண்டும். இல்லாவிட்டால் பாரிய பின்விளைவுகள் ஏற்படக்கூடிய சாத்தியம் உள்ளது.''

- இவ்வாறு கூறினார் ரஞ்சன் ஜயலால்.(க)

### கச்சதீவுக் கடலில் இலங்கைக் கடற்படை

# தமிழக மீனவர்களின் மீது தொடர்ந்து அடாவடித்தனம்

இராமேஸ்வரம், ஜூன் 22

கச்சதீவுக் கடலில் தமிழக மீனவர்களின் பல லட்சம் ரூபா பெறுமதியான இறால் மீன்களைப் பறித்துக் கொண்ட இலங்கைக் கடற்படையினர், இனிமேல் தமிழக மீனவர்கள் இலங்கைக் கடலுக்குள் வரக்கூடாதென்றும் எச்சரித்துள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

இராமேஸ்வரத்திலிருந்து ஏராளமான மீனவர்கள் நேற்றுமுன்தினம் மீன்பிடிக்க கடலுக்குச் சென்றனர். நள்ளிரவு வேளை கச்சதீவுக் கடலில் ரோந்து சேவையில் ஈடுபட்டிருந்த இலங்கைக் கடற்படையினர், தமிழக மீனவர்களின் படகுகளை வழிமறித்து, மீன்வலைகளை வெட்டியெறிந்தனர் எனக் கூறப்படுகின்றது.

அத்துடன், 50இற்கும் மேற்பட்ட படகுகளில் இருந்த, பல லட்சம் ரூபா பெறுமதியுள்ள இறால் மற்றும் மீன்களைப் பறித்துக் கொண்ட இலங்கைக் கற்படையினர், இனிமேல் தமிழக மீனவர்கள் இலங்கைக் கடல் பகுதிக்குள் வரக்கூடாதென்று எச்சரித்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. நேற்று அதிகாலை கரை திரும்பிய இராமேஸ்வரம் மீனவர்கள் இது குறித்து பொலீஸாரிடம் முறையிட்டனர்.

இரண்டு நாட்களுக்கு முன்னர் இலங்கைக் கடற்படையினர் சுட்டதில் தமிழக மீனவர் ஒருவர் படுகாய மடைந்தமை குறிப்பிடத்தக்கது.

(க)

# தமிழீழ மக்களின் உரிமைப்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகரித்துள்ள நிலையிலும் நாம் நோர்வே அனுசரணையாளர்களை சந்தித்தமை என்ற வகையில் இது முக்கியத்துவம் பெறுகின்றது.

நோர்வே அனுசரணையாளர்களுக்கு எமது நிலைப்பாட்டை தெட்டத்தெளிவாகவும் உறுதியாகவும் தெரிவித்துள்ளோம். இலங்கை அரசாங்கம் தொடர்ந்து தமிழ் மக்களை படுகொலை செய்து கொண்டிருப்பதும், எமது பிரதேசம் மீதும் எமது மக்கள் மீதும் சிறிலங்கா வான்படை குண்டுவீச்சுக்களையும் ஆட்லறித்தாக்குதல்களையும், பீரங்கித் தாக்குதல்களையும் நடத்தி எமது மக்களை படுகொலை செய்வதும், எமது மக்கள் காணாமல்போவதும், மக்கள் அகதிகளாக்கப்பட்டுக் கொண்டிருப்பதும் இவை போன்ற நடவடிக்கைகளும் ஒரு பிரகடனப்படுத்தாத யுத்தம் எமது தேசம் மீது கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளது என்பதையே சுட்டிக்காட்டுகின்றன. அதையும் நாம் அரசின் இந்தச் செயற்பாடுகளை பார்த்துக்கொண்டு பொறுமை காத்துக்கொண்டிருக்க முடியாது என்பது பற்றியும் உறுதியாக தெரிவித்துள்ளோம்.

*கே:-* நோர்வே என்ன பதிலைக் கூறுவதாகத் தெரிவித்தது?

*ப:-* நோர்வே தரப்பு இன்று அல்லது நாளை அரச தரப்பைச் சந்தித்து எங்களுடைய நிலைப்பாட்டை தெரியப்படுத்துவதாக கூறியுள்ளது.

*கே:-* நோர்வே தரப்பின் ஐந்து கேள்விகளுக்கான பதில் விடுதலைப் புலிகளினால் எந்த வகையில் அனுப்பப்பட்டுள்ளது?

*ப:-* விடுதலைப் புலிகள் நேற்றுமுன்தினம் நோர்வேக்கு பதிலை அனுப்பியுள்ளனர். எமது சமாதானச் செயலகம் ஊடாக அனுப்பியுள்ளோம். நோர்வேயின் கேள்விகளுக்கான ஒட்டுமொத்தமான பதிலைத் தெரிவித்துள்ளோம்.

அதாவது ஐரோப்பிய ஒன்றிய நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் இடம்பெறுவது தொடர்பான கால அவகாசத்தை கேட்டிருந்தார்கள். நாம் நீண்ட கால அவகாசத்தை கொடுப்பதிலுள்ள சங்கடமான நிலைமைகள் பற்றியும் யுத்த நிறுத்த உடன்படிக்கையை நூறு வீதம் கடைப்பிடிக்கின்ற தன்மையை அரசு காட்டுகின்ற போதுதான் யுத்த நிறுத்த உடன்பாடு மேற்கொண்டு செல்ல முடியும் என்பது பற்றிய விளக்கங்களையும் பதிலில் தெரிவித்துள்ளோம்.

*கே:-* நோர்வேக்கு அனுப்பிய பதில்கள் தொடர்பாக இன்று ஏதாவது ஆராயப்பட்டதா?

*ப:-* நாம் அனுப்பிய பதில்கள் தொடர்பான விளக்கங்களை எம்மிடம் கோரினார்கள் நாம் விளக்கமாக, விரிவாக தெரிவித்துள்ளோம்.

*கே:-* போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் பங்குபற்ற முடியாதெனத் தாங்கள் தெரிவித்தீர்கள் என்று பிரட்ஸ்கர் கூறியுள்ளாரே?

*ப:-* ஐரோப்பிய ஒன்றியம் தடை அறிவிப்பு, அவற்றின் நடு நிலைமையை - சமதரப்பு என்கின்ற கோட்பாட்டை - நிலைப்பாட்டை - பலவீனப்படுத்தியிருக்கின்றது.

யுத்த நிறுத்த உடன்பாடு கைச்சாத்திடப்படுகின்ற போதே எமது தலைமைப் பீடம் மிகவும் உறுதியான நிலைப்பாட்டை தெரிவித்திருந்தது. நோர்வே தரப்போடு உடன்பாடு கூட காணப்பட்டது. அதாவது, கண்காணிப்புப் பணியை மேற்கொள்ளுகின்ற நாடுகள் இரண்டு தரப்பையும் சமத்துவமாகவும் சமதரப்பாகவும் நடு நிலையோடும் ஏற்றுக்கொண்ட நாடுகளாக அமைய வேண்டும் என்பது இணக்கப்பாடு காணப்பட்ட விடயம்.

துரதிஷ்டவசமாக ஐரோப்பிய யூனியன் தடை அறிவிப்பை செய்ததென்பது அது யுத்த நிறுத்த உடன்பாட்டின் அமுலாக்கம், அதன் செயற்பாட்டுக்கு நெருக்குவாரத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

தற்போது ஏற்பட்டுள்ள நிலைமைக்கு ஏற்றவகையில் மாற்றங்களைக் கொண்டு வரவேண்டுமென்பது நாம் ஏற்கனவே கண்ட இணக்கப்பாடு. அதன் அடிப்படையில்தான் நாம் மீண்டும் வலியுறுத்தியிருக்கின்றோம்.



ஐரோப்பிய நாடுகள் இந்தப் பணியைச் செய்கின்ற போது - யுத்த நிறுத்தத்தை, உடன்படிக்கையை அமுல்படுத்துகின்ற, கண்காணிக்கின்ற கண்காணிப்பாளர்கள் நடுநிலைமை தவறிய ஒரு நிலைதான் இருக்கும். எங்கள் மக்களோ நாங்களோ அதை ஏற்றுக்கொள்ள முடியாது.

அப்படித் தொடர்ந்தால் யுத்த நிறுத்த உடன்பாட்டின் அமுலாக்கமும், கண்காணிப்பும் பலவீனமாகப்போகும். ஒரு பக்கச் சார்பாகவும் போகும்.

அந்த நிலையில் நோர்வேத் தரப்பிற்கு இதன் முக்கியத்துவங்களையும் நிலைமைகளையும் நாங்கள் வெளிப்படுத்திவிரைவாக மாற்றங்களை செய்து ஒழுங்குபடுத்த முடியுமாக இருந்தால் ஒழுங்கு படுத்தும்படியும் தெரிவித்திருக்கின்றோம்.

*கே:-* மாற்றம் செய்வது தொடர்பாக நோர்வே கொள்கையளவில் ஏற்றுக் கொண்டுள்ளதா?

*ப:-* ஏற்றுக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் நோர்வேக்கு உள்ளது. ஏனெனில் தடை அறிவிப்பை ஐரோப்பிய ஒன்றியம் செய்துவிட்டது. யுத்தநிறுத்த உடன்படிக்கையின் அடிப்படை இணக்கப்பாடே ஆனால் பலவீனப்பட்டிருக்கின்றது. அதை நோர்வே ஏற்றுக்கொள்வது [illegible].

*கே:-* அரசா[illegible] தாக்குதல்கள் தொடர்பாக ஹான்ஸ் பிரட்ஸ்கர் கருத்துக்கள் எதுவும் தெரிவித்தாரா?

*ப:-* வான் தாக்குதல், பீரங்கித் தாக்குதல்களை சிறிலங்காப் படைகள் தொடர்ந்து எமது பிரதேசங்கள் மீது நடத்திய வண்ணமே உள்ளன. இவை பாரதூரமான யுத்த நிறுத்த மீறல்கள். இது ஒரு யுத்தப் பிரகடனமே என்று உணர்கின்றோம் என்பதையும் நோர்வே தரப்பிற்கு சுட்டிக்காட்டி தொடர்ந்து தாக்குதல்கள் இடம் பெறுமாக இருந்தால் எம் மீது தொடுக்கப்பட்ட யுத்தமாக இதைக் கருதி நாமும் பதில் தாக்குதலை நடத்தவேண்டிவரும் என்பதை நோர்வே அனுசரணையாளர்களுக்குத் தெரிவித்துள்ளோம்.

*கே:-* தமிழ்நாட்டில் அரசியல்கட்சிகள் பல ஈழத்தமிழ் மக்களுக்காக குரல் எழுப்பி வருகின்றன. தற்போதைய நிலையில் இந்தியாவின் பங்களிப்பு தொடர்பாக தங்களின் கருத்தென்ன?

*ப:-* தமிழகத்திலே வாழ்கின்ற, தமது சகோதரத் தமிழ் மக்கள் அவர்களின் தாயகத்தில் படுகொலை செய்யப்படுகின்ற போது - இலங்கை அரசாங்கம் காடைத்தனமான, வெறித்தனமான இனப்படுகொலையை கட்டவிழ்த்து விட்டிருக்கின்ற நிலையில் - எமது மக்கள் உணர்ச்சிவசப்பட்ட நிலைக்கும், கொந்தளிப்பான நிலைக்கும் தள்ளப்பட்டிருக்கின்றார்கள்.

எங்களுடைய மக்கள் ஒன்றுபட்டு இலங்கை அரசாங்கத்தின் இனப்படுகொலைக்கு எதிராக தமது உணர்வுகளை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். அந்த வகையில் இந்திய அரசும் தமிழக மக்களின் உணர்வுகளை மதித்து இலங்கை அரசாங்கத்தின் இனப் படுகொலைகளுக்கும், யுத்த முன்னெடுப்புக்களுக்கும் தமது கண்டனத்தை தெரிவிக்கவேண்டும் இது இந்திய அரசினுடைய பொறுப்பாக இருக்கும் என நான் நினைக்கின்றேன்.

இந்திய அரசு, இலங்கை அரசின் அடாவடித்தனங்களைக் கண் டித்து, தமிழர்களுடைய உரிமைப் போராட்டத்தை ஏற்றுக கொண்டு, அங்கீகரித்து தார்மீக ஆதரவை வெளிப்படுத்த வேண்டுமென்பதுதான் தமிழ் மக்களுடைய விருப்பம். அதுதான் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு.

*கே:-* [illegible]ர் மங்கள சமரவீர இந்தி[illegible] பயணம் மேற்கொண்டுள்ளார். குழப்பங்களை ஏற்படுத்தும் நோக்கமாக இப்பயணம் அமையுமா?

*ப:-* அப்படியும் கருதலாம். சிங்களத் தலைவர்கள் எப்போதாவது இத்தகைய பயணத்தை மேற்கொள்ளுகின்றார்கள் என்றால் தமிழர்களுடைய அரசியல் இராணுவ முன்னெடுப்புக்கள், போராட்ட முன்னெடுப்புக்களை குழப்புவதுதான் நோக்கமாக இருக்கும்.

இது வழமையானது. வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர பயணம் மேற்கொண்டு இருக்கின்றார் என்றால் வழமையான செயற்பாடுகளை மேற்கொள்ளச் செல்கின்றார் என்று நாம் பார்க்கலாம்.

இப்பயணம் எவ்வளவுக்கு வெற்றியளிக்குமோ இல்லையோ என்பதை விட, சர்வதேச சமூகத்தை பிழையாக திசைதிருப்பிக் கொண்டு செல்வதற்கு - அரசினால் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள படுகொலைகளை மூடி மறைத்து தமிழர்களுடைய உரிமைப் போராட்டத்தை பலவீனப்படுத்த - இப் பயணங்களை சிங்களத் தலைவர்கள் பயன்படுத்துகின்றார்கள் என்று தான் தமிழர் தரப்பால் எண்ணப்படுகின்றது.

*கே:-* தமிழர் தாயகத்தில் சிறிலங்காப் படைகளின் ஆழ ஊடுருவும் அணியினரின் தாக்குதல்களை சிறிலங்கா அரசு மறுத்து வந்திருக்கின்றது. ஆழ ஊடுருவும் அணியினரின் தாக்குதல் முயற்சிகளைத் தமிழீழ விடுதலைப் புலிகளும், மக்களும் இணைந்து முறியடித்து வருகின்றனரே. அரசின் மறுப்பு தொடர்பாக இன்றைய சந்திப்பில் பேசப்பட்டதா?

*ப:-* இந் நிலைப்பாட்டை இன்றைய சந்திப்பில் சுட்டிக்காட்டினோம். அதாவது ஆழ ஊடுருவும் அணியின் செயற்பாடுகள், ஆயுதக்குழுக்களின் செயற்பாடுகள், இராணுவத்தின் படுகொலை முயற்சிகள், பேசாலை, அல்லைப்பிட்டி போன்ற பல இடங்களில் எமது மக்கள், குழந்தைகள் மிகக் கொடூரமாக கொல்லப்பட்ட நிகழ்வுகள் முழுக்க முழுக்கவே சிறிலங்கா படைத்தரப்பாலும் புலனாய்வுத்துறையாலும் இணைந்து செய்யப்பட்டவை என்பதற்கான ஆதாரங்கள் எமது மக்களிடம் உள்ளன.

இலங்கை அரசின் வெளிப்படையான மனித உரிமை மீறல் இவை என்பதைச் சுட்டிக்காட்டியிருகின்றோம்.

*கே:-* பிரகடனப்படுத்தப்படாத யுத்தம் ஒன்று இடம்பெற்றுக் கொண்டிருக்கும் நிலையில் இவ்வாறான சந்திப்புக்கள் பயன் தருமென கருதுகின்றீர்களா?

*ப:-* சர்வதேச உறவுகள் - தொடர்புகளை - நாம் துண்டிக்க முடியாது. அனுசரணையாளர்கள் என்ற வகையில் எங்களுடன் பேசுவார்கள். கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளுவார்கள். வழமையான இந்த நடவடிக்கை தொடரும். இதில் முன்னேற்றம், முன்னேற்றமின்மை என்பது தரப்புக்களைப் பொறுத்தது.

இலங்கை அரசு இதை மதிக்காமல் - ஏற்றுக்கொள்ளாமல் - யுத்த நிறுத்த உடன்பாட்டையும் அமைதி முயற்சிகளையும் சீர்குலைத்து, படுகொலைகளைத் தொடர்ந்து, ஒரு குழப்பகரமான சூழலை உருவாக்க வேண்டும் ஒரு யுத்தத்தை நிகழ்த்த வேண்டும்'' என்ற நிலையில் செயற்படும் போது இச்சந்திப்புக்கள் எந்தப் பயன்களையும் தரா. இலங்கை அரசின் போக்கிலேயே எல்லாம் உள்ளன - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

# அந்தகார இருட்டுக்குள் கறுப்புப் பூனையைத் தேடும் வேலை

இன மோதல்களினால் கோர அழிவுகளைச் சந்தித்துத் தடுமாறிக்கொண்டிருக்கும் இலங்கைத் தீவு, அந்தச் சிக்கல்களிலிருந்து விடுபட்டு, ஏனைய நாடுகளைப் போல அபிவிருத்திப் பாதையில் முன்னேற வேண்டுமானால் நாட்டின் தேசியப் பிரச்சினையான இனப்பிணக்குக்கு அமைதித் தீர்வு - சமாதான உடன்பாடு- விரைந்து, மேலும் கால தாமதமின்றி காணப்பட வேண்டும்.

அத்தகைய தீர்வைக் காணும் துணிச்சலும், தற்றுணிவும், தீர்க்க தரிசனமும், நியாய சிந்தனையும் கொண்ட அரசியல் தலைமை நாட்டில் இருந்தால்தான் அது சாத்தியமாகும்.

அது இல்லாமல் இருப்பதுதான் இலங்கைத் தீவு இன்று இப்படி அந்தரித்து - அல்லாடி - அவலப்பட்டு - அல்லற்பட்டு - நிற்பதற்கு அடிப்படைக் காரணமாகும்.

தென்னிலங்கையில் ஆட்சிப்பீடம் ஏறும் தலைவர்கள், இனப்பிணக்கில் சம்பந்தப்பட்ட பிரதான தரப்பான சிறுபான்மைத் தமிழர்களிடமிருந்து அந்நியப்பட்டு, விலகியவர்களாக நின்றுகொண்டு - அந்த சிறுபான்மை மக்களின் நீதி, நியாயத்துடன் கூடிய அபிலாஷைகளைப் புரிந்துகொள்ளவோ அல்லது கவனத்தில் எடுக்கவோ சிரத்தை கொள்ளாமல் - விடயங்களை அணுகி வருவதால் அமைதி எத்தனங்கள் சாத்தியமற்றனவாக - நடைமுறைப்படுத்த முடியாதனவாக - இறுதியில் தோல்வியில் முடிவடைகின்றன. இதுதான் நமது நாட்டின் அனுபவப் பாடம்; பட்டறிவு.

தற்போதைய அமைதி முயற்சிகளும் கூட - சமாதான எத்தனங்களும் கூட - இதற்கு விதி விலக்கானவை அல்ல என்பதுதான் உண்மை.

பல தரப்புக் கருத்துக்களையும் நடுநிலையோடு உள்வாங்கி, அவற்றைச் சீர்தூக்கிப் பார்த்து, நியாயமான முடிவை எடுக்கும் தற்றுணிவு நாட்டின் தலைவர்கள் என்று தம்மை அழைத்துக் கொள்பவர்களுக்கு இருக்க வேண்டும். அப்படி இல்லாமல் ஒரு தரப்பின் பிரதிநிதியாக - ஓர் இனத்தின் தலைவராக - மட்டும் கருதிக் கொள்வோர் முழு நாட்டினதும் அரசியல் தலைவர்களாக உயர்ந்து கொண்டாலும் - தம்மை உயர்த்திக் கொண்டாலும் - அவர்களினால் இந்த நாட்டின் தேசிய இனப்பிரச்சினைக்கு நீதி, நியாயமான தீர்வைக் கண்டுவிட முடியாது. - இந்தப் பாடத்தைத்தான் நாடு இன்னும், இவ்வளவு காலம் கடந்தும், தொடர்ந்து படித்துக் கொண்டிருக்கின்றது.

ஏழு மாதங்களுக்கு முன்னர் இலங்கையின் புதிய நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்ஷ பதவியேற்றபோது, அவர் குறித்து விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் ஒரு கருத்து வெளியிட்டிருந்தார்.

*"அதிபர் மஹிந்த ராஜபக்ஷ நடைமுறை அரசியலில் நம்பிக்கை கொண்ட யதார்த்தவாதி என்று கருதப்படுவதால், அவர் சமாதான வழிமுறையை எவ்வாறு கையாளப் போகின்றார் என்பதையும் தமிழ் மக்களுக்கு எவ்விதம் நீதி வழங்கப் போகின்றார் என்பதையும் முதலில் நாம் அறிந்துகொள்வது அவசியம். ஆகவே, ஜனாதிபதி ராஜபக்ஷவின் நகர்வுகளை, அவர் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை சிறிது காலம் பொறுத்திருந்து பார்ப்பதென முடிவு செய்துள்ளோம்."*

- என்று தலைவர் பிரபாகரன் கடந்த ஆண்டு நவம்பர் இறுதியில் தாம் விடுத்த மாவீரர் தினச் செய்தியில் தெரிவித்திருந்தார்.

அந்தச் சிறிது காலம் கடந்து விட்டது என்றே கொள்ள வேண்டும். தலைவர் பிரபாகரனின் பார்வையில் - தமிழர்களின் நோக்கில் - ஜனாதிபதி மஹிந்தரின் நகர்வுகள், நடவடிக்கைகள் எப்படி அமைந்திருக்கின்றன என்பதே இப்போதைய கேள்வியாகும்.

ஜனாதிபதி மஹிந்தர் பேரினவாதியா, இல்லையா? அமைதித் தீர்வில் நாட்டமுள்ளவரா, அற்றவரா? ஈழத் தமிழர்களுக்கு - அவர்களது தேசிய இனப்பிரச்சினைக்கு - நியாயத் தீர்வு வழங்கும் பற்றுறுதி உள்ளவரா, இல்லாதவரா? - என்ற கேள்விகளுக்கு அப்பால், நியாயத் தீர்வு ஒன்றை வழங்கக் கூடிய கட்டமைப்பிலும், சூழலிலும், நிலையிலும் அவர் இருக்கின்றாரா என்பதுதான் மிக முக்கிய கேள்வியாகவும், இல்லை என்பதே அதன் ஒரே பதிலாகவும் அமைவது இப்போது கவனிக்கப்பட வேண்டிய விடயமாகின்றது.

தமிழர் தாயகத்தில் - தமிழர் தேசத்தில் - நடக்கும் நிகழ்வுகளை, யதார்த்தங்களை, உண்மைகளை அறிந்தே கொள்ளமுடியாத ஒரு சூழ்நிலைச் சிறையில் அவர் சிக்குண்டுள்ளார் என்பதே இன்றைய யதார்த்தமாகும்.

ஒருபுறம் அரசியல் ரீதியாக பௌத்த - சிங்களப் பேரினவாதிகளின் பொறிக்குள் சிக்கியிருக்கும் ஜனாதிபதி மஹிந்தருக்கு மறுபுறம் அமைச்சர் டக்ளஸ், ஆனந்தசங்கரியார், முன்னாள் ஈ.பி.ஆர்.எல்.எவ். பிரமுகரும், அரச சமாதானச் செயலகப் பணிப்பாளர் நாயகமுமான கேதீஸ்வரன் போன்றவர்களைத் தவிர வேறு தமிழர்களோடு - தமிழர் தரப்போடு - தொடர்போ, தொடர்பாடல்களோ, ஒட்டுறவோ கிடையாது. அவரைச் சூழ வேறு தமிழர் வாடையே இல்லை.

தமிழர் தாயகத்தில் நடக்கும் அத்துமீறல்கள், அனர்த்தங்கள் உட்பட அங்குள்ள களயதார்த்தங்களை அறிந்துகொள்வதற்கு, தங்கள் வசதிக்கும், வகைக்கும், வாய்ப்புக்கும் ஏற்ப அவை குறித்து திசை திருப்பி, முலாம் பூசி, அவற்றைத் திரித்து அரசுப் படைகளும், பொலீஸாரும், புலனாய்வுப் பிரிவினரும் சமர்ப்பிக்கும் அறிக்கைகளில்தான் முற்றும் முழுதாகத் தங்கியிருக்கின்றார் நாட்டின் அதிபர்.

தென்னிலங்கை ஆங்கில, சிங்கள ஊடகங்களும் - இப்பத்தியில் சில தினங்களுக்கு முன்னர் நாம் சுட்டிக்காட்டியபடி - தமிழர்களுக்கு எதிரான பேரினவாதப் படைகளின் அடக்குமுறைகளை, அழிவு - நாச வேலைகளை, திட்டமிட்டு ஒரேயடியாக மூடிமறைத்துக் குழிதோண்டிப் புதைக்கும் போக்கைக் கடைப்பிடிக்கின்ற சூழ்நிலையில், அவை மூலம் அந்த விடயங்களை அறிந்துகொள்ளும் வாய்ப்பையும் நாட்டின் தலைவர் இழந்து விட்டுள்ளார்.

தமிழர் தாயகத்தின் தெரிவுசெய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஜனாதிபதியுடன் தொடர்பு வைப்பதை வெறுத்து, ஒதுக்கி, தவிர்த்துக்கொண்டு விட்டதால் தமிழர் தரப்புக் குறித்தோ, தமிழர் தாயகத்தின் உண்மை நிலைமை குறித்தோ ஏதும் அறியாத இருட்டுக்குள் சிக்குண்டு கிடந்தபடி தமது அரசியல், இராணுவ தந்திரோபாய நகர்வுகளை முன்னெடுக்க முயல்கின்றார் மஹிந்தர்.

தமிழர் தாயகத்தில் அரசுப் படைகளும் அவற்றின் கையாட்களான துணைப்படைகளும் புரியும் அட்டூழியங்கள், அனர்த்தங்கள், அத்துமீறல்கள், அராஜகங்கள் போன்றவற்றை மூடிமறைத்து, அரச முகவர் நிறுவனங்கள் சமர்ப்பிக்கும் நாளாந்த அறிக்கைகளை - கயிறுகளை - முழுமையாக நம்பும் - விழுங்கும் - நிலையில் இருக்கும் ஜனாதிபதியினால் தமிழர்களின் உண்மையான ஆதங்கங்களை, அவலங்களை, அனுபவங்களை, அந்தரங்கங்களைப் புரிந்துகொள்ளவே முடியாது என்பதுதான் நிஜம்.

இனப் பிணக்கின் உண்மைச் சொரூபத்தைப் புரிந்துகொள்வதற்கான வெளிச்சத்துக்கு வராமல், யதார்த்தம் விளங்காத அந்தகாரத்துக்குள் தாம் நின்று கொண்டு, அமைதித் தீர்வைக் காணத் தாம் முயற்சிக்கிறார் என ஜனாதிபதி மஹிந்தர் கூறுவது இருட்டில் கறுப்புப் பூனையைத் தேடும் வேலைக்கு ஒப்பானதாகும்.

# கணிசமானவர்களிடம் காணி உறுதி இல்லை; வீடமைப்புத் திட்டத்தை முன்னெடுப்பது சிக்கல்

## யாழ்.செயலக அதிகாரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்22

குடாநாட்டில் கணிசமானோரிடம் காணி உறுதிகள் இல்லாதகாரணத்தால் உலக வங்கியின் வீடமைப்புத் திட்டத்தை முன்னெடுப்பதில் தடங்கல் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

உலக வங்கியின் வீடமைப்புத் திட்டத்தை முன்னெடுப்பதற்கு கணிசமான மக்களிடம் காணி உறுதிகள் இல்லையென யாழ்.செயலகஅதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் யுத்தப் பாதிப்புகளால் வீடுகளை இழந்த மக்களுக்கு இவ்வீடமைப்புவசதி செய்துகொடுக்கப்படவுள்ளது. உலக வங்கியின் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் மாவட்டம் தழுவிய வகையில் பயனாளிகள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

4 ஆயிரம் பேருக்கு நன்மையளிக்கும் இச் செயற்றிட்டத்திற்கான பயனாளிகள் ஒவ்வொரு கிராமசேவைகள் பிரிவுகளிலிருந்தும் தெரிவு செய்யப்படுவர். இம்முன்னோடியான செயற்றிட்டத்தை யாழ்.செயலகத்தின் வீடமைப்புப் புனர்வாழ்வுப் பணியகத்தினர் மேற்கொள்ளவுள்ளனர். உறுதிக் காணிகள் உள்ள மக்களுக்கு மட்டுமே இவ் வீடமைப்பு வசதி வழங்கப்படவுள்ளது.

இத் திட்டத்தை சீராக அமுல்படுத்துவதற்கு கணிசமான மக்களிடம் உறுதிக் காணிகள் இல்லாதது பெரும் தடையாக அமைவதாக யாழ்.செயலக அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

(ரி)

# மயானங்களுக்கு சுற்றுமதில் அமைக்க உள்ளூராட்சிகளுக்கு அரச அதிபர் பணிப்பு

உள்ளூராட்சி சபைகளின் கீழ் உள்ள மயானங்களுக்கு சுற்றுமதில்அமைத்து பாதுகாக்வேண்டும் என்று யாழ். அரச அதிபர் கே.கணேஸ் உள்ளூராட்சி அமைப்புகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இது குறித்து அரச அதிபர் மேலும் தெரிவிக்கையில்:-

பிரதேச சபைகள் மற்றும் நகர சபைகளின் பராமரிப்பிலுள்ள மயானங்களின் நில எல்லைகளை வரையறுக்க வேண்டும். வரவு - செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்து மயானங்களுக்குச் சுற்று மதில் அமைக்கப்படவேண்டும் .

மேலும் சபையின் கீழ் வரும் சகல மயானங்களையும் சிரமதான அடிப்படையில் துப்புரவு செய்யவேண்டும்.

மேற்படி விடங்களை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கண்காணித்து முன்னேற்ற நடவடிக்கைகளை அறிக்கை செய்ய வேண்டும். - இவ்வாறு அரச அதிபர் தெரிவித்தார். (185)

# உலக்கை அடிக்கு கடூழியச் சிறை

யாழ்ப்பாணம்,ஜூன்22

உலக்கையால் அடித்து ஒருவருக்குக் காயம் விளைவித்தார் என்ற குற்றஞ் சாட்டப்பட்ட நபருக்கு யாழ்.மேல் நீதிமன்றம் ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட இரு வருட கடூழியச் சிறைத் தண்டனை விதித்தது.

2004ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஏழாலையில் தனபாலசிங்கம் சதீஸ்குமார் என்பவருக்கு உலக்கையால் அடித்துக் காயம் விளைவித்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் அதே இடத்தைச் சேர்ந்த ஒருவருக்கு எதிராக சட்டமா அதிபரினால் யாழ்.மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. இந்த வழக்கு கடந்த செவ்வாய்க்கிழமை மேல் நீதிமன்ற நீதிபதி சொர்ணலிங்கம் தியாகேந்திரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அப்போது எதிரி குறித்த குற்றச்சாட்டுகளுக்கு தான் குற்றவாளி எனத் தெரிவித்தார்.

இதனையடுத்து நீதிபதி எதிரிக்கு 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 2வருட கடூழியச் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார். அத்துடன் அபராதத் தொகையாக 500 ரூபா செலுத்த வேண்டும் என்றும் - அபராதத் தொகை செலுத்தத் தவறின் 3 மாத சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் - நீதிபதி தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார்.

முறைப்பாட்டாளரான சதீஸ்குமாருக்கு 25 ஆயிரம் ரூபா நஷ்டஈடாக எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 22 ஆம் திகதிக்கு முன் வழங்குமாறும் -

தவறின் 2 வருட சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் -

அதுவரை எதிரி 25 ஆயிரம் ரூபா ஆட்பிணையில் செல்ல வேண்டும் என்றும் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மகளின் விசா விண்ணப்பம் பரிசீலனை: நளினி, முருகன் உண்ணாவிரதம் முடிவு

சென்னை,ஜூன்22

தங்களுடைய மகளுக்கு இந்தியாவில் கல்விகற்க விசா வழங்கக்கோரி வேலூர் சிறையில் உண்ணாவிரதம் மேற்கொண்ட ராஜீவ் காந்தி கொலை குற்றவாளிகளான நளினியும் அவரது கணவர் முருகனும் தங்களுடைய போராட்டத்தைக் கைவிட்டனர்.

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் குற்றம் நிரூபிக்கப்பட்டு வேலூர் சிறையில் நளினியும் அவரது கணவர் முருகனும் தண்டனை அனுபவித்து வருகிறார்கள். நளினியின் மரண தண்டனை ரத்து செய்யப்பட்டுள்ள நிலையில் அவரது கணவர் முருகன் ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்ட தனது கருணை மனு மீதான முடிவை எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்.

இந்த நிலையில், தற்போது இலங்கையில் பத்தாம் வகுப்பைமுடித்துள்ள அவர்களின் மகள் அரித்ரா தமிழ் நாட்டில் மேல் படிப்பை தொடர விசா வழங்கக் கோரி 6 தினங்களாக வேலூர் சிறையில் நளினியும், முருகனும் உண்ணா விரதம் மேற்கொண்டனர்.

அரித்ராவுக்கு விசா வழங்குவது குறித்து சாதகமான முறையில் பரிசீலிக்கப்பட்டு வருவதாகக் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்திடம் இருந்து தகவல் வந்ததையடுத்து நளினியும், முருகனும் தங்களுடைய உண்ணாவிரதத்தை நேற்றுமுன்தினம் இரவு கைவிட்டனர் என்று அவர்களின் சட்டத்தரணி வி.இளங்கோவன் தெரிவித்தார்.

அரித்ரா வேலூர் சிறையில் பிறந்தார். இலங்கையில் வசிக்கும் முருகனின் குடும்பத்தினரால் அவர் வளர்க்கப்பட்டு வருகிறார். இப்போது 15 வயதான அவர் கடந்த ஜனவரியில் தமிழகத்திற்கு வந்து வேலூர் சிறையில் உள்ள தனது பெற்றோரை சந்தித்தார்.

# தொல்பொருள் நூலகப் புத்தகங்களை அமைச்சு அகற்றியமை சட்டவிரோதம்

## சுதந்திர ஊடக இயக்கம் கண்டனம்

கொழும்பு,ஜூன்22

தேசிய தொல்பொருள் காட்சியக நூலகத்தில் பாதுகாக்கப்பட்டுவந்த புத்தகங்கள், அரசின் கலாசார விழாவை யொட்டிய ஆய்வுக்காக சட்ட விரோதமாக அங்கிருந்து வெளியே எடுத்துச் செல்லப்பட்டுள்ளன என்று சுதந்திர ஊடக இயக்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

இது குறித்து இயக்கத்தின் ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

கடந்த ஆண்டு ஜனவரி முதல் செப்ரெம்பர் வரையான காலப்பகுதியில் நாட்டில் வெளியிடப்பட்ட சுமார் 3 ஆயிரத்து 500 நூல்கள் அமைச்சின் தேவைக்காக மேற்படி நூலகத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

அச்சேற்றுவோர் மற்றும் வெளியிடுவோர் தொடர்பான சட்ட விதிகளுக்கு அமைவாக, தேசிய தொல்பொருள் காட்சியகத்தின் நூலகத்திற்கு நூல்கள் வழங்கப்படுகின்றன. எதிர்காலச் சந்ததியின் தேவை கருதி இவை பாதுகாக்கப்படவே இவை வழங்கப்படுவதை சட்ட விதிகள் வலியுறுத்துகின்றன. எனவே அந்த நோக்கத்திற்குப் புறம்பாகவும் சட்டவிதிகளுக்கு முரணாகவும் இவை இங்கிருந்து வெளியே எடுத்துச் செல்லபட்டுள்ளன. எவ்விதக் காரணங்களை முன்னிட்டும் இந்த நூலகத்திற்கு வழங்கப்படும் எந்தவொரு நூலும் இங்கிருந்து வெளியே எடுத்துச் செல்லப்படுவதற்கு நூலக சட்ட விதிகள் அனுமதிக்கவில்லை.

அரச கலாசார விழா பரிசளிப்பு தொடர்பான தேவைகளை வேறு விதத்தால் பூர்த்திசெய்வது கலாசார அமைச்சின் பொறுப்பாகும். அந்த அமைச்சின் இச் செயல் தேசிய உரிமைக்கு ஊறு விளைவிப்பதாகும். தேசிய தொல்பொருள் நூலகத்திலிருந்து புத்தகங்களை அப்புறப்படுத்துவது பொதுமக்களின் அடிப்படை உரிமையான தகவல்களைச் சுதந்திரமாகப் பெறுவதற்கான உரிமையை இல்லாதொழிப்பதாகும். இதை எந்த விதத்திலும் நியாயப்படுத்தவோ அனுமதிக்கவோ முடியாது.

கலாசார அமைச்சின் இச் செயற்பாட்டிற்கு சுதற்திர ஊடக இயக்கம் கண்டனம் தெரிவிக்கின்றது. நூலகத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டுள்ள நூல்களை மீளவும்தேசிய நூலகத்திடம் கையளிக்குமாறு அமைச்சிடம் கோருகின்றோம் என்றுள்ளது. (206)

### உதயவாக்கு.

தவறுகளே செய்யாத ஒரே மனிதன் - தன் வாழ்வில் புதிதாக எந்த முயற்சியுமே செய்யாதவனாகத் தான் இருப்பான்

- ஆல்பர்ட் ஐன்டீன்

### நாளை

ஆனி - 09
வெள்ளிக்கிழமை
23.06.2006
திதி : திரயோதசி
முன்னிரவு : 11.14
நட்சத்திரம் : கார்த்திகை
பிற்பகல் : 04.07
பிரதோஷ விரதம்
சுபநேரம் : 05.54 - 7.24
ராகுகாலம் : 10.24 - 11.54

# நூல் வெளியீட்டு விழா

வட்டக்கச்சி,ஜூன்22

தமிழீழ விடுதலைப் புலிகளின் மருத்துவப் பிரிவினரின் ''மருத்துவ மடியில்'' எனும் நூல் வெளியீட்டு நிகழ்வு இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தாயக விடுதலைப் போரின் போது களத்தில் விழுப்புண் அடைந்த வீரர்களின் உள்ளத்து உணர்வுகளை தம் உயிர் பிரியும் இறுதி நேரத்தில் மருத்துவப் பிரிவு உறவுகளின் தருணங்களில் சொல்லிவிட்டுச் சென்ற உண்மைகளின் பதிவுகளை இந்நூல் வெளிப்படுவதாக நூல் வெளியீட்டு நிகழ்வு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (204,405)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மோசமடையும் இலங்கை விவகாரத்தில் இந்தியா தொடர்ந்து விலகி நிற்க முடியாது

## தினமணி நாளேடு ஆலோசனை

மோசமடைந்துவரும் இலங்கை இனப் பிரச்சினை விவகாரத்தில் இந்தியா தொடர்ந்தும் விலகி நிற்க முடியாது.

இவ்வாறு ஆலோசனை தெரிவித்துள்ளது இந்தியாவிலிருந்து வெளிவரும் தினமணி நாளேடு.

'விடிவு பிறக்குமா' என்ற தலைப்பில் தினமணி நேற்று வாராந்த ஆசிரியர் தலையங்கத்தில் மேலும் தெரிவித்ததாவது

நோர்வே அரசின் முயற்சியால் இலங்கை அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே நடைபெற்று வந்த சமரச முயற்சிகளில் முட்டுக்கட்டை ஏற்பட்டு பேச்சு தொடரமுடியாமல் போனதை அடுத்து இலங்கையில் பதற்ற [illegible]நிலை ஏற்பட்டுள்ளது. இலங்கையில் கண்ணி வெடித் [illegible]க்குதலில் பலர் பலி... தமிழர்கள் வசிக்கும் பகுதிகளில் இலங்கை இராணுவத்தினர் குண்டு வீசித் தாக்குதல்... தேவாலயத்தில் புகு[illegible] துப்பாக்கிச் சூடு... என்று அடுத்தடுத்து நிகழ்ந்துவரும் சம்பவங்கள் இலங்கையில் கடந்த காலத்தில் ஏற்பட்ட போர்ச்சூழலை மீண்டும் கொண்டு வந்துவிடுமோ என்ற கவலையை ஏற்படுத்தியுள்ளது.

இதற்கிடையே [illegible]ங்கையின் வடக்கு - கிழக்குப் பகுதியில் உள்ள தமி[illegible]ர் தங்களது உயிருக்குப் பயந்து படகுகள் மூலம் தமிழகத்துக்கு அகதிகளாக வருவது தொடர்கிறது. இலங்கையில் அமைதிக்கு வழிகாண இந்திய அரசு ஆவன செய்ய வேண்டும் என்று தி.மு.க. கூட்டணிக் கட்சிகளின் கூட்டத்தில், தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இலங்கையில் அமைதிநிலை திரும்ப இந்திய அரசு உரிய முயற்சிகளை உ[illegible]னடியாக மேற்கொள்ள வேண்டும் என்று அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா வேண்டுகோள் விடுத்துள்ளார். இலங்கைத் தமிழர்களின் தற்போதைய உண்மை நிலையை அறிய இந்தியாவிலிருந்து அனைத்துக் கட்சி எம்.பிக்கள் குழுவை அனுப்ப வேண்டும் என்று ம.தி.மு.க.பொதுச் செயலாளர் வைகோ வலியுறுத்தியுள்ளார். தி.மு.க. மற்றும் தோழமைக் கட்சிகளின் கோரிக்கையை அடுத்து, இப்பிரச்சினை குறித்து கலந்து பேசுவதற்காக டில்லியிலிருந்து பிரதிநிதியை அனுப்புவதாக பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார்.

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் இந்தியா தலையிட்டதும் இந்திய அமைதிப்படை இலங்கைக்குச் சென்று திரும்பியதும் கடந்த கால நிகழ்வுகள். ராஜீவ் கொலைச் சம்பவத்துக்குப் பிறகு இலங்கைப் பிரச்சினையிலிருந்து விலகியே நிற்கும் இந்திய அரசு தற்போதைய நிலையில் என்ன நடவடிக்கையை மேற்கொள்ளப் போகிறது என்பது மிகப் பெரிய கேள்விக்குறி.

இலங்கை இனப்பிரச்சினையை அண்டை நாட்டுப் பிரச்சினையாகக் கருதி நாம் ஒதுங்கிவிட முடியாது. ஏனெனில், இலங்கையிலிருந்து தமிழகத்துக்கு அகதிகளாகத் தஞ்சம் வருபவர்கள் தமிழர்கள். அவர்கள் எண்ணிக்கை உயரும்பட்சத்தில் இங்கு பிரச்சினைகள் மேலும் தீவிரமாகும். அகதிகள் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளவர்களின் நிலைமை குறித்து இரு தமிழக அமைச்சர்கள் நேரடியாகப் பார்வையிட்டு வந்துள்ளனர். அவர்களது அறிக்கையின் அடிப்படையில் அகதிகளின் நல்வாழ்வுக்காக உரிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளவேண்டும். இலங்கைப் பிரச்சினை தலைதூக்கும்போதெல்லாம், கடலில் மீன் பிடிக்கச் செல்லும் இந்திய மீனவர்கள் அந் நாட்டுக் கடற்படையால் தாக்கப்படுகின்ற நிலைமைக்கு முற்றுப்புள்ளி வைக்க மத்திய அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

இதற்கிடையில் விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையே தொடர்ந்து போர்நிறுத்த ஒப்பந்தத்தை செயல்படுத்தச் செய்யவேண்டும். மீண்டும் அமைதிப் பேச்சைத் தொடரச் செய்வதற்கு இரு தரப்பினரையும் இணங்கச் செய்யும் முயற்சியில் ஈடுபட வேண்டும். பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் சர்வதேச உதவிகள் கிடைக்கச் செய்யவேண்டியதும் முக்கியம். போர் மூலம் எந்தத் தீர்வையும் பெற முடியாது என்பதைக் கடந்த கால வரலாறுகள் காட்டுகின்றன. முறிந்துபோன பேச்சை மீண்டும் தொடருவதன் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும். இந்த வகையில் பேச்சுகளை நடத்த வருமாறு விடுதலைப் புலிகளுக்கு இலங்கை அரசு விடுத்துள்ள அழைப்பு சற்று நம்பிக்கையூட்டுவதாகவுள்ளது -என்றுள்ளது.

## 31 ஆம் நாள் நினைவலைகள்

தோற்றம் 20 - 09 - 1925



மறைவு 23 - 05 - 2006

### கந்தர் சின்னத்துரை ஜெயப்பிரகாசம்

(முன்னாள் உப அதிபர்)

இன்று [22.06.2006] வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை, பஜனை நிகழ்வுகளிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

ஜோதி (மகன்).

வண்ணார்பண்ணை மேற்கு,
ஆனைக்கோட்டை. (51476)(21.15.45)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

துலாம்

789 நீலம்

20-06-2006

செல்லுபடியாகும் தொடர் இல. 4336610 - 4351071

வெற்றி இலக்கங்கள் 06 34 45 53

ஜக்பொட் பரிசு ரூபா 10,00,000/- வெல்லப்படவில்லை

மொத்தப் பரிசுத் தொகை ரூபா 68,84,660/-
தொடர் இல. 5233504 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கெட்டுக்கள் 2006 ஜூன் மாதம் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்தப் பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 3,08,207 | 10/- | 30,82,070/- |
| 2 இலக்கங்கள் | 28,238 | 20/- | 5,64,760/- |
| 1 இல+லக்கினம் | 28,021 | 30/- | 8,40,630/- |
| 2 இல+லக்கினம் | 2,597 | 100/- | 2,59,700/- |
| 3 இலக்கங்கள் | 758 | 500/- | 3,79,000/- |
| 3 இல+லக்கினம் | 67 | 5,000/- | 3,35,000/- |
| 4 இலக்கங்கள் | 04 | 1,00,000/- | 4,00,000/- |
| 4 இல+லக்கினம் | - | 10,00,000/- | - |
| மொத்தம் | | | 58,61,160/- |
| முச்சக்கர வண்டிகள் | 5 | 2,04,700/- | 10,23,500/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 3,67,897 | | 68,84,660/- |

இந்த வெள்ளிக்கிழமை
சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா 16,88,200/-

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கெட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 05 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கேகாலை | 4342065-1-06 |
| புத்தளம் | 4349002-1-83 |
| கம்பஹா | 4347129-0-88 |
| காலி | 4342618-2-31 |
| அம்பாறை | 4340413-0-20 |

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி
கொள்ளுப்பிட்டி, கொழும்பு-03


## மிதிவெடி அகற்றிய பகுதி பிரதேச செயலரிடம் கையளிப்பு

தொல்புரம் பகுதியில் டெனிஷ் மிதிவெடி அகற்றும் நிறுவனத்தால் மிதிவெடி அகற்றப்பட்ட பிரதேசங்கள் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கையளிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை - தெல்லிப்பளை பிரதேச சபைக்குட்பட்ட ஜே/229 கிராம சேவையாளர் பிரிவில் உள்ள 9ஆயிரத்து 132 சதுர மீற்றர் பரப்பளவில் 203 மிதிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன. மிதிவெடி அகற்றப்பட்ட பிரதேசம் மிதிவெடிச் செயற்பாட்டு அலுவலகத்தினால் தெல்லிப்பழை பிரதேச செயலரிடம் கையளிக்கப்பட்டது. (204-190)

## கிராம அலுவலர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம் நல்லூர், கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவுகளை சேர்ந்த கிராம அலுவலர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் முதலாம் திகதி முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் நடைபெறவுள்ளது. யாழ். நீதிபதி இ.த.விக்ன ராஜா தலைமையில் நடைபெறவுள்ள இக்கலந்துரையாடலில் மேற்குறிப்பிட்ட பிரதேச செயலகங்களைச் சேர்ந்த கிராம அலுவலர்களை கலந்துகொள்ளுமாறு நீதிவான் நீதிமன்றப் பதிவாளர் செல்வி க.மீரா கேட்டுள்ளார். இக்கலந்துரையாடல் நாளை மறுதினம் சனிக்கிழமை நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. எனினும் தவிர்க்கமுடியாத காரணத்தால் திகதி மாற்றப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (204)


School Of Information Technology
கணனி பயிற்சி நிலையம்
அளவெட்டி மேற்கு, அளவெட்டி

- Diploma in MS Office
- Diploma in Desk Top Publishing
- Diploma in Hard ware Technology
- Diploma in Web - Design
- Diploma in Video Mixing
- Children Programming

A/L பரீட்சை எடுத்த மாணவர்களுக்கும் ஏனையவர்களுக்குமான

புதிய பிரிவுகள் ஆரம்பம் 25/06/06 02/07/06

(அருணோதயாக் கல்லூரிக்கு அருகாமையில்)




## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

### வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு

### செய்முறைப் பரீட்சை [சங்கீதம்/நடனம்]

1. நுண்கலை மாணி 1ஆம், 2ஆம், 3ஆம், 4ஆம் வருடத்தேர்வு – 2001
2. கலை முதற்தேர்வு – 2002 & 2003
3. பொதுக் கலைமாணித் தேர்வு பகுதி– I – 2002
4. பொதுக்கலைமாணித் தேர்வு பகுதி II – 2002

மேற்படி கற்கைநெறிகளில் சங்கீதம் மற்றும் நடன அலகுகளுக்கான செய்முறைப் பரீட்சைகள் 03.07.2006 (திங்கட்கிழமை) தொடக்கம் இராமநாதன் நுண்கலைக் கழகம் மருதனார்மடத்தில் நடத்தவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பரீட்சார்த்திகள் தங்களுடைய பரீட்சைக்கான அனுமதி அட்டையுடன் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுவதுடன் செய்முறைப் பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகளை வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகுடன் தொடர்புகொண்டு அறிந்து கொள்ளலாம்

*முக்கிய குறிப்பு:* செய்முறைப் பரீட்சை முடிவடைந்ததும் பரீட்சார்த்திகள் தங்கள் பரீட்சை அனுமதி அட்டைகளை வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் தவறாது ஒப்படைக்கும்படி கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

*மேலதிக விவரங்களுக்கு 021 - 2223612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.*

*21.06.2006* (சி-49778)(21.15.45) பதிவாளர்

# மரண அறிவித்தல்கள்

## திருமதி செல்லம்மா தாமோதரம்பிள்ளை

புங்கடி, புலோலி தெற்கு, புலோலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா தாமோதரம்பிள்ளை அவர்கள் நேற்று (21.06.2006) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி தாமோதரம்பிள்ளையின் (முன்னாள் கிராமத் தலைமைக்காரன், புலோலி) மனைவியும் திருமதி சி.சிதம்பரநாதன், திருமதி கௌ.இராமநாதன் (ஆசிரியை) அவர்களின் அன்புத் தாயும், சு.சிதம்பரநாதன் (ஓய்வுபெற்ற வருமானவரி உத்தியோகத்தர்), பொ. இராமநாதன் (ஓய்வுபெற்ற உதவிப் பணிப்பாளர் கா.உ.சு.திணைக்களம்) ஆகியோரின் அன்பு மாமியும் பராபரன் (லண்டன்), பாஸ்கரன் (H.N.B கொழும்பு), பகீரதன் (வீரகேசரி - வவுனியா), பிரபாகரன் (கா.உ.சு.திணைக்களம், கரவெட்டி), இராகவன் (மருத்துவபீடம், யாழ்ப்பாணம்) கோகுலன் (மருத்துபீடம், ரஷ்யா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சாமினி, திவ்யதர்சா, திவ்யசாளினி, கஜலக்ஷி ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.06.2006) வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக புலோலி கருகம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புங்கடி, புலோலி தெற்கு,
புலோலி. (51471)(21.15.45)

தகவல்:
பொ.இராமநாதன்.(மருமகன்)

## அருணாசலம் தம்பிப்பிள்ளை (J.P)

**(ஓய்வுபெற்ற அதிபர், மாதகல் சென்.ஜோசப் மகா வித்தியாலயம்)**



சித்திரமேழி, இளவாலையைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட அருணாசலம் தம்பிப்பிள்ளை 21-06-2006 புதன்கிழமை காலமானார்.

அன்னார் அமரர்கள் அருணாசலம் - சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகனும் அமரர்கள் வீரசிங்கம் - சுந்தரம் தம்பதியரின் மருமகனும் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் லலிதா (ஆசிரியை யா/இளவாலை கன்னியர்மடம் ம.வி.) தவேந்திராதேவி (ஆசிரியை யா/இளவாலை புனித கென்றியரசர் கல்லூரி), பேரானந்தராஜா (வைத்திய கலாநிதி யாழ். போதனா வைத்தியசாலை), கிருபானந்தராணி(வைத்திய அதிகாரி யாழ்.போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் பிரபாகரன் (புவி ஸ்ரூடியோ), சிவகுருநாதன் (ஆசிரியர் யா/இளவாலை புனித கென்றியரசர் கல்லூரி), யமுனாமலர், ஸ்கந்தராஜா (புள்ளிவிவர உத்தியோகத்தர் யா/கச்சேரி) ஆகியோரின் மாமனும் பேரம்பலம் (இளைப்பாறிய அதிபர், யாழ்.இளவாலை மெய்கண்டான் ம.வி), நாகமுத்து (கண்மணி) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் தவமணி, கந்தசாமி, காலஞ்சென்ற கந்தையா, தம்பையா, மாருதப்புரவீகவல்லி ஆகியோரின் மைத்துனரும் மோகனா, குகவதனா, புஸ்பனா ஆகியோரது பெரிய தந்தையும் சிவானந்தராசா, கிருபானந்தராசா, அற்புதமலர் சற்குணராசா, அருந்தவராசா ஆகியோரின் மாமனும் புவிகரன், மகீபன், ஜோதிஜி, சுபந்தன், டினேசன், யுதிஸ்திரன், தேவந்தி, கோகுகி ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22-06-2006) வியாழக்கிழமை பகல் 10 மணியளவில் அவரின் இளவாலை இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முள்ளானை இளவாலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என அறியத் தருகிறோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'அருளகம்'
பிரதான வீதி,
இளவாலை. (51482)

தகவல்:
த.பேரானந்தராஜா (மகன்).
(வைத்தியகலாநிதி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

FIFA WORLD CUP GERMANY 2006

# 18 ஆவது உலகக் கிண்ண காற்பந்தாட்டப் போட்டி

## ஜேர்மனியிடம் வீழ்ந்தது ஈக்குவடோர் அசத்தினார் மிரோஸ்லவ் குளோஸ்


ஜேர்மனியின் நட்சத்திர வீரர் மிரோஸ்லவ் குளோஸ் இரண்டு கோல் அடித்து அசத்த, ஈக்குவடோருக்கு எதிரான மூன்றாவது லீக் ஆட்டத்தில் ஜேர்மனி 3-0 என்ற கோல் கணக்கில் அபார வெற்றிபெற்றது.

இதன் மூலம் லீக் சுற்றில் தொடர்ந்து மூன்றாவது வெற்றியைப் பெற்ற ஜேர்மனி 'ஏ' பிரிவில் முதலிடத்தைப் பெற்றது.

நேற்றுமுன்தினம் 'ஏ' பிரிவைச் சேர்ந்த ஜேர்மனி, ஈக்குவடோர் அணிகள் மோதின. முதல் இரண்டு லீக் ஆட்டங்களிலும் வெற்றிபெற்ற இரு அணிகளும் ஏற்கனவே இரண்டாவது சுற்றில் நுழைந்துவிட்டன.

ஆட்டம் தொடங்கிய 3ஆவது நிமிடத்தில் ஜேர்மனிக்கு மூலை உதை வாய்ப்புக் கிடைத்தது. இதில் ஜேர்மனி வீரர் பாஸ்டியன் சுவீன்ஸ்டைகரிடம் பந்துப் பரிமாற்றத்தைப் பெற்ற மிரோஸ்லாவ் குளோஸ் ஆட்டத்தின் முதல் கோலை 4ஆவது நிமிடத்தில் அற்புதமாக அடித்தார். 5 ஆவது நிமிடத்தில் கிடைத்த தடையற்ற உதை வாய்ப்பை நட்சத்திர வீரர் மைக்கல் பலாக் நழுவவிட்டார். 44ஆவது நிமிடத்தில் குளோஸிற்கு அடித்தது மற்றொரு அதிர்ஷ்டம். மைக்கல் பலாக் துல்லியமாக கொடுத்த பந்துப் பரிமாற்றத்தைப் பெற்றுக்கொண்ட குளோஸ் ஆட்டத்தின் இரண்டாவது கோலை அடித்து அசத்தினார். இத்தொடரில் இதுவரை நான்கு கோல்கள் அடித்து அசத்தியுள்ளார் குளோஸ். முதல் பாதியில் ஜேர்மனி 2-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

இரண்டாவது பாதியில் ஈக்குவடோர் வீரர்கள் முரட்டுத்தனமாக ஆடத் தொடங்கினர். கோல் அடிக்க கடுமையாகப் போராடிய அவர்களின் பிடியில் மைக்கல் பலாக் சிக்கினார். ஆட்டத்தின் 51ஆவது நிமிடத்தில் லூயிஸ் அன்டோனியாவால் பலமாக தாக்கப்பட்ட பலாக் நிலை குலைந்தார். இதன் காரணமாக லூயிஸிற்கு மஞ்சள் அட்டை காண்பிக்கப்பட்டது. முரட்டுத்தனமாக ஆடிய ஈக்குவடோருக்கு 57ஆவது நிமிடத்தில் பதிலடி கொடுத்தார் போடோல்ஸ்கி. ஸ்னைடரிடம் பந்துப் பரிமாற்றத்தைப் பெற்ற போடோல்ஸ்கி எளிதாகக் கோல் ஒன்றை அடித்தார்.



இரண்டு கோல் அடித்து அசத்திய குளோஸிற்குப் பதிலாக 65ஆவது நிமிடத்தில் நியூவில் களமிறக்கப்பட்டார். ஆட்டத்தின் 72 மற்றும் 74ஆவது நிமிடங்களில் கிடைத்த இரண்டு தடையற்ற உதை வாய்ப்புக்களை ஈக்குவடோர் நழுவவிட்டது.

ஈக்குவடோரின் இதே நிலையில் நீடிக்க ஜேர்மனி 3-0 என்ற கோல் கணக்கில் அபார வெற்றிபெற்றது. இவ் வெற்றியின் மூலம் 'ஏ' பிரிவில் ஜேர்மனி 9 புள்ளிகளுடன் முதல் இடத்தில் உள்ளது. ஈக்குவடோர் 6 புள்ளிகள் பெற்று இரண்டாவது இடத்தைப் பெற்றது.

## கையும் களவுமாகப் பிடிபட்ட திருடன்

உலகக் கிண்ணக் கால்பந்தாட்டப் போட்டியில் ஜேர்மனியின் மியூனிச் மைதானத்தில் நடந்த போட்டி ஒன்றைப் பார்ப்பதற்கு ரசிகை ஒருவர் தனது கணவருக்கும் சேர்த்து நுழைவுச் சீட்டுக்களை வாங்கியிருந்தார்.

ஆசையாக வாங்கியிருந்த அந்த நுழைவுச் சீட்டில் ஒன்றை திருடன் பறித்துக் கொண்டு சென்றுவிட்டான். காசு இருந்தாலும் நுழைவுச் சீட்டை மீண்டும் வாங்க முடியாததை அறிந்து ரசிகை மிகவும் நொந்து போனார்.

இந்நிலையில் அந்தப் போட்டியைக் காண ரசிகையின் கணவர் மைதானத்துக்குள் சென்றுவிட்டார். திருடிய நுழைவுச் சீட்டுடன் போட்டியைக் காண திருடனும் மைதானத்துள் நுழைந்தான். திருடனின் பக்கத்து இருக்கையில் அமர்ந்திருந்தவர் நுழைவுச் சீட்டை பறிகொடுத்த பெண்ணின் கணவன் என்பது திருடனுக்குத் தெரியாது. எப்படியும் இங்கு வந்துதானே ஆக வேண்டும் என்று காத்திருந்த ரசிகையின் கணவர் பொலீஸை அழைக்க கையும் களவுமாகப் பிடிபட்டான் திருடன். இதன் பின் மீதிப் போட்டியை தன் கணவருடன் சந்தோஷமாக கண்டு ரசித்தார் அந்த ரசிகை.

## பின்லேடன் போட்டிகளைப் பார்க்கிறாரா?

அல் கெய்டா தீவிரவாத இயக்கத் தலைவர் ஒசாமா பின்லேடன் தீவிர கால்பந்து ரசிகர். உலகக் கோப்பை போட்டி அவரை விட்டு வைக்குமா என்ன? என்றாலும் அவர் எப்படி உலகக் கிண்ண ஒளிபரப்புகளைப் பார்க்க முடியும். அவர் பதுங்கி இருக்கும் இடங்களில் அந்த வசதி இருக்கிறதா என்பது கேள்விக்குறியே.

அந்த ஆர்வத்தில் அதற்கான வசதியைத் தேடி வரும் போது பின்லேடன் எங்காவது மாட்டிக்கொள்ள மாட்டாரா என்று தேடுதல் பணியில் உள்ள அமெரிக்க வீரர்களுக்கும் ஓர் ஆசை கிளம்பியிருக்கிறது.

ஒசாமா எல்லா போட்டிகளையும் பார்த்திருக்காவிட்டாலும் கூட, தான் பிறந்து வளர்ந்த நாடான சவூதி அரேபியா பங்கேற்கும் போட்டிகளைக் கட்டாயம் அவர் பார்த்து வருவார் என்று ஆரூடம் கூறுகிறார்கள். சவூதி அரேபியா தோல்விக்கு வருத்தப்பட்டாரோ என்னவோ, அமெரிக்காவின் மோசமான ஆட்டத்தைக் கேள்விப்பட்டு சந்தோஷப் பட்டிருப்பார் என்று கூறுகிறார்கள் ரசிகர்கள்.

FIFA WORLD CUP GERMANY 2006

தொகுப்பு அதிரன்

## வாய்ப்பை இழந்தது பராகுவே

டிரினிடாட்டுக்கு எதிரான லீக் ஆட்டத்தில் பராகுவே 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

கெய்சர்ஸ்லாடனில் நேற்றுமுன்தினம் நடந்த லீக் ஆட்டத்தில் பராகுவே, டிரினிடாட் அணிகள் மோதின. விறுவிறுப்பாக நடந்த இவ் ஆட்டத்தின் முதல் கோலை பராகுவே பதிவு செய்தது. ஆட்டத்தின் 25ஆவது நிமிடத்தில் கிடைத்த தடையற்ற உதை வாய்ப்பைப் பராகுவே வீரர் ரொபர்டோ அகுனா அடித்தார். அதைத் தடுக்க நினைத்தார் டிரினிடாட் வீரர் பிரன்ட் சான்கோ. ஆனால், அது 'சேம் சைட்' கோலாக மாறியது. இதற்குப் பதிலடி கொடுக்க நினைத்த டிரினிடாட்டின் முயற்சிக்குப் பலன் எதுவும் கிடைக்கவில்லை.

தொடர்ந்து அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய பராகுவே 86ஆவது நிமிடத்தில் இரண்டாவது கோல் அடித்து வெற்றியைத் தனதாக்கியது. பராகுவே வீரர் நெல்சன் குவேஸ் அடித்த அபாரமான உதை பராகுவே அணிக்கு வெற்றியைத் தேடித் தந்தது. இறுதியில் பராகுவே 2-0 என்ற கோல் கணக்கில் டிரினிடாட்டை வீழ்த்தியது. இவ் ஆட்டத்தில் வெற்றி பெற்றாலும் முதல் இரண்டு ஆட்டங்களிலும் தோல்வி அடைந்ததால் இரண்டாவது சுற்றில் நுழையும் வாய்ப்பை இழந்தது பராகுவே.

## இன்றைய ஆட்டங்கள்

பிரிவு "ஈ" : செக்குடியரசு – இத்தாலி
நேரம் : இரவு 7.30 மணி

பிரிவு "ஈ" : கானா – அமெரிக்கா
நேரம் : இரவு 7.30 மணி

பிரிவு "எவ்" : ஜப்பான் – பிரேசில்
நேரம் : அதிகாலை 12.30

பிரிவு "எவ்" : குரோசியா – அவுஸ்திரேலியா
நேரம் : அதிகாலை 12.30 மணி

## இரண்டாம் சுற்றில் நுழைந்தன இங்கிலாந்து, சுவீடன் அணிகள்

ஜேர்மனி, ஜூன் 22

இங்கிலாந்து, சுவீடன் அணிகளுக்கு இடையிலான மூன்றாவது லீக் ஆட்டம் இரு அணிகளின் கடும் போராட்டத்துக்குப் பின் 2-2 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிந்தது. இதன் மூலம் இரண்டாவது சுற்றில் எளிதாக நுழைந்தது சுவீடன்.

ஜேர்மனியில் நடந்துவரும் உலகக் கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் 'பி' பிரிவைச் சேர்ந்த இங்கிலாந்து, சுவீடன் அணிகள் மூன்றாவது லீக் ஆட்டத்தில் மோதின.

ஆட்டத்தின் முதல் நிமிடத்திலேயே இங்கிலாந்துக்கு அதிர்ச்சி காத்திருந்தது. அவ்வணியின் முன்னணி வீரர் மைக்கல் ஓவன் காலில் தசைப்பிடிப்பு ஏற்பட ஆட்டத்திலிருந்து வெளியேறினார். அவருக்கு மாற்று வீரராக பீற்றர் கிரவுச் களமிறங்கினார். சுவீடனுக்கு 16, 18 மற்றும் 19ஆவது நிமிடங்களில் மூலை உதை வாய்ப்பும், 22ஆவது நிமிடத்தில் தடையற்ற உதை வாய்ப்பும் கிடைத்தன. ஆனால் சுவீடன் வீரர்கள் அதை வீணாக்கினர். ஆட்டத்தின் 34ஆவது நிமிடத்தில் இங்கிலாந்தின் ஜோகூல் அணிக்கு முன்னிலை பெற்றுதந்தார். 10 அடி தூரத்திலிருந்து அவர் அடித்த பந்து சுவீடன் கோல் காப்பாளர் இஷக்சனின் தடையை மீறி கோலானது. முதல் பாதியில் 1-0 என்ற கோல் கணக்கில் இங்கிலாந்து முன்னிலை பெற்றது.



தொடர்ந்து போராடிய சுவீடனுக்கு ஆட்டத்தின் 51ஆவது நிமிடத்தில் அதிர்ஷ்டம் அடித்தது. சுவீடன் வீரர் லின்டோரத்தின் மூலைஉதையைப் பெற்றுக்கொண்ட மார்கஸ் அல்பாக் கோல் எல்லையை நோக்கித் தலையால் முட்டினார். அதைத் தடுக்க நினைத்த இங்கிலாந்து வீரர் ரியோ பேர்டினாட்டின் உதவியோடு அது 'சேம் சைட்' கோலாக மாறியது. இதைக் கண்டு இங்கிலாந்து ரசிகர்கள் கொதித்துப் போயினர். உடனே ரியோ பேர்டினாட் வெளியேற்றப்பட்டு அவருக்கு மாற்று வீரராகக் கெம்பெல் களமிறக்கப்பட்டார்.

துடிப்புடன் ஆடிவந்த இங்கிலாந்தின் நட்சத்திர வீரர் வெய்னி ரூனி 69ஆவது நிமிடத்தில் வெளியேறினார். மாற்று வீரராக ஜெரார்ட் இறங்கினார். 85ஆவது நிமிடத்தில் ஜெரார்ட்டுக்குக் கிடைத்தது அற்புத வாய்ப்பு. ஜோ கூல் கொடுத்த துல்லியமான பந்துப் பரிமாற்றத்தைத் தலையால் முட்டி கோலாக மாற்றினார். அடுத்து சுவீடன் வீரர் லின்டரோத்தின் மூலை உதை வாய்ப்பை பயன்படுத்திய ஹென் ரிக் லார்சன் 90 ஆவது நிமிடத்தில் கோல் அடித்து ஆட்டத்தின் போக்கை மாற்றினார். இறுதியில் 2-2 என்ற கோல் கணக்கில் ஆட்டம் சமநிலையானது.

இதன் மூலம் 'பி' பிரிவில் இங்கிலாந்து 7 புள்ளிகளுடன் முதல் இடத்தையும், சுவீடன் 5 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தையும் பெற்று இரண்டாவது சுற்றுக்குள் நுழைந்தன.

## போலந்துக்கு ஆறுதல் வெற்றி

கோஸ்டாரிக்காவுக்கு எதிரான மூன்றாவது லீக் ஆட்டத்தில் போலந்து 2-1 என்ற கோல் கணக்கில் ஆறுதல் வெற்றிபெற்றது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இவ்வாட்டத்தில் 'ஏ' பிரிவைச் சேர்ந்த கோஸ்டாரிக்கா, போலந்து அணிகள் மோதின. முன்னதாக நடந்த லீக் ஆட்டங்களில் தோல்வி அடைந்த இரு அணிகளும் இரண்டாவது சுற்றில் நுழையும் வாய்ப்பை இழந்திருந்தன. இவ் ஆட்டத்தில் ஆறுதல் வெற்றியை மட்டுமே பெறமுடியும் என்ற நிலையில் இரு அணிகளும் களமிறங்கின.

ஆட்டம் தொடங்கிய 25ஆவது நிமிடத்தில் கோஸ்டாக்ரிகா முதல் கோல் அடித்தது. கோஸ்டாரிக்கா வீரர் ரொனால்ட் கோமஸ் தடையற்ற உதை மூலம் கிடைத்த வாய்ப்பை கோலாக மாற்றினார். இதற்கு அடுத்த 8ஆவது நிமிடத்தில் பதிலடி கொடுத்தது போலந்து. போரடாஸ் பொசாக்கி அடித்த அந்த கோல் இரு அணிகளையும் முதல் பாதியில் சமநிலை அடையச் செய்தது.

இரண்டாவது பாதியின் 66ஆவது நிமிடத்தில் போலந்து தனது வெற்றியை உறுதி செய்தது. இம்முறையும் கோல் அடிக்கும் வாய்ப்பை பொசாக்கி பெற்றார். ஜாசக் ரைனோவக்கிடம் பந்துப் பரிமாற்றத்தைப் பெற்ற பொசாக்கி இரண்டாவது கோல் அடித்தார். இதற்குப் பதிலடி கொடுக்க முயற்சித்த கோஸ்டாரிக்கா அணிக்கு பலன் எதுவும் கிடைக்கவில்லை. இறுதியில் போலந்து 2-1 என்ற கோல் கணக்கில் ஆறுதல் வெற்றிபெற்றது. இதன் மூலம் 3 புள்ளிகள் பெற்ற போலந்து, 'ஏ' பிரிவில் மூன்றாவது இடத்தைப் பெற்று, இரண்டாவது சுற்றுக்குள் நுழையும் வாய்ப்பை இழந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாகன விபத்தில் கோப்ரல் பலி

ஹாலி எல, ஜூன் 2[illegible]

உழவு இயந்திரமொன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் மோட்டார் சைக்கிளில் சென்ற ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த இராணு வக் கோப்ரல் ஒருவர் அந்த இடத்திலேயே மரணமானார். மோட்டார் சைக்கிளில் பயணித்த மற்றவர் படுகாயமடைந்த நிலையில் மகியங்கனை ஆதாரவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்தில் கொல்லப்பட்டவர் மாத்தளையைச் சேர்ந்த இராணுவக் கோப்ரல் சுமித் பிரியந்த (வயது 31) என்பவராவார். படுகாயமடைந்தவர் சுபசிங்க எனத் தெரிவிக்கப்படுகிறது. மகியங்கனைப் பிரதேசத்தில் தமது நண்பர் ஒருவரின் வீட்டுக்குச் சென்று விட்டு வீடு நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த வேளையில் மகியங்கனை மாஜிஸ் திரேட் நீதிவான் நீதிமன்றத்திற்கு முன்னாள் வைத்து இன்னுமொரு வாகனத்தை முந்திச் செல்ல எத்தனித்துள்ளார். அப்போதே இந்த விபத்து நடை பெற்றுள்ளது என மகியங்கனைப் பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

மரணமானவரின் தலைப்பகுதி கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளதாலேயே மரணம் சம்பவித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

விபத்துத் தொடர்பில் உழவு இயந்திரத்தைத் தடுத்து வைத்ததுடன் அதன் சாரதியையும் மகியங்கனைப் பொலீஸார் கைதுசெய்துள்ளனர்.

மகியங்கனைப் போக்குவரத்துப் பிரிவு பொலீஸ் பொறுப்பதிகாரி பி.பியசேன தலைமையில் விசாரணைகளைப் பதுளைப் பொலீஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க)

---

சிவமயம்

**அச்சுவேலி - நாவலம்பதி காட்டுமலைக் கந்தசாமி கோயில்**

பிரதம குரு அருளாளர் சிவப்பணிச் செல்வர்

*சுவாமிஜி* ***சீ.சிவகுருஜயா*** அவர்களின்

**2ஆவது குருபூசைத் தினம்**



சுவாமிஜி
சீ.சிவகுருஜயா

திருக்கார்த்திகை 22.06.2006
காட்டுமலைதனில்
கந்தனுக்கு கோயில் வைத்து
நாட்டு மக்களை
வீடு பெற வைத்த - ஐயா
உன் கழலடியை கந்தன்
தீப ஒளிதனில் தினம் தினம்
கண்டு பூசிக்கின்றோம்

அச்சுவேலி தெற்கு,
நாவலம்பதி.

**மனைவி,**
**பிள்ளைகள்.**

(51462)(21.19.45)

---

## ஓராண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 09 - 11 - 1942 | 03 - 07 - 2005 |

அமரர் **காசியர் செல்வரட்ணம்**

**எம்மைப் பிரிந்து ஓராண்டு சென்றாலும்**
**உங்கள் நினைவலைகள் என்றென்றும்**
**எம்மைவிட்டு அகலாது!**

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

மானிப்பாய் கிழக்கு,
மானிப்பாய்.

**குடும்பத்தினர்**

(51462)(21.19.45)

---

# அம்பாறையில் இளைஞர்கள் கடத்தல்

கொழும்பு, ஜூன் 22

அம்பாறை மாவட்டத்திலுள்ள ஆலையடிவேம்பு மற்றும் அக்கரைப்பற்று பிரதேசங்களில் 29 இளைஞர்கள் கடத்திச்செல்லப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.


இலங்கை இராணுவத்தினருடன் சேர்ந்தியங்கும் துணை இராணுவக் குழுவினரே இவர்களைக் கடத்திச்சென்றனர் என இணையத்தளச் செய்தியொன்று தெரிவிக்கிறது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

அக்கரைப்பற்று ஆலையடிவேம்பு பிரதேசத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணியளவில் வீதியில் சென்று கொண்டிருந்த இளைஞர்களைத் திடீரென வழிமறித்த துணை இராணுவக்குழுவினர் அவர்களைப் பலவந்தமாகத் தமது வாகனத்தில் ஏற்றிச்சென்றுள்ளனர். இந்த இளைஞர்களைத் துணை இராணுவக்குழுவினர் இவ்வாறு பலவந்தமாக ஏற்றிக்கொண்டிருந்தபோது இராணுவத்தினரும் அப்பகுதியில் சாது உடைகளுடன் நடமாடினர் என அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (சு[illegible]

---

## மரண அறிவித்தல்

### ஐயாத்துரை நிர்மலகுமாரன்



மட்டக்களப்பு (கொம்மாந்துறை) டிசோ மதுபானசாலை உரிமையாளரும் வாழைச்சேனையில் வசித்தவரும் யாழ்ப்பாணம் கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை நிர்மலகுமாரன் 20.06.2006 அன்று அகால மரணமடைந்தார்.

அன்னார் ஐயாத்துரை - மங்கையர்க்கரசி தம்பதியரின் மூத்த புதல்வனும் சரவணமுத்து - பூபதி தம்பதியரின் மருமகனும் தயாளினியின் அன்புக் கணவரும் அனுசியா (கனடா), லசித்தா, முகுந்தன் (கனடா), டிசோகாந் (யாழ்.பரியோவான் கல்லூரி மாணவன்) ஆகியோரின் அன்பு தந்தையும் நிர்மலகுமாரி (கனடா), விஜயகுமாரி, நிர்மலகாந்தன் (மட்டக்களப்பு), விஜயகாந்தன் (டென்மார்க்), உதயகுமார் (டென்மார்க்), காலஞ்சென்ற ஜெயக்குமாரி, ஜெயக்குமார் (ஜேர்மனி), ஜெயலோஜினி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சிவஞானம் (கனடா), பாலசிங்கம் (மக்கள் வங்கி ஸ்ரான்லி வீதி), பத்மநாதன் (ஜேர்மனி), ஜீவா (கனடா), புவனேந்திரன் (கனடா), சாரதாதேவி, சத்தியலட்சுமி (டென்மார்க்), கைடி (டென்மார்க்), ஜெயகுமாரி (ஜேர்மனி), யாழினி (ஜேர்மனி), ஆகியோரின் மைத்துனரும் யோகேந்திரன் (டென்மார்க்), ஜீவசறோ (கனடா), தனலட்சுமி (கனடா) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்


G.P.S. வீதி, கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.

தகவல்:
**மனைவி, பிள்ளைகள்.**

(51463)(21.19.45)

---

# ஆறாம் ஆண்டு நினைவலைகள்







அமரர் வைத்திய கலாநிதி க.ஜோர்ஜ்
(DAM, RIMP, J.P.)

திருமதி
ஜோர்ஜ் ஞானமலர்

06.04.1930 ← அன்னை மடியில் → 23.05.1933

22.06.2000 ← ஆண்டவன் அடியில் → 07.05.2006

**"இறைவா என்னைக் காத்தருளும் உம்மிடம் நீான் அடைக்கலம் புகுந்தேன்" (தி.பா.16:1)**

பூவுலகு விடை கொடுக்க பொன்னுலகை அடைந்து - புகழ்
மேலுலகில் மேன்மை பெற்று மேலான பதமடைந்தீர்!
நீங்காத நினைவுகளால் நீர்மல்கும் விழிகளுடன்
தாங்காத மக்கள், உற்றார், உலகோர்
ஏங்காத நாளில்லை ஏன் மறைந்தீர் எம்மை விட்டு?

நீங்காத நோயகற்றும் தெவிட்டாத சேவையினால்
ஆண்டாண்டு போனாலும் ஆர் மறப்பார் அரிய தொண்டை!
மாண்டாருள் மாணிக்கமே! மகிமையெல்லாம் சேர்த்து வைத்து
தூண்டாத மணிவிளக்காய் துயர்களெல்லாம் துடைத்தவரே.
இறையின்பம் என்றென்றும் உன்னிடத்தில் நித்தியமாம்
குறையின்றி வாழ்வதற்காகக் கோயில் எல்லாம் கும்பிடுவோம்.

*உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

**கபிரியேல் ஜோர்ஜ் வைத்தியசாலை,**
**Dr. சுப்பிரமணியம் வீதி, [illegible].**

**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

(51455) (39-19-45)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பமுனுகமவில் கைது செய்யப்பட்டவர்கள் சூசையின் கட்டளையை ஏற்றே வந்தனராம்!

## பொலீஸ்மா அதிபர் இப்படிக் கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 22

பமுனுகம கடற்கரையில் வைத்து கடந்த சனிக்கிழமை பொலீஸாரால் கைதுசெய்யப்பட்ட இளைஞரும் அச்சந்தர்ப்பத்தில் சைனைட் அருந்தி மரணமான இளைஞனும் முல்லைத்தீவில் கடற்புலிகளிடம் பயிற்சி பெற்றவர்கள் என்றும் - அரச கடற்படையின்மீது தாக்குதல் நடத்தக் கடற்புலிகளின் தளபதி சூசையின் கட்டளைப்படி பமுனுகமவிற்கு வந்தனர் என்றும் பொலீஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ கடந்த திங்கட்கிழமை தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள பொலீஸ் தலைமைக் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார். இதுபற்றி அவர் மேலும் கூறுகையில் தெரிவித்ததாவது:-

நீர்கொழும்பு பமுனுகமவில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த இளைஞர் இருவர் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டனர். அச்சந்தர்ப்பத்தில் ஒருவர் சைனைட் அருந்தி தற்கொலை செய்துவிட்டார். மற்றுமொருவர் கைதுசெய்யப்பட்டார். அவரை விசாரணைக்குட்படுத்தியபோது அவர் புலிகள் இயக்கத்தின் கடற்புலி என்றும் கடற்பரப்பில் பயணம்செய்யும் கடற்படையினரின் படகுகளைத் தாக்கவே தாம் வந்தனர் என்றும் தெரிவித்தார்.

இவர்கள் முல்லைத்தீவில் புலிகளின் கடற்படையில் பயிற்சிபெற்றவர்கள். புலிகளின் கடற்படைத் தளபதி சூசையின் கட்டளையின் பேரில் இந்த இளைஞர்கள் நீர்கொழும்புக்கு வந்தனர் என்பதும் தெரிய வந்தது.

அதேவேளை, நீர்கொழும்பு கடற்பரப்பில் பொலீஸாரால் கைப்பற்றப்பட்ட படகில் வெடிபொருட்கள் நிரப்பப்பட்டிருந்தன. நீர்கொழும்பில் தயாரிக்கப்பட்ட இப்படகு முல்லைத்தீவுக்குக் கொண்டுசெல்லப்பட்டு நுட்பமானமுறையில் வெடிபொருட்கள் நிரப்பப்பட்டு மீண்டும் நீர்கொழும்புக்குக் கொண்டுவரப்பட்டது.

படகை உடைத்துச் சோதனையிட்டபோது அதிகளவான வெடிபொருட்கள் அதில் இருந்தன. புலிகளின் இந்த நடவடிக்கைக்கு நீர்கொழும்பைச் சேர்ந்த சிங்களவர்களே உதவிபுரிந்துள்ளனர்.

இது தொடர்பாக நீர்கொழும்பைச் சேர்ந்த 6 சிங்களவர்கள் கைதுசெய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர். இதுபற்றி மேலதிக தகவல் தெரிந்தவர்கள் பொலீஸாருக்குத் தெரிவிக்கவேண்டும். தகவல் கொடுப்பவர்களுக்குத் தகுந்த சன்மானம் வழங்கப்படும் - என்றார்.

நீர்கொழும்பில் இந்த இளைஞனைக் கைதுசெய்யவும் கற்பிட்டியில் வெடிபொருள்களைக் கைப்பற்றவும் தகவல் கொடுத்த ஏழு பேருக்கு இச்சந்தர்ப்பத்தில் பொலீஸ் திணைக்களம் சார்பில் சன்மானம் வழங்கப்பட்டது. (க)

## வடக்கு - கிழக்கு ஆளுநருடன் ஸ்ரீல.சு.கட்சியினர் சந்திப்பு

கொழும்பு, ஜூன் 22

மேல் மகாண ஆளுநர் அலவி மௌலானா தலைமையில் வடக்கு - கிழக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர்கள் வடக்கு - கிழக்கு ஆளுநரைச் சந்தித்தனர்.

கொழும்பு அலுவலகத்தில் கடந்த வியாழக்கிழமை வடக்கு - கிழக்கு ஆளுநர் ரியர் அட்மிரல் மொஹான் விஜேவிக்ரமவுடனான சந்திப்பு இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில், மேல் மாகாண ஆளுநருடன் எம்.எச்.எம்.நவவி, மன்னார் அமைப்பாளர் எம்.ஏ.ஸி.எம்.நூன், சம்மாந்துறை அமைப்பாளர் சட்டத்தரணி அன்வர் ஸியாத், பொத்துவில் அமைப்பாளர் அப்துல் மஜீத், கிண்ணியா நகரசபையின் எதிர்க்கட்சித் தலைவர் ஏ.ஸி.ஏ.நஸார், நுகர்வோர் விவகார அதிகாரசபையின் செயற்பாட்டுப் பணிப்பாளர் மொஹிதீன் பாவா ஆகியோர் கலந்துகொண்டனர். (ம)

# விமானக் குண்டுவீச்சுகள் குறித்து சர்வதேச மன்னிப்புச் சபை கவலை

தமிழர் தாயகப் பகுதியில் இலங்கை விமானப்படையினர் நடத்தும் விமானக் குண்டுவீச்சுகள் குறித்து சர்வதேச மன்னிப்புச் சபை கவலை தெரிவித்துள்ளது.

இவ்விடயம் குறித்து சர்வதேச மன்னிப்புச் சபை வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கெப்பிட்டிக்கொல்லாவ சம்பவத்தைத் தொடர்ந்து பதிலுக்கு விமானத் தாக்குதல் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளமை கவலை அளிக்கிறது. சம்பூர், முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி அருகில் இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. சர்வதேச மனித உரிமைகளை மீறி பொதுமக்களுக்கு இழப்பு ஏற்படுத்தும் வகையிலான தாக்குதல் இது.

இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரும் இந்த விமானத் தாக்குதல்கள் யுத்தநிறுத்த மீறல் என்று தெரிவித்துள்ளனர். ஆனால், தேசிய பாதுகாப்புக்கு இந்த நடவடிக்கை அவசியமானது என்று இலங்கை அரசு கூறுகிறது. இந்தப் பதில் குறித்து நாம் கவலையடைகிறோம்.

இலங்கை இராணுவத் தளபதி சரத் பொன்சேகா மீதான தாக்குதலையடுத்து ஏப்ரல் மாதமும் இத்தகைய தாக்குதல்களை திருகோணமலை, சம்பூர் பகுதிகளில் நடத்தப்பட்டன. அத்தாக்குதலில் 15 பொதுமக்கள் உயிரிழந்தனர் எனக் கண்காணிப்புக் குழுவின் அறிக்கை தெரிவித்துள்ளது.

இதேவேளை, ஐ.நாவின் அகதிகளுக்கான அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் 7 ஆயிரம் முதல் 8 ஆயிரம் வரையிலான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது நீடித்துவரும் உக்கிரமற்ற போரினால் இலங்கையில் பாரிய மனித உரிமை மீறல்கள் நடைபெறக்கூடும் என்று நாம் கவலைகொள்கிறோம் - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச மன்னிப்புச் சபையின் இந்த அறிக்கைக்குப் பதிலளித்து இலங்கை பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் கெஹெலிய ரம்புக்வெல கூறியுள்ளதாவது:-

பொதுமக்களைத் தாக்குகின்ற திட்டத்துடன் தமிழீழ விடுதலைப் புலிகள் செயற்படுகின்றனர். அதைத் தடுத்துநிறுத்தும் ஒரு நடவடிக்கையே இந்த வான்வழித் தாக்குதலாகும். தேசியப் பாதுகாப்பு மிக முக்கியமானது. அனைத்து இன மக்களின் பாதுகாப்புக்குமான நடவடிக்கையாகவே இதனை நாம் மேற்கொண்டுள்ளோம்.

எமது தேசிய பாதுகாப்புக்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை குறித்து எவரும் கேள்வி எழுப்பவேண்டியதில்லை. இத்தகைய கேள்விகள் எழுப்புவோர் ஏன் நாட்டின் பிரதேச ஒற்றுமைக்கு எதிராக தமிழீழ விடுதலைப் புலிகள் செயற்படுகிறார்கள் என்று கேள்வி எழுப்பவேண்டும்.

இத்தகைய பதில் நடவடிக்கைகளின் போது பொதுமக்களின் பாதுகாப்பை நாம் கூடுதலானவரை உறுதிசெய்துகொள்கிறோம். விடுதலைப் புலிகள்தான் பேசாலையில் பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்தினர் - என்றார்.

# 'அமினோ பீனோன்' இயற்கை உரம் முன்மாதிரி பரீட்சார்த்தசெய்கை வெற்றி

## பிரதேச விவசாயப் போதனாசிரியர்கள் தெரிவிப்பு

பரந்தன்,ஜூன்22

வடக்கு - கிழக்கு கிராமிய அபிவிருத்தி சேவை தனியார் நிறுவனத்தால் 2006 சிறுபோகத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இயற்கை உரம் 'அமினோ பீனோன்' முன்மாதிரி துண்ட பரீட்சார்த்த செய்கை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பிரதேச விவசாயப் போதனாசிரியர்கள் தெரிவித்துள்ளனர்.

ஒட்டுசுட்டான், குமுளமுனை, முள்ளியவளை, புதுக்குடியிருப்பு, பாண்டியன்குளம் ஆகிய பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட பரீட்சார்த்த செய்கையே வெற்றியளித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இரசாயன உரங்களைத் தொடர்ந்து பயன்படுத்துவதால் மண்ணில் உள்ள பல மூலகங்கள் அழிக்கப்படுவதுடன் மண்வளமும் குறைவடைவதை அவதானிக்கமுடிகின்றது.

அத்துடன் சூழல் மாசடையும் நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதனால் உற்பத்தியாளர்கள் பெரும் நஷ்டம் அடைந்துவருகின்றனர்.

இயற்கை உரப்பாவனை மூலம் மண்ணில் பயிர் வளர்ச்சிக்குத் தேவையான மூலகங்கள் பெருகுவதுடன் மண்வளமும் பாதுகாக்கப்படும்.

எனவே, விவசாயிகள் செயற்கை இரசாயனப் பசளைகளைப் பயன்படுத்துவதை விடுத்து இயற்கை உரப்பாவனைக்கு முக்கியத்துவமளித்து மண்வளத்தைப் பாதுகாக்க முன்வருவதுடன் எமது சூழலையும் பாதுகாக்க வேண்டும் என்று தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் கேட்டுள்ளனர். (352)

# ஒருகோடி 36 லட்சம் ரூபா செலவில் உள்ளக வீதிகள் புனரமைக்கப்படுகின்றன

புதுக்குடியிப்பு,ஜூன் 22

முல்லைத்தீவு நகரின் மேற்குப் பகுதியிலுள்ள உள்ளக வீதிகள் யாவும் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

ஒரு கோடி 36 லட்சம் ரூபா செலவில் இந்த வீதிகள் யாவும் புனரமைக்கப்படுகின்றன எனவும்-

5.3 கிலோமீற்றர் நீளமான வீதிகள் கிரவல் போடப்பட்டு தார் பூசப்பட்ட வீதிகளாகப் புனரமைக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான நிதியை ஜீ.ரி.இசற் நிறுவனம் வழங்கியுள்ளது.

ஆழிப்பேரலையின்போது இப்பகுதி வீதிகள் யாவும் முழுமையாக அழிவடைந்திருந்தன.

தற்போது இவை சிறிது சிறிதாக வேள்ட் விஷன், ஜீ.ரி.இசற், யு.என்.டி.பி.ஆகியவற்றின் நிதி உதவியுடன் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன. (353)

# புதுக்குடியிருப்பில் சிரமதானம்

புதுக்குடியிருப்பு,ஜூன்22

சர்வதேச சுற்றுச்சூழல்தினத்தை முன்னிட்டு புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

புதுக்குடியிருப்பிலிருந்து செல்லும் மாத்தனன்வீதி, புதுக்குடியிருப்பு - முல்லைத்தீவு வீதி, புதுக்குடியிருப்பு - ஒட்டுசுட்டான் வீதி, புதுக்குடியிருப்பு -பரந்தன் வீதி ஆகிய நான்கு வீதிகளும் உள்ளடங்கலாக புதுக்குடியிருப்புப் பிரதேசம் முழுவதும் சிரமதானம் மூலம் துப்பரவு செய்யப்பட்டது.

தமிழீழ சுகாதார சேவையினரின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு மாவட்ட மாணவர் அமைப்பினர், சாரணர்கள்,பிரதேசசபை வர்த்தகர்கள், பொதுமக்கள் என அனைவரும் இச்சிரமதானத்தில் இணைந்துகொண்டனர்

(353)



வட்டக்கச்சி மகா வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற தொடக்கநிலை மாணவர்களின் இல்லமெய்வன்மைப்போட்டி நிறைவு நிகழ்வின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கிளிநொச்சி கல்வி வலய ஆங்கிலப் பாட உதவிக் கல்விப்பணிப்பாளர் இ.தனராஜா உரையாற்றுவதையும் போட்டியொன்றில் வெற்றிபெற்ற மாணவன் ஒருவனுக்கு பிரதம விருந்தினரின் [illegible] வெற்றிக்கிண்ணம் வழங்குவதையும் தொடக்க நிலை மாணவர்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அன்னை மடியில்
09
*
10
*
1926



இறைவன் அடியில்
23
*
05
*
2006

*அமரர்*

**பஞ்சாட்சரம் (சுப்பிரமணியம்) பரமேஸ்வரி**

*(பாண்டியன்தாழ்வு)*

**எமது அன்புத் தெய்வமே ஆருயிர் அம்மாவே!**
**உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

23.05.2006 அன்று இறைவனடி எய்திய எங்கள் இதயத் தெய்வத்தின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு பல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும், வெளிநாட்டில் இருந்து துயரைப் பகிர்ந்து கொண்டவர்களுக்கும் நேரில் வந்து அஞ்சலி செலுத்தி ஆறுதல் கூறியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அத்துடன், இன்று (22-06-2006) வியாழக்கிழமை நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

54/11, சந்தனமாதா முன் ஒழுங்கை,
பாண்டியன்தாழ்வு, சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.
T.P.: 9527942, 077 6184397
0044 152721607

பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(சி.49748)(26.19)

---

**இலங்கை அரசு வடக்கு - கிழக்கு மாகாண சபை**
**வடக்கு-கிழக்கு துரித மீளமைப்புத் திட்டம்**
**கடன் இல : 2880 சி.இ. தேசிய போட்டிக் கூறுவிலை கோரல்**
**(நிர்மாண வேலைகள்)**

## கேள்வி அறிவித்தல்

ஐ.எவ்.பி.இல.ஜே.எவ்./நீர்ப் -II/03 திகதி : 22-06-2006

1) வடக்கு - கிழக்கு துரித மீளமைப்புத் திட்டத்தின் ஆகுசெலவு சார்பாக சர்வதேச அபிவிருத்தி அமைப்பிலிருந்து கடனொன்றை இலங்கை அரசு பெற்றுள்ளது. கீழுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் ஒரு பகுதியைப் பிரயோகிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கு இலங்கை உட்பட சகல நிதியிடும் நாடுகளைச் சேர்ந்த தகுதிவாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்தும் பின்வரும் வரையறுக்கப்பட்ட வழிகாட்டலின் கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன.
ஐ.பி.ஆர்.டி (IBRD) கடன் வசதி ஐ.டி.எ.(IDA) நம்பிக்கையின் கீழான வசதி

2) மாவட்ட செயலாளர், யாழ்ப்பாணம் இலங்கை அவர்களினால் மூடிய கேள்விகள் தகுதியான ஒப்பந்தகாரர்களிடமிருந்து பின்வரும் கட்டடத் தொகுதிகள் நிர்மாணிப்பதற்குக் கோரப்படுகின்றன.

3) மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு வேலைக்கும் ரூபா 1000/= ஐ காசாகவோ அல்லது யாழ்ப்பாணத்தில் மாற்றத்தக்கதான யாழ்ப்பாண மாவட்டச் செயலாளரின் பெயரில் அங்கீகரிக்கப்பட்ட வங்கியில் பெறப்பட்ட வங்கி ஆணையாகவோ (Draft) சமர்ப்பிப்பதன் பேரில் பிரதம பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களம், யாழ்ப்பாணம் அவர்களிடமிருந்து 21-07-2006 ஆம் திகதி 15மணிவரை கேள்விப் பொதிக்கான கேள்வி ஆவணங்களின் இரு பிரதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

4) ஆர்வமுள்ள தகுதியான கேள்விதாரர்கள் பிரதம பொறியியலாளர் (கட்டடங்கள்) யாழ்ப்பாணத்தில் இலவசமாகப் பார்வையிடுவதோடு மேலதிக விவரங்களையும் பின்வரும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

பிரதம பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்)
கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி/தொலைநகல் இல.021 222 2632

5) சமர்ப்பிக்கப்படும் கேள்வி, கேள்விகள் திறக்கப்படும் தினத்தில் இருந்து 90 நாள்களுக்குச் செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும், அத்துடன், யாழ்ப்பாண மாவட்டச் செயலாளரின் பெயரில் எடுக்கப்பட்ட கேள்விப் பிணையும் கேள்விகளுடன் இணைக்கப்பட்டு, அரசாங்க அதிபர், மாவட்டச் செயலகம், கச்சேரி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 24-07-2006 ஆம் திகதி 15 மணிக்கு முன்னர் கையளிக்கப்படல்வேண்டும். அதேதினம், கேள்விகள் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவரின் பிரதிநிதி விரும்பின் சமுகமளிக்கலாம். மேற்குறிப்பிட்ட திகதியில் காரியாலயம் மூடப்படவேண்டிய சந்தர்ப்பம் ஏற்படின் அதற்கு அடுத்த வேலை நாளன்று அதேயிடத்தில் அதே நேரத்தில் கோரல்கள் பெறப்பட்டுத் திறக்கப்படும்.

6) வேறு விவரங்கள் தேவைப்படின் கேள்வி ஆவணங்களில் பார்வையிடலாம்.

**விவர அட்டவணை**

| கேள்விக் குறியீடு | வேலை விவரம் | கேள்வி ஆவணங்களின் பெறுமதி ரூபா | கேள்விப்பிணை ரூபா | வேலை முடிக்கப்பட வேண்டிய காலம் |
|---|---|---|---|---|
| ஜே.எவ்.நீர்ப் -II/ ஏஜீஏ.குவா/01 | உதவி அரசாங்க அதிபர் விடுதி (தரம் 05) நிர்மாணம் மருதங்கேணி | 1000.00 | 62,500.00 | 05 மாதம் |
| ஜே.எவ்.நீர்ப் -II/ எஸ்ரி.குவா/02 | உதவி அரசாங்க அதிபர் அலுவலக உத்தியோகத்தர் விடுதி நிர்மாணம், மருதங்கேணி | 1000.00 | 57,500.00 | 04 மாதம் |

7) கேள்விதாரர்கள், கேள்விதாரருக்கான செயற்பிரமாண குறிப்புகள் 4ஆம் பந்தியில் சொல்லப்பட்ட நடைமுறைகளை ஆகக்குறைந்த தகைமைகளாகக் கொண்டிருத்தல் வேண்டுமென இத்தால் ஆலோசனை வழங்கப்படுகின்றது.

**கே.கணேஷ்,**
**அரசாங்க அதிபர், மாவட்டசெயலகம்,யாழ்ப்பாணம்.**

(சி/49761)(26.19)


---

# 31 ஆவது நாள்

## கர்த்தருக்குள் மகிமையின் நினைவில்...

**'கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம்'**

# அமரர் J.M. றொசான்



**மண்ணில் மலர்வு** **21-01-1978**

**கர்த்தரின் அரவணைப்பில்** **22-05-2006**

"சத்தியத்தை நேசித்து நித்தியத்தைச் சேர்ந்தவரே !
கண்ணுக்குள் நிற்கின்றீர் சொல்லுக்குள் சிரிக்கின்றீர்!
உம் ஆறுதல் வார்த்தைக்காய் திறந்த உள்ளங்கள்
உம் கதை சொல்லி களைத்துப் போகிறதே!
உம் சிரித்த முகத்தை இயேசு பார்க்க விரும்பி
தன்னுடன் சேர்த்திட்டாரோ?
புத்தம் புது தோற்றத்தில் நாமும் உம்மை பரத்தினிலே காண்போம்"

கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம்
அவர் பார்வைக்கு அருமையானது. (சங்கீதம் 116:15)

பருத்தித்துறை வீதி,
கொடிகாமம்.

தகவல்:
திருமதி றொசான்

(51420)(19.26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஜூன்22

உரும்பிராய் ஓடையம்பதி கற்பக விநாயகர் ஆலயப் பெருந்திருவிழா மஹோற்சவம் எதிர்வரும் 26 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

பதினைந்து தினங்கள் நடைபெறவுள்ள இந்தத் திருவிழாவில் ஜூலை 9 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுதினம் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும்.

* * *

நல்லூர்,ஜூன்22

நெடுந்தீவு மத்தி, பெருக்கடி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய புனருத்தாரண மஹாகும்பாபிஷேகப்பெருவிழா எதிர்வரும் 29 ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறவுள்ளது. (111)

* * *

வலி.தென்மேற்கு, ஜூன்22

அராலி வண்ணப்புரம் ஸ்ரீ விசாலாட்க்ஷி சமேத விஸ்வநாதர் ஆலய பெருந்திருவிழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்த உற்சவமும் நடைபெறவுள்ளது. (135)

## ஈழத்துச் சிவாலயங்கள் நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்,ஜூன்22

ஈழத்தின் 80இற்கும் மேற்பட்ட சிவாலயங்களின் வரலாறும் தகவல்களும் ஆராய்ச்சித் திறன் கொண்ட ஆய்வாளர்களால் ஆக்கப்பட்டு வித்துவான் அருள்மொழியரசி திருமதி வசந்தா வைத்தியநாதன் தொகுத்த 'ஈழத்துச் சிவாலயங்கள்' நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் ஜூலை மாதம் 2 ஆம் திகதி மாலை 5 மணிக்கு கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (204)

# யாழ்.மாநகரசபை பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் திண்மக்கழிவகற்றல் செயற்றிட்டம் முன்னெடுப்பு

யாழ்பாணம், ஜூன்22

யாழ்.மாநகர எல்லைக்குட்பட்ட பகுதிகளில் திண்மக்கழிவகற்றல் பற்றிய விழிப்புணர்வுச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது என யாழ்.மாநகர ஆணையாளர் சீ.வி.கே. சிவஞானம் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

திண்மக்கழிவகற்றல் பற்றிய விழிப்புணர்வை பொதுமக்கள் மத்தியில் ஏற்படுத்தும் நோக்கோடு மாநகரசபை எல்லைக்குட்பட்ட அனைத்து இடங்களும் 9 வலயங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.அந்த வலயங்களுக்குப் பொறுப்பான பொதுச் சுகாதார பரிசோதகர்கள் தலைமையில் சுகாதார மேற்பார்வையாளர்கள், சுகாதார பாதுகாவலர்கள், குடும்பநல உதவியாளர்கள் மற்றும் சுகாதாரத் தொண்டர்கள் உள்ளிட்ட குழுவினர் வீடு வீடாகச் சென்று திண்மக்கழிவகற்றல் பற்றியும் திண்மக்கழிவுகளை நிலத்தில் சேகரித்து வைப்பதால் நிலத்தடிநீர் மாசடையும் விதம் பற்றியும் பொதுமக்களுக்கு எடுத்துக் கூறுவர்.

வீடுகளிலும் நிறுவனங்களிலும் சேரும் குப்பை கூழங்களை இயற்கைக் கழிவு, செயற்கைக் கழிவு, மீளவும் பயன்படுத்தக் கூடிய கழிவு என வகுத்து பொதிசெய்வது தொடர்பாகவும் அவற்றை மாநகரசபையின் கழிவகற்றும் வாகனங்களுக்கு வழங்கவும் ஆலோசனை வழங்கப்படும்.

அது மட்டுமன்றி, வீதியோரங்களில் வைக்கப்படவுள்ள திண்மக்கழிவகற்றும் தொட்டிகளில் கழிவுகளை வகைப்படுத்தி போடுவதன் மூலம் நகர் சுத்தமாகும் விதம் பற்றியும் எடுத்துச்கூறப்படும்.

இந்த நிகழ்வு எதிர்வரும் 25 ஆம் திகதி வரையும் நடைபெறவுள்ளது. இப்பணியில் 175 பணியாளர்கள் தினமும் ஈடுபட்டு, திண்மக்கழிவகற்றல், நகரத்தின் சுத்தம் மற்றும் நிலத்தடி நீர்ப்பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வை பொதுமக்களிடம் ஏற்படுத்துவர். -என்றார். (204)

## தொழில்சார் வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜூன்22

ஜனசக்தி காப்புறுதிக் நிறுவனத்தின் ஏற்பாட்டில் இளைஞர், யுவதிகளுக்கான தொழில் சார் வழிகாட்டல் கருத்தரங்கு நாளை வெள்ளிக்கிழமை காலை9.30 மணிக்கு யாழ். பொது நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இதில் உயர் வருமானம் பெறுதல், முகாமைத்துவ விருத்தி, வேலை வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்ளல் போன்ற பல விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளதால் ஆர்வலர்கள் கலந்துகொண்டு பயன்பெறலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(204)

## 'சுனாமி' வழிகாட்டல் திட்ட நிதி திரட்டும் நடவடிக்கை துரிதம்

யாழ்ப்பாணம்,ஜூன்22

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழிகாட்டும் திட்டத்திற்காக நிதி திரட்டும் நடவடிக்கை துரிதப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்.செயலகத்தில் இயங்கும் 'சுனாமி' தகவல் மைய அதிகாரி ஒருவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டு உதவிகள் கிடைக்க வழிகாட்டுதலற்ற மக்கள் யாழ்.செயலகத்தில் இயங்கும் 'சுனாமி' தகவல் மையத்தில் பதிவுகளை மேற்கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மல்லாகம், கோணப்புலம் அகதிமுகாமைச் சேர்ந்த சுமார் நூறு பேர் பதிவுகளை மேற்கொண்டுள்ளனர்.

அவர்கள் தமது மீன் விற்பனைக்கு வசதியாக சைக்கிள்கள், மீன்பெட்டிகள் என்பவற்றைப் பெற்றுத்தருமாறு கோரியுள்ளனர்.

வழிகாட்டுதலற்ற மக்களின் தேவைகளைக் கருத்திற்கொண்டு இத்திட்டத்திற்கான நிதியுதவி திரட்டுதலைத் துரிதப்படுத்துவதாக தகவல் மையத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

(ஒ-ரி)

## உள்ளூராட்சி அமைப்புகளுக்கு உத்தேச ஆளணிக் கோப்பு விவரம்

யாழ்ப்பாணம்,ஜூன்.22

யாழ்.மாவட்டத்தில் உள்ள பிரதேச சபைகள், நகர சபைகளுக்கான உத்தேச ஆளணிக் கோப்பு விவரம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

வருடாந்தம் 45 லட்சம் கோவை மீண்டும் வரும் வருமானமுடைய உள்ளூராட்சி சபைகளுக்கு ஏற்ற விதங்களில் ஆளணி கோப்பு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

புதிய ஆளணி கோப்பு விவரங்கள் ஒவ்வொரு பிரதேச சபைகள், நகர சபைகளுக்கு ஏற்ப பெறப்படும் வருமானங்களின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டு உள்ளூராட்சி ஆணையாளரினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

புதிய ஆளணி கோப்பு விவரத்தில் வீதித் தொழிலாளர், சுருக்கெழுத்தாளர், தட்டெழுத்தாளர் சேவை என்பனவும் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளன.

(185)



சித்தன்கேணி இளைஞர் முன்னேற்றக்கழக பொன்விழா சிறப்பு மலர் வெளியீட்டு விழா அண்மையில் நடைபெற்றது.

நிகழ்வில் கழகத்தின் முன்னாள் தலைவரும் சித்தன்கேணி சிவன் ஆலய பிரதம குருவுமாகிய பிரம்ம ஸ்ரீ ஞா.சபாரத்தின சர்மா மலர் வெளியீட்டுரை நிகழ்த்துவதையும் வடமாகாண வீதி அபிவிருத்திசபை பிரதம பொறியியலாளர் பூ.சிவனேசன், கழகத்தலைவர் ஆ.ஸ்ரீகோணேஸ், யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் ஈ.குமரன், கிராம அலுவலர் எஸ்.ஸ்ரீதரன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

*(படம்: சங்கானைச் செய்தியாளர்)*

## சரசாலை மன்றம் நடத்திய சமயப்போட்டி முடிவுகள்

யாழ்ப்பாண்ம், ஜூன்22

சரசாலை இந்துமன்றம் பாடசாலை மாணவர்களிடையே நடத்திய சமய அறிவுப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களின் பெயர் விவரங்களை வெளியிட்டுள்ளது.

வெற்றிபெற்ற மாணவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

**பாலர் பிரிவு**

வி.கபிலன் (சரசாலை ஸ்ரீ கணேச வித்தியாலயம்), கு.பிரியதர்சன் (சரசாலை வடக்கு முன்பள்ளி),கு.தர்சனா (மட்டுவில் கமலாசினி வித்தியாலயம்)-

**ஆரம்ப பிரிவு**

கு.தக்ஷா (சரசாலை ஸ்ரீ கணேசா வித்தியாலம்), த.மிதுனா (மட்டுவில் கமலாசினி வித்தி.), சி.தேனுஷா (சரசாலை ஸ்ரீ கணேசா வித்தி.)-

**கீழ்ப்பிரிவு**

யோ.மேனகா(சரசாலை ஸ்ரீ கணேசா வித்தி.), ஸ்ரீ.கஜேந்தினி (மட்டுவில் கமலாசினி வித்தி.), யோ.சுகண்யா (சரசாலை ஸ்ரீ கணேசா வித்தி.)-

**மத்திய பிரிவு**

யோ. மயூரன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), பா.நிரோஜா(சரசாலை ஸ்ரீ கணேசா வித்தி.),ந.கீர்த்திகா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி)-

**மேற்பிரிவு**

இ.மிதுனா (சரசாலை ஸ்ரீ கணேசா .வித்தி.), ச.றேகா(மட்டுவில் கமலாசினி வித்தி.), க.சிவகௌி(மட்டுவில் கமலாசினி வித்தி.). (204)

## முன்பள்ளி ஆசிரியருக்கான பயிற்சிக்கு அமைச்சின் அனுமதி கிடைக்கவில்லை

யாழ்பாணம், ஜூன்22

உலக உணவுத் திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சிக்கான உணவு வழங்கும் திட்டம் அங்கீகரிக்கப்படவில்லை. என்று யாழ். மாவட்ட உலக உணவுத் திட்ட அதிகாரி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ். மாவட்டத்தில் வேலைக்கான உணவு வழங்கும் திட்டத்திற்கு அனுமதி கிடைத்துள்ளது. ஆனால் தேச நிர்மாண அமைச்சு இதற்கான அங்கீகாரத்தினை இது வரை வழங்கவில்லை.

இதனால் முன்பள்ளி ஆசிரியர், உதவி ஆசிரியர்களுக்கான பயிற்சிக்கு உணவு வழங்கல் திட்டத்தை முன்னெடுத்துச் செல்ல முடியாதுள்ளது.

இதேவேளை- பயிற்சிக்கான உணவு வழங்கும்திட்டத்தின் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான அனுமதியை அமைச்சு வழங்கினால் யாழ். மாவட்டத்தில் ஆயிரத்து 440 ஆசிரியர்கள் பயன்பெறுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

(185)



## சாயி சிந்தனை

### இராவணன் சகலகலா வல்லவனாயிருந்தும் அகங்காரத்தால் கெட்டான்

சமூகத்திலிருந்து விலகி தனியாய் வாழ்வது சாத்தியமல்ல. மனிதன் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து வருவது சமுதாயத்தின் மத்தியில்தான் என்பதையும் ஒவ்வொருவரும் இந்த சமுதாயத்தின் ஒரு அங்கமென்பதையும் நன்குணரவேண்டும். ஆகவே, சமுதாய நலனே முக்கியமான குறிக்கோளாகக் கொள்ளவேண்டியது ஒவ்வொருடைய கடமையாகும். நல்ல மக்களாக வாழ்ந்து நற்கதிபெற சமூகசேவை செய்வதே சிறந்த மார்க்கம். இதற்கு வழிசெய்யும் வகையில்தான் சத்திய சாயி நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது. இதில் பணிகள் செய்யும் போது எந்தவித ஆடம்பரத்துக்கும், விளம்பரத்துக்கும் இடம்கொடாமல் செயல்பட வேண்டும். தூய்மையான, எளிமையான தொண்டே மிகச்சிறந்தது. இதில் 'நான் செய்கிறேன்' என்ற அகங்கார உணர்வுக்கு இடமே கொடுக்கக் கூடாது. அகங்கார உணர்வு நாசத்திற்கே வழி தேடும். இராவணன் சகலகலா வல்லவனாக இருந்தான். எல்லாவிதமான பூசைகளும், சாஸ்திரப்படி சந்தியாவந்தனம் முதலிய நித்திய கர்மங்களையும் தவறாமல் செய்து வந்தான். எல்லாவிதமான செல்வங்களையும் பெற்று கல்வி, கேள்விகளிலும், வீரதீரத்திலும், பல பராக்கிரமத்திலும், தனக்கு நிகர் எவருமில்லை என்றபடி மிக உயர்ந்த நிலையிலிருந்தான். ஆனால் இவ்வளவு சிறப்பாக எல்லாவிதமான வளங்களும் நிறைந்திருப்பினும் அவனிடம் ஒரே ஒரு பலவீனம் இருந்தது. அதுவே 'அகங்காரம்' இந்த ஒரே பலவீனத்தினால் அவன் கடையில் ஒரு குரங்கால் அவமானப்படுத்தப்பட்டு, ஒரு சாதாரண மனித உருவில் இருந்தவரால் தனது முடிவைச் சந்திக்க நேர்ந்தது.

(த.ச.சா.1986 மார்ச்.ப.11)

உங்கள் விமானப் பயணத்திற்கு
Aero Lanka
In Domestic Operation
Head Office
No.500, Galle Rd.,
Colombo-6, T:2505 632/3
Fax: 2500 626
Trinco Office
No.47, Kandy Rd.,
Trincomalee. T: 026 222 1519
Fax: 026 2221519
Jaffna Office:
No.86, Point Pedro Rd.
Jaffna. T:021 222 6242
021 2223984
Fax: 021 222 5600
Branch:
No.14, New Market Bldg.,
Chavakachcheri.T: 021 2227979
Fax: 021 2227979
New way of Flying

யாழ் - கொழும்பு விமான சேவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

புதிய TVS STAR CITY 1000 km வரை ஓடியது, LML FREEDOM, HERO HONDA SPLENDOR ஆகிய நல்ல நிலையிலுள்ள மோட்டார் சைக்கிள்கள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 0779123031

(51458)


## நிர்ணய விலைக்கு அதிகமாக சிமெந்தை விற்கக்கூடாது

### யாழ்.வணிகர் கழகம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,ஜூன்22

குடாநாட்டில் சிமெந்து விற்பனை செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்ட விலையை விடக் கூடுதல் விலைக்கு விற்கவேண்டாம் என யாழ். வணிகர் கழகம் சகல வர்த்தகர்களையும் அறிவுறுத்தியுள்ளது.

யாழ்.அரச அதிபருடன் கலந்துரையாடி மக்கள் நலன் கருதி சிமெந்துக்கு விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்றும் -

சகல வர்த்தகர்களும் குறிப்பிட்ட கட்டுப்பாட்டு விலைக்கே சிமெந்தை விற்பனை செய்யவேண்டும் என்றும் - வணிகர் கழகம் கேட்டுள்ளது. இது தொடர்பாக நேற்றைய உதயனில் இரண்டாம் பக்கத்தில் வெளியான செய்தியில் அச்சுத் தவறு காரணமாக நிர்ணயித்த விலைகளை விட அதிக விலைக்கு சிமெந்தை விற்கவேண்டும் என்று அர்த்தப்படப் பிரசுரமாகியிருப்பது தவறாகும்.


முதன்முறையாக தமிழ்மொழி விளக்கத்துடன் ஒருவா, கால முழுநேர

**Computer Hardware Engineering Course**

ourse Fee :- 2000/=
Free Study Pack & Drivers CD
வகுப்புக்கள் ஆரம்பம்:-
26/06/2006:- 08.30A.M

**COMPUTER EXPRESS**
Institute of Information Technology
No 15, Sirampiyadi lane , Jaffna.
Telephone :- 021-2228250 , 0777-222422

கொழும்பிலிருந்து வருகைதரும் விரிவுரையாளரால் வகுப்புக்கள் நடாத்தப்படும்



**COMPUTER EXPRESS**
Institute of Information Technology
No 15, Sirambiyadi Lane,Jaffna.
Tel:- 021-2228250, 0777-222422

மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் - 2006
A/L பரீட்சை எழுதிய மாணவர்களிற்கான புதிய பிரிவுகளும் ஆரம்பமாகின்றன.

80% OFF

| | | |
|---|---|---|
| Diploma in Microsoft Office 750/= Duration :- 3 Months | Diploma in Desktop Publishing ~~6000/=~~ 1200/= Duration :- 4 Months | Diploma in Web page Designing ~~7000/=~~ 1400/= Duration :- 4 Months |
| Diploma in Graphic Designing ~~7000/=~~ 1400/= Duration :- 4 Months | Diploma in Hardware Engineering ~~6500/=~~ 1200/= Duration :- 3 Months | Accounting Package ~~7000/=~~ 1400/= Duration :- 3 Months |
| Diploma in Computer Science ~~7000/=~~ 1400/= Duration :- 4 Months | Honors Diploma in Computer Science ~~9000/=~~ 1800/= Duration :- 5 Months | Diploma in Auto CAD ~~6500/=~~ 1200/= Duration :- 3 Months |

Advances Courses
50% OFF
Diploma in Video Editing ~~6000~~ 3000
Diploma in Multimedia ~~5000~~ 2500

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும். சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ், வரையறுக்கப்படாத கணனிப் பயிற்சி.

வகுப்புகள் ஆரம்பம்
Batch I - 23/06/2006
Batch II - 24/06/2006
Batch III - 25/06/2006
Batch IV - 26/06/2006



## VACANCIES
## UNIVERSITY OF JAFFNA, SRILANKA

university of Jaffna will entertain applications from suitably qualified persons for the under mentioned posts up to 13.07.2006

### Faculty of Arts

Senior Lecturer Grade II ( on contract)/ Assistant Lecturer (on contract) in English Literature

**Assistant Lecturer (on contract) in**
Music (Vocal/ Pannisai/ Violin/ Miruthangam/ Veenai/ Dance (Bharathanatiyam)/ Art & Design/ Fine Arts/ Drama & Theatre Arts/ Archeology/ Hindu Civilization/ Hindu Philosophy/ Economics/ Home Economics/ Political Science/ Sociology/ Anthropology/ Philosophy/ Psychology/ Linguistics/ Education/ Christian Civilization/ Law/ Tamil.

**Instructor (on contract) in**
Art & Design/ Dance (Bharathanatiyam)/ Music (Vocal/ Veenai/ Violin/ Pannisai/ Miruthangam)

**Tutor (on contract) in**
Home Economics/ Geography/ Planning (Geography/ History/ Sanskrit

**Visiting Lecturer in**
* Basic French/ Home Economics/ Art & Design/ ** English Literature/ Christian Civilization/ Archeology/ Sanskrit/ Education/ Music

**Visiting Instructor in English (ELTC)/ Music/ Dance/ Art & Design**

**Note:** * Preference will be given to those who have competence in Teaching French
** Preference fields - SriLankan Writers/ Literary women/ Conternporary South Asian Literature/ women Novelist/ English Translation of Modern Literary work

### Faculty of Management Studies & Commerce

**Assistant Lecturer (on contract) in**
Business Administration/ Commerce

Visiting Lecturer in Business and Corporate Law

**Note:** Candidates who are awaiting the result of the final degree examination may also apply for the Post of Instructor (on contract)/ tutor (on contract).

| Post | Salary |
|---|---|
| Senior Licturer (on contract) | Rs.28225/- p.m.(fixed) |
| Assistant Lecturer (on Contract) | Rs. 16870/- p.m.(fixed) |
| Instructor (on contract/Tutor (on contract) | Rs. 14350/- p.m.(fixed) |
| Visiting Lecturer | Rs. 500/- per hour |
| Visiting Instructors | Rs. 250/- per hour |

Other allowances approved by University Grants Commission will also be paid

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar/Establishments, either in person or by post on a payment of Rs.20/- per form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order drawn in favour of the Bursar, University of Jaffna together with a self addressed stamped envelope 23x10c.m in size.

Those who wish to apply for more than one post should apply in separate application forms.

Applicants from the University System/Government Department/Corporations and Statutory Board should channel their applications through the Heads of respective Institutions. Applications received after the closing date will be rejected without intimation.

Only the sorted list of candidates will be called for the interview

REGISTRAR
2006.06.20 (C/49774)


## சுட்டிபுரத்தில் தேர்த்திருவிழா இம்முறை இல்லை

யாழ்ப்பாணம்,ஜூன்22

வரணி சுட்டிபுரம் ஆலயத்தில் எதிர்வரும் சனிக்கிழமை தேர் உற்சவ தின நிகழ்வு இடம்பெறவுள்ளது.

அன்றையதினம் தேர் இழுத்தல் இடம் பெறமாட்டாது என்றும் -

நேர்த்தி செய்ய விரும்புபவர்கள் அன்றைய தினம் நேர்த்திகளை நிறைவேற்றலாம் என்றும் - ஆலய பரிபாலகர் தெரிவித்துள்ளார்.

## சுற்றுச்சூழல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜூன்22

சூழல் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு மானிப்பாய் பிரதேச சபைக் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. மானிப்பாய் வலி.தென்மேற்கு பிரதேச சபை செயலாளர் மே.சாந்தசீலன் தலைமையில் இடம்பெறும். இதில் சனசமூக நிலையங்களின் நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் கலந்துகொள்வர். (185)

## பண்டத்தரிப்பில் நாய்களுக்குத் தடுப்பூசி

பண்டத்தரிப்பு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய் தடுப்பு ஊசி மருந்து இவ்வாரம் முதல் கிராம ரீதியாக ஏற்றப்படுகிறது.

இதுபற்றி ஒலிபெருக்கி மூலம் பொது மக்களுக்கு அறிவித்தல் விடுக்கப்பட்டு இத்தடுப்பு ஊசி போடப்பட்டு வருவதாக பண்டத்தரிப்பு பொதுச் சுகாதார பரிசோதகர் என்.நிர்மலானந்தன் இது பற்றி தெரிவிக்கையில் தெரிவித்தார். (135)


## 21 ஆண்டு கால தனித்துவமிக்க பயிற்சி நிலையம்

**கலாலயா** பயிற்சியகம்
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(பெருமாள் கோயிலுக்கு அருகில்)

மகளிருக்கான துரித 1மாத/3மாத பயிற்சிகள்

- கேக் ஐஸிங்: 25 வகையான கேக் வடிவங்களின் மேல் சகலவிதமான ஐஸிங் முறைகளும் செய்தல் மாச்சீனி மலர்கள் (SUGAR FLOWERS) செய்தல்.
- கூந்தல் அலங்காரம்:30 வகையான கொண்டைகள் போடுதல்.
- உணவு தயாரித்தல் :மேலைத்தேச, கீழைத்தேச மற்றும் சீன உணவுகள், சிற்றுண்டிகள் தயாரித்தல்.
- FABRIC PAINTING ✱ மலர், மலர்ச்செண்டுகள் செய்தல் ✱ கைவேலை
- அடிப்படை FACIAL அழகுக்கலையும் மணப்பெண் அலங்காரங்களும்
- அடிப்படைத் தையல் தெரிந்தவர்களுக்கான 3 விதமாக சாறிபிளவுஸ் (SAREE BLOUSE) மற்றும் சுடிதார், பஞ்சாபி வெட்டித் தைத்தல்.
இத்துடன் புதிதாக தையல் பழக விரும்புவோருக்கான
- 6 மாத உடை தயாரித்தல் பயிற்சியும் ஆரம்பமாகின்றன.

கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பமாகியுள்ளன.
சனி,ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் : 24-06-2006

மேலும் விவரங்களை வெள்ளி தவிர்ந்த ஏனைய நாள்களில் பி.ப.2 மணி வரை நேரில் அறிந்து கொள்ளலாம்.
(சி/49776)(21.32.17.15) -பதிவாளர்-



## வண். வட - கிழக்கு கொண்டலடி விநாயகர் இறை முத்த நயினார் தேவஸ்தானம் மண்டலாபிஷேக பூர்த்தி



யாழ்ப்பாணம், வண்.வட-கிழக்கு கொண்டலடி விநாயகர் இறைமுத்த நயினார் தேவஸ்தானத்தில் கடந்த (04.05.2006) சித்திரை 21ஆம் திகதி வியாழக்கிழமை மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

இவ்வாலயத்தில் பல லட்ச ரூபா செலவில் திருப்பணி வேலைகள் செய்யப்பட்டு இந்தியாவிலிருந்து புதிதாக தருவிக்கப்பட்ட மூர்த்திகளையும் ஸ்தம்பத்தையும் வைத்து அழகு மிளிரும் வர்ணம் தீட்டி இக்கைங்கரியங்களையும் செய்துள்ளார்கள். இக் கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 48 நாள்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்று இன்று (22.06.2006) வியாழக்கிழமை மூல மூர்த்திக்கு 1008 சங்காபிஷேகமும் பரிவார மூர்த்திகளுக்கு 108 சங்காபிஷேக அபிஷேகமும் விசேட பூஜைகளும் நடைபெறும். இதனைத் தொடர்ந்து மகேஸ்வர பூஜையும் நடைபெற்று மாலை எம்பெருமான் வீதி உலா வருவார்.

பரிபாலன சபையினரால் புதுப்பிக்கப்பட்டுள்ள இவ் ஆலயத்திற்கு பண உதவி புரிந்த விநாயகர் அடியார்கள், ஆலய உபயகாரர்கள், ஆலய பரிபாலன சபையினர், தொண்டர் சபையினர், வெளிநாட்டு அடியார்கள், வர்த்தகர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், மண்டலாபிஷேக உபயகாரர்கள் ஆகியோர்களுக்கு நன்றியைப் பரிபாலன சபை தெரிவிப்பதோடு, இவ் ஆலயத்தில் நடைபெற்ற மஹா கும்பாபிஷேக நிகழ்வுகளையும் கிரியைகளையும் சைவசமய ஆகமவிதிப்படி எமக்கு முன்நின்று செயல்படுத்திய ஆலய பிரதம குருவாகிய சாம்பானுஸ்டாச்சாரிய சிவப்பிரம்மஸ்ரீ நாகேந்திர பாலசுப்பிரமணியக் குருக்கள், ஆலய குரு சிவாச்சாரிய "இளஞ்சுடர்" சிவப்பிரம்மஸ்ரீ நா.பாலஸ்கந்தரூபக் குருக்கள் மற்றும் கிரியைகளில் பங்குவகித்த அனைத்து அந்தணர்களுக்கும் பரிபாலனசபை நன்றியைத் தெரிவிப்பதுடன், இக் கும்பாபிஷேகத்தை சிறப்பாக நடத்தித்தந்த ஆலய பிரதமகுருவுக்கு பரிபாலன சபையினரால் பொன்னாடை போர்த்தி, தங்கப்பதக்கம் அணிவித்து கௌரவிக்கப்பட்டதுடன் ஏனைய அந்தணர்களுக்கும் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டது.

### பிரதம குருக்களின் ஆசியுரை

வண்.வட- கிழக்கு கொண்டலடி ஆலயத்தில் கடந்த 04.05.2006 நடைபெற்ற கும்பாபிஷேக நிகழ்வில் கலந்து கொண்ட அனைத்து அடியார்களுக்கும் என்னுடன் செயற்பட்ட ஆலய பரிபாலன சபையினருக்கும் இக் கட்டுமாணத்தில் பங்கு கொண்ட அனைத்து அடியார்களுக்கும் உபயகாரர்களுக்கும் இவ்வாலய பிரதம குருவாகிய பாலசுப்பிரமணியக் குருக்களுக்கும் எனது நல்லாசியைத் தெரிவித்துக்கொள்வதுடன் , மென்மேலும் இவ் ஆலயம் வளர்ச்சி அடைய கொண்டலடி விநாயகன் துணை புரிவாராக.

(...)(...-17-15) பிரதம குருக்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈராக்கிலுள்ள ஜப்பானியப் படையினர் விரைவில் திருப்பி அழைக்கப்படுவர்

## பிரதமர் கொய்சுமி தொலைக்காட்சியில் அறிவிப்பு

டோக்கியோ, ஜூன்22

ஈராக்கில் பணிபுரிந்துவரும் ஜப்பானிய படையினரைத் திருப்பி அழைத்துக்கொள்ளப் போவதாக ஜப்பானிய பிரதமமந்திரி ஜூனி சிரோ கொய்சுமி அறிவித்துள்ளார்.

போர் செய்யாத 600 ஜப்பானிய படையினர் பிரிட்டிஷ் மற்றும் ஆஸ்திரேலிய படைகளின் பாதுகாப்புடன் தென் ஈராக்கில் கட்டுமானப்பணிகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

ஈராக்கிற்கு ஜப்பானியப் படைகளை அனுப்பியதற்கு ஜப்பானிய மக்கள் மத்தியில் கடும் எதிர்ப்பு இருந்தது. இரண்டாவது உலக யுத்தத்தின் பின்னர் ஜப்பானியப் படைகள் வெளிநாட்டில் பணிபுரியச் சென்றமை இதுவே முதல் தடவையாகும்.

படைகளை விலக்கிக்கொண்டாலும் ஈராக்கின் மீள்கட்டுமானத்துக்கு ஜப்பான் தொடர்ந்தும் போதுமான அளவு ஆதரவு வழங்கிவரும் என்று ஜப்பான் பிரதமர் குறிப்பிட்டார்.

ஜப்பானியப் படைகள் ஜூலை இறுதி அளவில் முற்றாக விலகிவிடும் என்று ஜப்பானிய ஊடகங்கள் தெரிவித்தன.

பிரிட்டிஷ், ஆஸ்திரேலிய படைகளிடமிருந்து சமாவா நகரப் பகுதி பாதுகாப்பை ஈராக்கியப் படைகளிடம் கையளிக்க எடுக்கப்படும் நடவடிக்கைகளே ஜப்பானியப் படைகள் வெளியேற்றப்படுவதற்கான திட்டத்துக்கு காரணமாகியிருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

ஜப்பானிய போர் வீரர் எவரும் இதுவரை ஈராக்கில் கொல்லப்படவோ, காயப்படவோ இல்லை. ஆனால், கட்டுமானப்பணிகளில் ஈடுபட்டிருந்த மூன்று ஜப்பானிய பணியாளர்கள் 2004ஆம் ஆண்டு கடத்தப்பட்டதன் காரணமாக ஜப்பானியப் பிரதமருக்கு உள்நாட்டில் பெரும் எதிர்ப்பு ஏற்பட்டிருந்தது. கடத்தல்காரர்கள் ஜப்பானியப் படையினர் நாட்டைவிட்டு வெளியேறவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்திருந்தனர். பின்னர் அம் மூவரும் விடுவிக்கப்பட்ட போதிலும் ஈராக்கிய தீவிரவாதிகளால் வேறு ஐந்து ஜப்பானிய குடிமக்கள் கொல்லப்பட்டிருந்தனர்.


ஜப்பா[illegible]தமர்

கொய்சுமி அண்மையில் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷைச் சந்தித்து விட்டு வந்த பின்னரே இந்த முடிவை எடுத்துள்ளார். இவ் வருட இறுதியில் கொய்சுமி பதவியி லிருந்து விலகவிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ப)

## பலத்த காற்றினால் படகுகள் மூழ்கின

கச்சத்தீவு கடல் பகுதியில் ஏற்பட்ட காற்றால் அங்கு மீன்பிடித்துக் கொண்டிருந்த ராமேஸ்வரம் மீனவர்களின் இரண்டு படகுகள் நடுக்கடலில் மூழ்கின. ராமேஸ்வரத்திலிருந்து கடந்த திங்கட்கிழமை 688 படகுகளில் மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்குச் சென்றனர். ராமேஸ்வரத்தை சேர்ந்த முத்துச்சாமி, தங்கச்சிமடத்தைச் சேர்ந்த ஆனந்தராஜ் ஆகியோருக்கு சொந்தமான படகில் எட்டு மீனவர்கள் மீன்பிடிக்கச் சென்றனர். நள்ளிரவில் கச்சத்தீவு கடல் பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போதுஅங்கு பலத்த காற்று வீசியது. காற்றினால் இரண்டு படகுகளும் கடலில் மூழ்கின. படகு கடலில் மூழ்கியதால் அதிலிருந்த மீனவர்கள் கடலில் குதித்தனர். நடுக்கடலில் தத்தளித்த அவர்களை வேறு படகில் மீன்பிடித்துக்கொண்டிருந்த மீனவர்கள் மீட்டு கரைக்கு அழைத்து வந்தனர். (202)

## சட்டீஸ்காரில் தீவிரவாதிகள் தாக்குதல் ஏழு பொது மக்கள் துடிதுடித்துப் பலி !

ராய்ப்பூர், ஜூன்22

இந்தியாவின் சட்டீஸ்கார் மாநிலத்தின் ஒரு கிராமத்தில் அதிரடியாக புகுந்த தீவிரவாதிகள் அங்கிருந்தவர்கள் மீது தாக்குதல் நடத்தியதில் ஏழுபேர் கொல்லப்பட்டனர். மூன்று பேர் படுகாயமடைந்தனர்.

சட்டீஸ்கார் மாநிலம் தந்தேவாடா மாவட்டம் கோன்டா பொலீஸ் நிலையத்திற்கு உட்பட்டது சிக்குவார்குடா கிராமம். இந்தக் கிராமத்திற்குள் நேற்று முன்தினம் அதிகாலையில் ஆயுதம் ஏந்திய 300 தீவிரவாதிகள் திடீரெனப் புகுந்தனர். அங்கிருந்த சில வீடுகளில் பொருள்களை கொள்ளையடித்ததுடன் சில வீடுகளைத் தீயிட்டுக் கொளுத்தினர். பின்னர் அக்கிராமத்தைச் சேர்ந்த 25 பேரை கடத்திச் சென்றனர். அவர்களில் ஏழுபேரை துப்பாக்கியால் சுட்டும், கத்தியால் குத்தியும், அடித்தும் கொன்றனர். படுகாயமடைந்த மூன்று பேர் உட்பட மீதமுள்ளவர்களை விடுவித்தனர்.

கடந்த 8ஆம் திகதி, தேவார்பல்லி கிராமத்தில் பாதுகாப்புப் படையினருக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் பத்து தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். இந்தச் சம்பவத்திற்கு பழிக்கு பழிவாங்கும் நடவடிக்கையாகவே, நேற்றுமுன்தினம் தீவிரவாதிகள் சிக்குவார்குடா கிராமத்தில் புகுந்து, அப்பாவி மக்களைக் கொன்று, கிராமத்தையே சூறையாடினர் என்று பொலீஸார் தெரிவித்தனர். (202)


பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் எதிர்க்கட்சி ஆதரவாளர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை தேர்தல் ஆணையாளர் அலுவலகத்தை நோக்கி ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தினர். பொலீஸார் அதனைத் தடுத்து நிறுத்திய போது வன்முறை வெடித்தது அப்போது எடுக்கப்பட்ட படம் இது.




## ஈராக்கிய கைதிகள் படுகொலை; அமெ. படையினர் மீது விசாரணை

பக்தாத் ,ஜூன்22

ஈராக்கிய சிறைக்கைதிகள் மூவரின் மரணம் தொடர்பாக மூன்று அமெரிக்கப் படையினர் மீது கொலைக்குற்றம் சாட்டப்பட்டுள்ளது. கடந்த மே மாதம் 9 ஆம் திகதி ஒரு தாக்குதல் நடவடிக்கையின் போது இந்த ஈராக்கிய கைதிகள் கொல்லப்பட்டிருந்தார்கள்.

அமெரிக்கப்படையினர் குடிமக்களைக் கொலை செய்ததாகவும், கைதிகளை துஷ்பிரயோகம் செய்ததாகவும் குற்றஞ்சாட்டப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

இந்தக்குற்றச்சாட்டுகளின் மீது அமெரிக்க அதிகாரிகள் துரிதமாக செயற்படவில்லையென்று முறைப்பாடு எழுந்தமையால் இம்முறை அதிகாரிகள் விசாரணைகளில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். கொலை நடைபெற்ற அன்றைய தினமே விசாரணைகளை ஆரம்பிக்கும்படி அப்பிரிவின் தளபதி அதிகாரிகளுக்கு கட்டளை பிறப்பித்தார். (ப)

## ஈரானின் யுரேனியத் தயாரிப்புக்கு அமெரிக்கா, ரஷ்யா கூட்டாக எதிர்ப்பு

வாஷிங்ரன்,ஜூன்22

ஈரான் அணுசக்தித் திட்டம் மற்றும் வடகொரியா ஏவுகணைப் பிரச்சினை தொடர்பாக அமெரிக்க அதிபர் புஷ்ஷும் ரஷ்ய அதிபர் விளாடிபுடினும் ஆலோசனை நடத்தினர்.

தொலைபேசி மூலம் கடந்த திங்கட்கிழமை நடந்த இந்த ஆலோசனையில் இருவரும் தமது கருத்துக்களைப் பகிர்ந்துகொண்டனர். செறிவூட்டிய யுரேனியம் தயாரிக்கும் திட்டத்தை ஈரான் கைவிடச் செய்வதில் இரு நாடுகளும் ஒன்றுபட்டு முயற்சித்தால் நல்ல பலன் கிடைக்கும் என இரு அதிபர்களுமே ஒப்புக்கொண்டுள்ளனர்.

அணுசக்தித் திட்டங்களை ஈரான் கைவிட்டால் அதற்கு ஈடாக தரக்கூடிய சலுகைகள் தொடர்பாக பேச்சுக்கள் தொடங்கவேண்டியது அவசியம் என்பதும் இரு அதிபர்களின் கருத்தாகும் என்று அரச அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நெடுந்தொலைவிலுள்ள இலக்கைக் தாக்கக்கூடிய அதிக சக்தி வாய்ந்த நவீன ரக ஏவுகணைகளை சோதித்துப்பார்க்கும் முயற்சியில் வடகொரியா இறங்கியுள்ளது குறித்தும் இரு தலைவர்களும் விவாதித்தனர். இந்தப் பிரச்சினை தொடர்பாக தொடர்ந்து ஒருவரையொருவர் தொடர்புகொண்டு பேசவும் இருவரும் திட்டமிட்டுள்ளனர் என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

செறிவூட்டிய யுரேனியம் தாயாரிக்கும் திட்டத்தை ஈரான் கைவிட்டால் மட்டும் அந்நாட்டுடன் பேச்சை நடத்தமுடியும் என்பதே அமெரிக்கா மற்றும் அதன் கூட்டாளி நாடுகளான பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி, ரஷ்யா, சீனா ஆகியவற்றின் நிலையாகும்.

ஆக்கப் பணிகளுக்கே அணுசக்தித் திட்டங்களை செயற்படுத்துவதாக ஈரான் கூறினாலும் அதன் உள்நோக்கம் அணு ஆயுதங்களைத் தயாரிப்பதாகும் என்று அமெரிக்கா குற்றஞ்சாட்டி வருகிறது. எனினும் இந்த குற்றச்சாட்டை ஈரான் மறுக்கிறது. (202)

## பாடசாலையில் உணவு உண்ட மாணவர்கள் மருத்துவமனையில்

### சென்னை நகரப் ப்குதியில் பரிதாப சம்பவம்

மதிய உணவு சாப்பிட்ட சென்னை மாநகராட்சி பள்ளி மாணவ, மாணவிகள் 86 பேர் வாந்தி, மயக்கம் ஏற்பட்டு ஸ்டான்லி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். பல்லி விழுந்த உணவு சாப்பிட்டதால் இந்த விபரீதம் நடந்துள்ளது.

சென்னை வியாசர்பாடி சி.கல்யாணபுரத்தில் சென்னை மாநகராட்சி தொடக்கப்பள்ளி உள்ளது. இங்கு ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் படித்து வருகின்றனர். இங்கு பயிலும் மாணவர்களுக்கு நேற்றுமுன்தினம் மதியம் வழக்கம்போல் மதிய உணவு வழங்கப்பட்டது. முதல் முறை தயாரான சாப்பாடு பரிமாறப்பட்டது. அது போதுமானதாக இல்லாததால் இரண்டாவது முறையாக சாப்பாடு தயாரித்து வழங்கப்பட்டது. மொத்தம் 170 மாணவர்கள் மதிய உணவு சாப்பிட்டனர். அரைமணி நேரத்தில் திடீரென மாணவ, மாணவியர் வாந்தி எடுத்தனர். சிலர் தலை சுற்றி, மயங்கி விழுந்தனர்.

இதனிடையே ஐந்தாம் வகுப்பு மாணவர் இருவரும் சாப்பிடும்போது சாப்பாட்டில் பல்லி சிதைந்தபடி கிடந்ததைக் கண்டுபிடித்தனர். இது பற்றி உணவு பரிமாறியவர்களிடம் கூறினர்.

பல்லி விழுந்த உணவு சாப்பிட்டதால் மயங்கி விழுந்த மாணவர்கள் உடனடியாக மாநகராட்சி வாகனங்கள் மற்றும் தனியார் வாகனங்களில் ஸ்டான்லி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். 46 மாணவர்களும், 40 மாணவிகளுமாக மொத்தம் 86 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

மேற்படி பாடசாலையில் இதேபோன்ற சம்பவங்கள் ஏற்கனவே இடம்பெற்றுள்ளன என்று பெற்றோர் அதிருப்தி தெரிவிக்கின்றனர். (202)

## வடகொரிய ஏவுகணைகளுக்கு அலாஸ்கா வரை பாயும் சக்தி

வாஷிங்டன் ,ஜூன்22

தொலைதூரம் பாய்ந்து தாக்கக்கூடிய ஏவுகணைகளை சோதித்துப்பார்க்கும் நிலைக்கு வடகொரியா முன்னேறிக் கொண்டிருக்கிறது. அவ்வாறான ஏவுகணைகள் அமெரிக்க எல்லைகள் வரை பாயக்கூடும் என்று அமெரிக்க அரசு அறிவித்துள்ளது.

வடகொரியாவின் 'தாயிபொடொங்' ஏவுகணைகள் அலாஸ்கா வரையிலான வீச்சு சக்தியைக் கொண்டதாகவிருக்கும் என்று கருதப்படுகிறது. வடகொரியாவின் ஏவுகணை சோதனை காரணமாக அமெரிக்கா தனது பாதுகாப்பு அமைப்பு முறைகளை முனைப்புப்படுத்தியுள்ளது என்று செய்திகளை அமெரிக்க அதிகாரிகள் ஒப்புக்கொள்ளவோ, நிராகரிக்கவோ இல்லை.

ஏவுகணைகளை சோதித்துப்பார்க்கும் உரிமை தனக்கு உண்டு என்று வடகொரியா வலியுறுத்தியுள்ளது. வடகொரியா தொலைதூர ஏவுகணை சோதனைகளை நடத்தப்போகிறது என்ற செய்தியைத் தொடர்ந்து ஆஸ்திரேலியா, ஜப்பான் ஆகிய நாடுகள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ப)


அமெரிக்காவின் புளோறிடா மாநிலத்தில் நோயால் மயங்கி வீழ்ந்த தனது எஜமானை பார்த்த பெல்லி என்னும் நாய் உடனடியாக [illegible] மூலம் அவசர உதவித் [illegible] தகவல் கொடுத்து அவரைக் காப்பாற்றியது. அதற்காக நாய்க்கு விருது வழங்கப்பட்டது.

## முழுமுக மாற்று சத்திரசிகிச்சை

உலகிலேயே முதலாவது முழுமுக மாற்று சத்திரசிகிச்சை மேற்கொள்ள வடக்கு லண்டனில் ஹம்ஸ்டட்டில் உள்ள ராயல் ப்ரீ மருத்துவமனை திட்டமிட்டுள்ளது. இத்தகவலை பிளாஸ்டிக் சத்திரசிகிச்சை மருத்துவர் பீட்டர் பட்லர் தெரிவித்தார் என்று சண்டே ரைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. தீ விபத்தில் மு[illegible] மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட 22 வயது இளைஞருக்கு இந்த அறுவைச் சிகிச்சை நடைபெற விருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (202)

## ஹுஸ்டன் நகரம் வெள்ளத்தில்

ஹுஸ்டன் ,ஜூன்22

அமெரிக்காவில் டெக்சாஸ் மாகாணத்தில் உள்ள ஹுஸ்டன் நகரம் வெள்ளத்தில் மிதக்கிறது. வெள்ள நீர் பாய்ந்தோடுவதால் முக்கிய நெடுஞ்சாலைகள் துண்டிக்கப்பட்டுள்ளன. அமெரிக்காவில் ஒவ்வொரு ஆண்டு சூறாவளி தாக்குதல் நடக்கும்போதும் ஹுஸ்டன் நகரம் கடும் மழையில் சிக்கித் தவிப்பது வழக்கம்.

இந்த ஆண்டும் கடந்த சில நாள்களாக ஹுஸ்டன் நகரில் கடும் மழை பெய்தது. இதனால் நகரின் பல பகுதிகளில் வெள்ள நீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. ஏரிகள் நிரம்பி வழிந்து சாலைகளில் தண்ணீர் செல்வதால் ஆயிரக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். கடந்த திங்கட்கிழமை முதல் நிலைமை மோசமடைந்துள்ளது.

வெள்ளநீர் சூழ்ந்து கொண்டதால் மக்கள் வீடுகளில் இருந்து வெளியேறி நகர நிர்வாகம் சார்பில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக முகாம்களில் தஞ்சம் புகுந்துள்ளனர். ஹுஸ்டனின் தெற்குப் பகுதியில் வெள்ள நீர் சூழ்ந்து கொண்டதால் வீ[illegible] சிக்கிய மக்கள் மீ[illegible] பட்டனர். அப்பகுதியில் தற்போது அவசர நிலை அறிவிக்கப்பட்டுள்ளது. (202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரழிவுப் பாதையில் பயணிக்கும் நாடு

**நாடு யுத்தமொன்றை நோக்கிப் பயணிப்பது தெளிவாகத் தென்படுகின்றது. இது குறித்து பரவலாகவும் பரபரப்பாகவும் பேசப்பட்டு வரும் இன்றைய நிலையில் எதிர்பார்க்கப்படும் யுத்தத்தை விடுதலைப் புலிகள் எந்த வகையில் கையாளத் திட்டமிடுகின்றனர் என ஊகம் தெரிவிக்கும் இக் கட்டுரை 'லங்காதீப' ஞாயிறு இதழில் 'காலிங்கவின் அரசியல் விமர்சனம்' பகுதியில் பிரசுரமாகியுள்ளது. அதன் தமிழ் வடிவம் இது.**

**நாடு** இரத்த ஆறு ஓடும் நிலையை நோக்கித் தள்ளப்பட்டுச் செல்வதாகத் தோன்றுகின்றது. அது மட்டுமன்றி, விடுதலைப் புலிகளைப் போன்றே, அரசினது விருப்பமும் அதுவாகவே இருப்பது போன்றும் தோன்றுகின்றது.

மீண்டும் இந்த நாட்டில் உருவாகிவரும் யுத்தத்தால் ஏற்படக் கூடிய பயங்கரமான எதிர்விளைவு குறித்து அரசு மதிப்பீடு செய்து பார்ப்பதாகத் தோன்றவில்லை. எந்தவொரு செயற்பாட்டையும் அதன் போக்கிலேயே இடம்பெற இடமளிக்கும் கொள்கைப்படி அரசு செயற்படுவதாகத் தோன்றுகின்றது.

சமாதானப் பேச்சுகளுக்கு அனுசரணை வழங்கும் தனது பாத்திரத்தைக் கைவிடும் நிலையில் நோர்வே அரசு தற்போது இருக்கின்றது. அதேபோன்று இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள்கூட இலங்கையின் அரசியல் செயற்பாடுகள் குறித்த தமது எதிர்பார்ப்பைக் கைவிடும் நிலையிலேயே இருந்து வருகின்றன.

எதிர்பார்க்கப்படும் அடுத்த ஈழயுத்தம் குறித்த பிரபாகரனின் எண்ணம் எவ்வகையானது என்பது குறித்து அண்மையில் தயான் ஜயதிலகா என்ற பிரமுகர் தெரிவித்த அபூர்வமான கதையொன்று 'டெய்லி நியூஸ்' ஆங்கிலப் பத்திரிகையில் பிரசுரமாகியிருந்தது. அது, பயிற்சியை முடித்து வெளியேறிய குழுவினரின் அணிவகுப்பு நிகழ்வின் போது கடற்புலிகளின் தளபதி சூசை வெளியிட்ட தகவலாகும்.

பிரபாகரன், எதிர்பார்க்கப்படும் அடுத்த யுத்தத்தை இதற்கு முன்னர் தாம் நடத்திய யுத்தங்கள் போலல்லாது, முற்றிலும் வேறுபட்டதொரு விதத்திலேயே நெறிப்படுத்தவுள்ளார் எனக் கடற்புலிகளின் தளபதி அங்கு கருத்து வெளியிட்டிருந்தார். அது இரண்டாம் உலக யுத்த வேளையில் அடோல்ப் ஹிட்லர் மேற்கொண்ட **Blitzkrieg** என்ற தாக்குதல் நடவடிக்கைகளை ஒத்ததாகப் பிரபாகரனால் நெறிப்படுத்தப்படவுள்ளதாகவும் சூசை தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் அமைப்பின் முழுச் சக்தியையும் பயன்படுத்தி ஒரேவேளையில் பல முனைகளில் கடுமையான, பாரிய தாக்குதல்களை மேற்கொள்வதே விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனின் திட்டம் என அவர் தெரிவித்துள்ளார். அது இதுவரை காலமும் முன்னெடுக்கப்பட்ட இடைவெளிவிட்டு, கட்டம் கட்டமாகத் தாக்குதல் மேற்கொள்ளும் பழைய பாணிக்கு முற்றிலும் மாறுபட்ட வகையிலான தாக்குதல்களாக அமையும். அது மட்டுமன்றி, தமது தரப்பினாலேயே முதலில் அத்தகைய தாக்குதல்கள் ஆரம்பித்து வைக்கப்படுமெனவும் சூசை தெரிவித்துள்ளார்.

சிங்கள மக்களுடன் விசேட மொழியில் பேசினாலொழிய சரிவராது என்றும் சாதாரண மொழியில் பேசுவதை அவர்கள் புரிந்து கொள்ளப்போவதில்லை எனவும் புலிகளால் குறிப்பிட்டுக் கூறப்பட்டுள்ளது. அதிபலவான்களுக்கு தமது அமைப்பு அஞ்சப் போவதில்லை எனவும் உலகின் நான்காவது அதிபலம் வாய்ந்த பலவானான இந்தியாவுக்குத் தாம் முகம்கொடுக்க நேர்ந்த விதத்தில் ஏனைய அதிபலவான்களுக்கும் முகம் கொடுக்கத் தமது அமைப்புத் தயாராயுள்ளதாகவும் கடற்புலிகளின் தளபதி தெரிவித்துள்ளார்.

எதிர்பார்க்கப்படும் அடுத்த யுத்தமே தமது அமைப்பு மேற்கொள்ளவுள்ள கடைசி யுத்தமாக அமையுமெனவும், அதற்குப் பின்னர் யுத்தத்தில் ஈடுபடும் எண்ணம் தமது அமைப்புக்குக் கிடையாதெனவும் கடற்புலிகளின் தளபதி சூசை தெரிவித்திருப்பது அவரது பேச்சில் உள்ளடக்கப்பட்டுள்ள முக்கியத்துவம் வாய்ந்த விடயமாகும். விடுதலைப் புலிகள் அமைப்பு தற்போது தீர்க்கமானதொரு முடிவுக்கு வந்திருப்பதாக சூசை வெளியிட்ட மேற்கண்ட கருத்து வெளிப்பாடு மூலம் உணர முடிகின்றது. அதாவது அவர்கள் தற்கொலைத் தாக்குதல்களை மேற்கொள்வதற்குத் தயாராக இருக்கின்றனர் என உணர்ந்து கொள்ள முடிகின்றது.



விடுதலைப் புலிகள் முன்னர் ஆனையிறவு இராணுவ முகாமைக் கைப்பற்றிக் கொண்டனர். அதன் பின்னர் பொருளாதார அபிவிருத்தியை முற்றுமுழுதாக முடக்கத்தக்கதான கட்டுநாயக்கா விமான நிலையம் மீதான தாக்குதலை மேற்கொண்டனர். அவை யுத்த ரீதியில் பாரிய தாக்குதல்கள் எனக் கருதப்பட முடியுமாயினும், அத்தகைய நிலைமை அரசினால் வெற்றிகொள்ளப்பட்ட பின்னரும் தமது பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் புலிகள் தோல்வியடைய நேர்ந்திருப்பதனால் யுத்தரீதியில் அதற்கும் மேலான தீர்வொன்றை வென்றெடுக்க அவர்களால் இயலுமென எண்ண இயலாதுள்ளது.

அதனால், தமது எதிர்த்தரப்புக்கு பாரிய நாசத்தை ஏற்படுத்தி தேவைப்பட்டால் தம்மைத் தாமே அழித்துக்கொண்டாலும் பரவாயில்லை என எண்ணும் நிலைக்குத் தற்போது விடுதலைப் புலிகள் அமைப்புத் தள்ளப்பட்டுள்ளது. ஆச்சரியப்படத்தக்க விதத்திலல்லாது அவர்கள் அத்தகைய நிலைப்பாடொன்றுக்குத் தள்ளப்படுவதைத் தவிர்த்துக் கொள்வது சிரமமேயாயினும் ஆச்சரியப்படத்தக்கவகையில் அவர்களை அத்தகைய நாசமேற்படுத்தும் நிலைக்குத் தள்ளுவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டியது அரசின் பொறுப்பாகும். ஆனால், அதற்கு அவசியமான நடவடிக்கையை மேற்கொள்ளும் திறமை அரசிடம் உள்ளதாக நம்ப முடியவில்லை.

இலங்கை அரசை யுத்தரீதியில் முற்றுமுழுதாகத் தோற்கடிக்கத்தக்க திறன் விடுதலைப் புலிகளிடம் கிடையாது. ஆனால், தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் மூலம் யுத்தத்தில் அரச தரப்புக்கு பெரும் நாசத்தை ஏற்படுத்தத்தக்க திறன் விடுதலைப் புலிகள் அமைப்பிடம் உள்ளது.

தமக்கெனத் தனியான அரசொன்றை உருவாக்கிக்கொள்வதற்கான தமது திட்டத்துக்கு இந்தியாவின் ஆதரவு கிட்டாதென்பதை விடுதலைப் புலிகள் நன்கு தெரிந்தே வைத்துள்ளனர். அதேபோன்று தமது சுயகௌரவத்துக்கு பாதிப்பு ஏற்படாத விதத்தில் இலங்கை அரசுடன் ஒத்துப்போகும் நிலைமை ஏற்பட வாய்ப்பில்லை என்பதையும் விடுதலைப் புலிகள் நன்கறிவர். தமது பிரச்சினைகளுக்கு எந்தவிதத்திலும் தீர்வு கிட்டாதுவிட்டால், தமது எதிர்த் தரப்பினரையும் அழித்தொழித்து தம்மையும் அழித்துக் கொள்ளும் நிலைப்பாட்டை கைக்கொள்ளும் நிலைக்கு விடுதலைப் புலிகள் வந்திருப்பரெனக் கருத முடிகிறது.

நாட்டில் இடம்பெறும் சிக்கல்கள் பயங்கரமானதும் அழிவுகளை ஏற்படுத்துவதுமான நிலையொன்றை நோக்கித் தள்ளப்பட்டுவரும் நிலைமையையே தற்போது அவதானிக்க முடிகிறது. நாட்டின் சகல துறை நடவடிக்கைகளும் மீண்டும் பழைய பூஜ்ய நிலையிலிருந்தே ஆரம்பிக்கப்பட வேண்டிய இடத்துக்கு நாடு பயணிப்பதாக சுட்டிக்காட்ட வேண்டிய அடிப்படைப் பொறுப்பு எமக்குண்டு. ✱

**தமிழில்: வீயெஸ்ரி**


## ஊர்காவற்றுறை புளியங்கூடல் செருத்தனைப்பதி
## ஸ்ரீ மகாமாரி அம்பாள் தேவஸ்தானம்

வருடாந்த மஹோற்சவ பெரும் திருவிழாக்களுக்கு அம்பிகையை தரிசிக்கவரும் அடியார்களுக்கு பகல், இரவு உணவு வசதிகள் தெற்கு வாசலில் அமைந்திருக்கும் ஸ்ரீ மகாமாரி அம்பாள் சனசமூக நிலைய மண்டபத்தில் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

- ✱ சப்பரம் 23-06-2006 வெள்ளிக்கிழமை
- ✱ தேர்த்திருவிழா 24-06-2006 சனிக்கிழமை
- ✱ தீர்த்தத்திருவிழா 25-06-2006 ஞாயிற்றுக்கிழமை

-விழா உபயகாரர்.

(51480) (26-15-45)



## வாழ்த்துகின்றோம்



(ச.49780) (39-15-45)

### திரு லயன் ஆறுமுகம் சாந்தலிங்கம்

புங்குடுதீவு-5, மண்ணின் மைந்தனும் எமது ஆலய பரிபாலனசபை உறுப்பினரும் அன்னதானசபை பொருளாளருமாகிய லயன் ஆறுமுகம் சாந்தலிங்கம் அவர்களுக்கு கடந்த மாதம் கொழும்பு பண்டார நாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் சர்வதேச லயன்ஸ் கழக 306 B1 மாவட்ட மாநாடு நடைபெற்ற போது ஊர்காவற்றுறை (தீவகம்) லயன்ஸ் கழக சிறந்த பொருளாளருக்கான விருதையும் சான்றிதழையும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டதையிட்டு பாராட்டுகின்றோம்.

பெரியபுலம் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய தொண்டர்கள் புங்குடுதீவு - 5.



## கண்ணீர் அஞ்சலி

யா/புனித கென்றியரசர் கல்லூரியின் ஆசிரியை **திருமதி த.சிவகுருநாதன்** அவர்களின் அன்புத் தந்தையும், பிரதி அதிபர் **திருவாளர் பொ.சிவகுருநாதன்** அவர்களின் அன்பு மாமனாருமாகிய

### திருவாளர் அருணாசலம் தம்பிப்பிள்ளை

அவர்களின் மறைவையிட்டு அன்னாருக்கு எமது அஞ்சலியைச் செலுத்துவதுடன் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*யா/புனித கென்றியரசர் கல்லூரிக் குடும்பம்,*
*இளவாலை.*

(51494) (15-45)



## மரண அறிவித்தல்

### தம்பித்துரை பத்மநாதன்



கீரிமலையைப் பிறப்பிடமாகவும் நவாலி வடக்கு, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பித்துரை பத்மநாதன் அவர்கள் நேற்று (21.06.2006) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பித்துரை - சிவராசரத்தினம் தம்பதியரின் அன்புப் புதல்வனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.06.2006) வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக மானிப்பாய், கட்டுடை பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புலவர் வீதி,*
*நவாலி வடக்கு,* (51483)(32)
*மானிப்பாய்.*

தகவல்:
**த.சிவராசரத்தினம்** *(தாய்).*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யா/மகாஜனக் கல்லூரி தெல்லிப்பளை

**நிறுவியவர் நினைவு தினமும்**
**பரிசளிப்பு விழாவும் - 2006**

தலைவர் : திரு பொ.சுந்தரலிங்கம் அவர்கள் (அதிபர்)
இடம் : கல்லூரி மண்டபம்
காலம் : 24.06.2006 சனிக்கிழமை காலை 9 மணி

பிரதம விருந்தினர் : திரு ப.விக்கினேஸ்வரன் அவர்கள் (கல்விப் பணிப்பாளர்,வலிகாமம் வலயம்)
நினைவுப் பேருரை : செல்வி விமலா கந்தையா அவர்கள் (உதவிக் கல்விப் பணிப்பாளர், தமிழ்-வலிகாமம் வலயம்)
சிறப்பு விருந்தினர் : திரு ச.கைலாசநாதன் அவர்கள் (உதவிக் கல்விப் பணிப்பாளர், தெல்லிப் பழைக் கோட்டம்)
கௌரவ விருந்தினர் : கலாநிதி சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்
பரிசில் வழங்கல் : திருமதி தவமணி விக்கினேஸ்வரன் அவர்கள்
நன்றியுரை : செயலாளர், பழைய மாணவர் சங்கம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(51499) -மகாஜனக் கல்லூரிச் சமூகம்.

## முதலாவது ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 02 - 10 - 1922
உதிர்வு 14 - 06 - 2005

### அமரர் பொன்னம்பலம் (கிளாக்கர்)

குடும்பத்தின் குலவிளக்கே எமது அப்பாவே!
ஆழ்ந்த துயரம் தந்து போனீரே எமது அன்பு அப்பாவே!
உமது இழப்பால் துயருற்று வாடித்தவிக்கும்
பிள்ளைகளை ஒருமுறை பாருமப்பா!

சாவகச்சேரி வடக்கு, மீசாலை. (51496)
உமது துயரால் வாடித்தவிக்கும் பிள்ளைகள், குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### முருகேசு தெய்வானைப்பிள்ளை



காரைநகர் களபூமி,வளுப்போடையைச் சேர்ந்த முருகேசு தெய்வானைப்பிள்ளை நேற்று (21.06.2006) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தப்பு - கைராசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற காசிப்பிள்ளை - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற முருகேசு (ரி.கே.எம்.தம்பு)வின் அன்பு மனைவியும் சற்குணராசா (சுவிஸ்), பத்மா, ரகுபதிராசா (சுவிஸ்), பரம் தில்லைராசா (சின்னத்தம்பி - அம்பிகை களஞ்சியம், வவுனியா), யோகராசா (லண்டன்), திருச்செல்வி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும் ரஞ்சிதமலர் (சுவிஸ்), ஞானசோதி (லண்டன்), கமலராணி (சுவிஸ்), புலேந்திரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும் சுபாசினி (சுவிஸ்), சௌமியா (சுவிஸ்), சாரங்கி (சுவிஸ்), ரமேஸ், தினேஸ், விதுரா (சுவிஸ்), விதுனன் (சுவிஸ்), சிந்துஜன், விதுஜன், நிதுசன் (லண்டன்)ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை, கந்தசாமி, நடராசா ஆகியோரின் அன்பு மைத்துனியும் காலஞ்சென்றவர்களான சுந்தரம்மா, ஆறுமுகம், மகேஸ்வரிப்பிள்ளை, தங்கம்மா, செல்லையா ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.06.2006) வியாழக்கிழமை நண்பகல் பத்தர்கேணியடிலேன், வேம்படி, காரைநகர் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக களபூமி தில்லை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பத்தர் கேணியடி லேன்,
வேம்படி, காரைநகர்.
தொ.பே. 0777423650 (51492)

தகவல்:
பத்மா (மகள்)
பரம் தில்லைராசா
(சின்னத்தம்பி - மகன்)

### சேவியர் ஸ்ரனிஸ்லொஸ் கருணாநிதி



புங்குடுதீவு, 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட ஸ்ரனிஸ்லொஸ் கருணாநிதி அவர்கள் 20.06.2006 செவ்வாய்க்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் திரு.திருமதி சேவியர் ஸ்ரனிஸ்லொஸ் கோமளவல்லியின் (கோமளம் - பிரான்ஸ்) அன்பு மகனும் ரேணுகாவின் அன்புக் கணவரும் ஸ்ரீபன், எஸ்தல்,பிபிடா ஆகியோரின் அன்புத் தந்தையும் விவேகானந்தன் நவநீதம் ஆகியோரின் அன்பு மருமகனும் பிரான்சிஸ்கா (செல்வியின்) பாசமிகு சகோதரனும் எட்மன் வரதராஜாவின் மைத்துனரும் டினேஸ், வனிஜா, தர்சன் ஆகியோரின் அன்புக்குரிய மாமனும் காலஞ்சென்ற நடராஜா, ஜோசப் பூராசா, பழனிநாதன், லெட்சுமணன் ஆகியோரின் மருமகனும் சிஸ்.விக்ரறின் (தி.கு.கன்னியர்மடம் மிருசுவில்),காலஞ்சென்ற லீலாவதி காலஞ்சென்ற கந்தையா, புவனேஸ்வரி ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

12, அரசடி ஒழுங்கை,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (51497)

தகவல்:
கந்தையா புவனேஸ்வரி
(சிறியதாயார்)

## மருந்தக திறப்புவிழா

யாழ்ப்பாணம்,ஜூன்22

ஜப்பான் ஜே.பி.ஐ.சி திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட புன்னாலைக்கட்டுவன் மத்திய மருந்தகத்தின் திறப்புவிழா நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஸ் கலந்துகொள்வார். (204)


புதிய வெளியீடு



யுனிவர்சிட்டி புகழ் ஜீவன், சோனியா அகர்வால், விவேக் நடித்த
திருட்டு பயலே
மனோகரா யாழ்ப்பாணம்
10.30, 2.30, 6.30 மணிக்கு

நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்
காட்சி நேரம் : 10.30, 2.30
சத்தியராஜ் (மாறுபட்ட 9 வேடம்), சூசன், விவேக், அப்பாஸ் நடித்த
"வணக்கம் தலைவா"
(அ-49188)

ராஜா யாழ்ப்பாணம்
பரத், பத்மபிரியா, ஆர்யா நடித்த
பட்டியல்
புதிய வெளியீடு
(அ-47139)
காட்சி நேரம்: 10.30, 2.30 மட்டும்


## கண்ணீர் அஞ்சலி

யாழ்.போதனா வைத்தியசாலை
பொது வைத்திய நிபுணர்
**Dr.த.பேரானந்தராஜா**
அவர்களின் அன்புத் தந்தை

### அருணாசலம் தம்பிப்பிள்ளை

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் கண்ணீரஞ்சலியையும் செலுத்துகின்றோம்.

தாதிய உத்தியோகத்தர்கள்,
விடுதி இல.10,
யாழ்.போதனா வைத்தியசாலை.
(அ-49785)


## தேவை

தரமான புரியாணி, கடல் உணவு, பிறைற் றைஸ் என்பன தயாரிக்கத் தெரிந்தவர் தேவை.

தொடர்பு : 0776055132 (51498)

## ஒத்து மாறல்

வவுனியா தெற்கு வலயப் பாடசாலை ஒன்றில் கடமையாற்றும் விஞ்ஞான பாட ஆசிரியர் யாழ்ப்பாணத்திற்கு ஒத்துமாற விரும்புகின்றார்.

தொடர்பு : 077 6648242
(அ/49274)

## ஒத்து மாறல்

யாழ். பாடசாலை ஒன்றில் கற்பிக்கும் ஆங்கிலப் பாட ஆசிரியர் கொழும்பு மாவட்டப் பாடசாலை ஒன்றிற்கு ஒத்து மாற விரும்புகின்றார்.

தொடர்பு : 077 6167736
(அ/49274)

## எமது வீடியோ CD வெளியீடுகள்

- பேசும் தெய்வம்
- King Kong -தமிழில் (பகுதி II)
- Rambo 3 -தமிழில்
- Iron Monkey -தமிழில்
- The Master -தமிழில்
- Prison on Fire -தமிழில்
- Death Train -தமிழில்
- The Miracle Fighters -தமிழில்
- The Island -தமிழில்

வீடியோ விமல்
யாழ்ப்பாணம்


## அறிவித்தல்

மானிப்பாய் றொட்டறக் கழகம் அதன் தாய் கழகமாகிய யாழ்.றொட்டரிக் கழகத்தால் 27th May 2006ஆம் திகதி முதல் அதன் சகல இயக்கம்களும் தடை செய்யப் பட்டுள்ளது. தயவு செய்து அக்கழகத்துடன் சகல தொடர்பு மற்றும் நடவடிக்கைகளை சகலரும் நிறுத்தும் படி கேட்டுக் கொள்கின்றோம்.

(அ/49782) யாழ். றொட்டரிக் கழகம்.

## மரண அறிவித்தல்கள்

### சோமசுந்தரம் லகுநாதன்



சாவகச்சேரி, டச்சுவீதி, மருதடிச் சந்தியைப் பிறப்பிடமாகவும் தற்போது கொடிகாமம் வெள்ளாம்போக்கட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் லகுநாதன் (மின்பொருத்துனர்) அவர்கள் 20.06.2006 செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரம் - பொன்னம்மா தம்பதியரின் பாசமிகு மகனும் அனுஷாவின் அன்புக் கணவரும் சோபிகாவின் அன்புத் தந்தையும் கந்தசாமி சிவக்கொழுந்து, காசித்தம்பி பகவதி ஆகியோரின் மருமகனும் கஜேந்திரனின் (முல்லைத்தீவு கல்விப் பணிமனை) மைத்துனரும் தவராணி, சிவமலர், கமலாம்பிகை, யோகாம்பிகை, வசந்தகுமாரி (ஜேர்மனி), விஜயலட்சுமி (பிரான்ஸ்), புஸ்பராணி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிதம்பரநாதர், தேசியநாதன், சிவகுருநாதன், கிருஷ்ணகுமார், நமசிவாயம், சுதந்திரநாதன், ஆனந்தன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (22.06.2006) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்று, கொற்புலோ மயானத்தில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வெள்ளாம்போக்கட்டி,
கொடிகாமம்.
(51503)

தகவல்:
மு.காசித்தம்பி
(நொத்தாரிசு லிகிதர்,
ஓய்வுபெற்ற ஆசிரியர் -
கச்சாய் அ.த.க.பாடசாலை)

### சரவணமுத்து தம்பிராசா



பத்தமேனி, அச்சுவேலியையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து தம்பிராசா அவர்கள் நேற்று (21.06.2006) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்செல்றவர்களான சரவணமுத்து - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென் ற தெய்வானைப் பிள்ளையின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கனகசபை - சின்னம்மா தம்பதியரின் மருமகனும் சறோசினிதேவி (கனடா), கௌசலாதேவி, இமாசலாதேவி (கனடா), சிவகுமார் (ரூபன் - லண்டன்), பக்ஷலாதேவி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் குணரட்ணம் (சின்னராசா - கனடா), கருணாகரன் (லொறி கருணா), ஜெயக்குமார் (கனடா), ஜெகதாஸ் (கனடா) ஆகியோரின் மாமனும் சுரேந்தினி (துஷா), டயானி, டினேஸ், கேசவன், பமிலா (வவா), கார்த்திகா, கேசவனிதன் (ராயு), தர்சிகா, பகீதா, சிந்திகா, பிரசன்னா, நிரோஜிகா, வதுசன், டிசாந் ஆகியோரின் அன்புப் பேரனும் பொன்னுத்துரை, பொன்னப்பா, கந்தசாமி, காலஞ்சென்ற நகுலேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.06.2006) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12 மணிக்கு உள்ளிவிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பத்தமேனி,
அச்சுவேலி.
தொ.பே. 0779213774 (51504)

தகவல்:
கருணாகரன்
(மருமகன் - லொறிகருணா).

### தாமோதரம்பிள்ளை சிங்கராஜா



காங்கேசன்துறையை பிறப்பிடமாகவும் தெல்லிப்பழையையும், கனடாவையும் வதிவிடமாகக் கொண்ட ஓய்வுபெற்ற புகையிரத நிலைய ஊழியர் தாமோதரம்பிள்ளை சிங்கராஜா அவர்கள் 18.06.2006 அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் அன்னபாக்கியத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற தமோதரம்பிள்ளை- பொன்னுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அப்பாப்பிள்ளை மாரிமுத்து- இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான துரைராஜா, தியாகராஜா,கனகம்மா,செல்வரத்தினம்(அம்மா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் மகாலட்சுமி அம்மா , அருள்ராஜா, புனிதராஜா, காலஞ்சென்ற அருந்தவராஜா ஆகியோரின் அன்புத் தந்தையும் கனகலிங்கம், பரமேஸ்வரி, சூரியகலா, பராசக்தி ஆகியோரின் அன்பு மாமனும் சிங்கராஜா, யோகராஜா, சத்தியராஜா, மகேந்திரராஜா, தங்கராஜா, கமலாதேவி, நாகேஸ்வரி, செல்லம், காலஞ்சென்றவர்களான நவரட்ணம், செல்வநாயகம், கதிர்காமநாயகி ஆகியோரின் மைத்துனரும் அன்பரசி, பாலு,ரமேஸ், ருக்ஷன், லக்ஷன், நிவேதா, கமலராஜ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.06.2006) வியாழக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : (51500)
S.புனிதராஜா
(மகன், கனடா)

தொ.பே : 001416 7840955

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிதாபகரமாகச் சாவைத் தழுவும் தமிழரின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் தருவது யார்?

## சபையில் சம்பந்தன் எம்.பி. சாட்டை

வடக்கு - கிழக்கு தமிழர்களின் வாழ்வு படுமோசமாகிக்கொண்டு போகிறது. நாளாந்தம் அவர்கள் இடம்பெயர்ந்து கொண்டிருக்கிறார்கள். இவ்வாறான அவலநிலையை இல்லாதொழிக்க இலங்கை அரசும், சர்வதேச சமூகமும் உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும். சர்வதேச சமூகம் இதுவிடயத்தில் இலங்கை அரசுக்குப் பாரிய அழுத்தங்களைக்கொடுக்க வேண்டும்."

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் நேற்று நாடாளுமன்றில் சபாநாயகரின் அனுமதியைப் பெற்று விசேட அறிக்கையொன்றை வெளியிட்டு உரையாற்றும்போது கூறினார். இது பற்றி அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

தமிழ் மக்களுக்கு வழங்கவேண்டிய வாழ்வியல் உரிமைகளுக்கான கடப்பாட்டை இலங்கை அரசு தொடர்ந்தும் புறக்கணித்தே வருகிறது. தமிழ்குடிமக்கள் இங்கு போதுமான பாதுகாப்பு இல்லாமல் பரிதாபகரமான சாவை எதிர்நோக்கி வருகின்றனர்.

தமிழ் மக்களுக்குப் போதுமான பாதுகாப்பை வழங்கவேண்டிய அரசு தொடர்ந்தும் தவறிழைத்துக் கொண்டே வருகிறது. எனவே, சர்வதேச சமூகம் போதிய அழுத்தங்களை இலங்கை அரசிற்குக் கொடுக்க வேண்டும். அதன் மூலமே தமிழ் மக்களுக்குப் போதிய பாதுகாப்புக் கிடைப்பதை உறுதிப்படுத்தமுடியும்.

பாதுகாப்புப் படையினரும், ஒட்டுப்படையினரும் தான்தோன்றித்தனமான முறையில் நாட்டில் செயற்பட்டு வருகின்றனர். தங்களைத் தட்டிக்கேட்பதற்கு யாருமில்லை என்ற இறுமாப்பில் இவர்கள் செய்யப்படுகின்றனர்.

இந்நிலை தொடருமானால் தமிழர்களின் எதிர்காலம் இலங்கையில் படுமோசமாகிவிடும் என்பதை நாம் எல்லோரும் உணர்ந்து கொள்ள வேண்டும். கடிவாளம் போட்டுத் தனது கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருக்க வேண்டிய பொறுப்பு அரசிற்குள்ளது.

தமிழர்கள் தங்கள் வீடுகளிலும், கிராமங்களிலும் எதுவித அச்சமுமின்றி வாழும் நிலை உறுதிப்படுத்தப்பட வேண்டும். அச்சுறுத்தல்கள், பாலியல் வல்லுறவுகள், படுகொலைகள், அழிவுகள் என்பன தொடர்ந்தும் இடம்பெறுவதை அரசு தடுத்து நிறுத்த முன்வரவேண்டும்.

கடந்த இரண்டு தசாப்த காலங்களுக்கும் மேலாக வடக்கு - கிழக்குத் தமிழர்கள் கொடிய யுத்தத்திற்கு முகம் கொடுத்து பல பாதிப்புகளைச் சந்தித்திருக்கின்றார்கள். சுமார் 10 லட்சத்துக்கு மேற்பட்ட தமிழர்கள் இந்த யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்தார்கள். உள்ளூரில் இடம்பெயர்ந்தோர் தொகை அதிகம்.

அதேவேளை, கணிசமான அளவு எண்ணிக்கையினர் வெளிநாடுகளுக்கு ஓடித் தப்பிவிட்டார்கள். வடக்கு - கிழக்கில் வாழுகின்ற தமிழ்பேசும் மக்களும் 2004 டிசம்பரில் ஏற்பட்ட சுனாமியினால் பெருமளவு பாதிப்புக்கு ஆளாகியிருந்தார்கள்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழ் பேசும் மக்களுக்கு புனர்வாழ்வளித்து அவர்களைக் குடியேற்றுவதற்கோ அல்லது பாதிக்கப்பட்ட வீடுகளை புனரமைத்துக் கொடுப்பதற்கோ அரசு திருப்திகரமான ஒழுங்குகளைச் செய்யவில்லை என்பதையும் நான் இங்கு சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். ஓரவஞ்சகமாகவே வடக்கு - கிழக்கு மக்கள் பார்க்கப்பட்டு வருகிறார்கள். பாதிக்கப்பட்ட மக்களுக்கு சர்வதேச அமைப்புகளிடமிருந்தும் அரச சார்பற்ற தொண்டர் அமைப்புகளிடமிருந்தும் கிடைத்த நிவாரணங்கள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளன.

யுத்தத்தால் இடம்பெயர்ந்த மக்களுக்குப் புனர்வாழ்வளித்து அவர்களை மீண்டும் அவர்களின் வாழ்விடங்களில் குடியேற்றுவதற்கு வசதியாக இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை ஒன்றை நிறுவுவதற்கு முயற்சி எடுக்கப்பட்டது.

ஆனால், அதுவும் கைகூடவில்லை. சுனாமியால் பதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்வுக்கு உதவுவதற்காக ஆழிப்பேரலை அனர்த்தத்திற்குப் பிந்திய முகாமைத்துவக் கட்டமைப்பு ஒன்றை நிறுவுவதற்கு எடுக்கப்பட்ட முயற்சியும் கைகூடாமல் போனது -

இத்தகைய ஒருசூழ்நிலையிலேயே இன்று மீண்டும் ஆயிரக்கணக்கான தமிழர்கள் தங்கள் வாழ்விடங்களை விட்டு வெளியேறி வேறு இடங்களில் புகலிடம் தேடும் அவலத்திற்குத் தள்ளப்பட்டு வருகின்றனர்.

நிலைமை மிகவும் துரிதமாகப் படுமோசமடைந்து வருகிறது. இது கட்டுமீறிப் போவதற்கு அனுமதிக்கக்கூடாது. சர்வதேச சமூகம் இதுவிடயத்தில் கரிசனை காட்ட வேண்டிய தேவையும் உள்ளது. - என்றார். (க)

## வட்டுக்கோட்டையில் சூடு சிப்பாய் ஒருவர் காயம்!

சங்கானை,ஜூன்22

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி அருகே நேற்றுக்காலை 8.40 மணியளவில் ரோந்துப் பணியில் ஈடுபட்ட இராணுவத்தினர் மீது இனந்தெரியாதவர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

இதில் இராணுவச் சிப்பாய் ஒருவர் காயமடைந்தார்.

இச்சம்பவத்தையடுத்து அப்பகுதி வழியே சென்ற பொதுமக்கள் தாக்குதலுக்குஇலக்காகினர் என்று கூறப்படுகின்றது. (29-175)

## இந்தியா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள போர் தொடர்பான அச்சம் மற்றும் பதற்றமான சூழ்நிலை குறித்து இந்தியப் பிரதமருக்கு அமைச்சர் மங்கள சமரவீர விளக்கவுள்ளார். புதுடில்லி விஜயத்தின் பின்னர் சென்னைக்கு வரவுள்ள அமைச்சர் மங்கள சமரவீர, தமிழக முதலமைச்சர் கலைஞர் கருணாநிதியையும் சந்திப்பாரெனத் தெரிவிக்கப்படுகிறது. (க)

## ரோந்துசென்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரயோகமும் மேற்கொண்டனர் என்றும் -

படையினர்மீதான தாக்குதலையடுத்து சுமார் 10 நிமிடநேரம் அந்தப் பகுதியில் தொடர்ச்சியாக துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டன என்றும் - அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

இந்தச் சம்பவத்தில் சிக்கிப் படுகாயமடைந்த கோப்ரல் ரஞ்சித் (வயது 32), சிப்பாய்களான குணசிங்க (வயது 23), பண்டார (வயது 22) ஆகியோர் மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக பலாலி இராணுவ வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டனர். சம்பவத்தில் படுகாயமடைந்தவர்களில் இராணுவச் சிப்பாய் ஒருவர் பின்னர் உயிரிழந்தார் என்று கூறப்பட்டபோதும் அதனை ஊர்ஜிதப்படுத்த முடியவில்லை.

இந்த மோதல் சம்பவத்தையடுத்து அந்தப் பகுதியில் தேடுதல் நடத்தப்பட்டதுடன், பொதுமக்கள் பலரும் நையப்புடைக்கப்பட்டனர் என்றும் கூறப்பட்டது.

## யுத்த நிறுத்தத்தை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிலேயே மேற்படி யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடிப்பதற்கான நிபந்தனை குறித்து புலிகள் குறிப் பிட்டிருக்கின்றனர் என அறிய வருகின்றது. அதில் புலிகள் தெரிவித்துள்ள முக்கிய அம்சங்கள் வருமாறு:-

✱ யுத்த நிறுத்த ஏற்பாடுகளை முழுமையாகத் தொடர்ந்து கடைப்பிடிக்க புலிகள் தயார். ஆனால், அந்த ஏற்பாடுகளை முழுமையாகவும், செம்மையாகவும் அரசுப் படைகள் கடைப்பிடிப்பதில்தான் அது தங்கியுள்ளது. அரசுப் படைகள் அதில் தவறினால் - மீறுமானால் - நடைமுறையில் உள்ள யுத்த நிறுத்த ஏற்பாடு எம்மைக் கட்டுப்படுத்தாது.

✱ ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகளைத் தடை செய்து, அதனைப் பயங்கரவாத இயக்கமாகப் பட்டியலிட்டுள்ளது. அதனால், இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுள்ள - மேற்படி ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கின்ற - சுவீடன், டென்மார்க், பின்லாந்து ஆகிய மூன்று 'நோர்டிக்' நாடுகளின் கண்காணிப்பாளர்களும் அந்தப் பணிகளைச் செய்வதற்கான நடுநிலைத் தன்மையையும், தார்மீகத் தகைமைகளையும் இழந்து விட்டுள்ளனர். எனவே, அடுத்த ஒரு மாதத்துக்குள் அவர்களை அப்பதவிகளிலிருந்து விடுத்து நடுநிலையுடைய - அரசு, புலிகள் ஆகிய தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட - பிற நாடுகளிலிருந்து - புதிய கண்காணிப்பாளர்களை விரைந்து தெரிந்து, அழைத்து பணியில் அமர்த்த வேண் டும்.

✱ யுத்த நிறுத்தக் கண்காணிப்பாளர்களின் உயிருக்கும், சொத்துகளுக்கும் உத்தரவாதமும், இராஜதந்திர ரீதியான பொறுப்புரிமை விலக்களிப்பும் வழங்குகின்றோம்.

- இவ்வாறு புலிகளின் பதில் கடிதத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்ததாக அறிய வந்தது. (க)

## கோப்பாய்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்த பொருள்களும் வெளியே எடுத்து வரப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவத்தையடுத்து குறிப்பிட்ட பணியாளர் விடுதியின் கூரைப்பகுதி பலத்த சேதமடைந்தது.

## ஈழ அகதிகளுக்காக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அகதிகள் முகாமுக்குச் சென்று அங்குள்ள நிலைமையை நேரில் கண்டறிந்து, அறிக்கை அளித்துள்ளனர்.

15 ஆண்டுகளுக்கு மேலாக தமிழகத்தில் அகதிகள் முகாமில் வசிக்கும் குடும்பத்தினருக்கு வீடுகள் கட்டித் தரலாம் என இந்த அமைச்சர்கள் குழு பரிந்துரைத்துள்ளதாகத் தெரிகிறது.

தமிழகம் முழுவதும் 103 இலங்கை அகதிகள் முகாம்கள் உள்ளன. அகதிகள் முகாமில் வசிப்பவர்களின் வாழ்க்கைத் தரம் மிகவும் மோசமாக உள்ளதாகவும் அமைச்சர்கள் தங்களது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர். இதனால், இந்த அகதிகளுக்கென சுமார் 50 ஆயிரம் வீடுகளை அரசு கட்டித் தரலாம் என்றும் அவர்கள் பரிந்துரைத்துள்ளனர்.

அகதிகள் முகாமில் தற்போது 2 ஆயிரம் வீடுகள் உள்ளன. இவற்றில் பெரும்பாலானவை மக்கள் வசிப்பதற்கே லாயக்கற்ற சூழலில் உள்ளன எனக் குறிப்பிட்டுள்ள அவர்கள், பெரும்பாலான வீடுகளில் மேற்கூரையே கிடையாதெனவும், இதனால் மழைக் காலங்களில் இவற்றில் மக்கள் வசிக்கவே முடியாதெனவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இராமேஸ்வரம் அகதிகள் முகாமில் உள்ள கழிப்பிடங்கள், பயன்படுத்துவதற்கேற்ற நிலையில் இல்லை. இதனால், அகதிகள் முகாமில் உள்ளவர்கள் - குறிப்பாகப் பெண்கள் - பெரும் அவதிப்படுகின்றனர் என்றும் அந்த அமைச்சர்கள் மேலும் குறிப்பிட்டுள்ள னர்.

அகதிகள் முகாமில் உள்ள உண்மை நிலைவரத்தை வெளிப்படுத்தும் புகைப்படங்களை முதல்வர் கருணாநிதி பார்த்துக் கண் கலங்கினார் எனவும் தெரிகிறது. (க)

## நோர்டிக் நாடுகளின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துரையாடினார்.

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட இரு தரப்பினருக்கும் கடந்த 8ஆம் திகதி நோர்வே அரசு அனுப்பிய கடிதத்திற்கு நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் பதில் அனுப்பியிருந்தனர். அந்தக் கடிதத்திற்கான பதிலை நோர்வே எப்போது வழங்கும் என்று கேட்ட போது அவர் இவ்வாறு கூறினார்.'

விடுதலைப் புலிகள் பதில் அனுப்பியுள்ளதை உறுதிசெய்துள்ள ஹான்ஸ் பிரட்ஸ்கர், விடுதலைப் புலிகளின் தரப்பில் முன்வைக்கப்பட்ட வாதத்தை, அனுசரணையாளர்கள் என்ற வகையில் தாம் ஏற்றுக்கொள்கின்ற போதிலும், ஐரோப்பிய ஒன்றியத்தின் தடையைக் காரணம் காட்டி, அந்நாடுகளின் பிரதிநிதிகளை கண்காணிப்பில் ஈடு பட வேண்டாமெனக் கோரியிருப்பது கவலைக்குரியதுதான் என்று குறிப்பிட்டார்.

தடை செய்த நாடுகளின் அங்கத்தவர்கள், நடுநிலைமையுடன் செயற்பட வாய்ப்பில்லை என்பதில் விடுதலைப் புலிகள் தெளிவான கருத்துடன் உள்ளனர் என்று தெரிவித்த பிரட்ஸ்கர், தடைசெய்த பின்னர், உறவை முன்போன்று பேணலாம் என்ற வாதத்தை ஏற்றுக்கொள்ளவும் அவர்கள் தயாராக இல்லை என்று விளக்கமளித்தார்.

சர்வதேச கண்காணிப்புக் குழுவில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் அனைவரும் தங்கள் பணியை பொறுப்புணர்வுடன் செய்ததாகவே நாம் கருதுகிறோம். ஐந்து நோர்டிக் நாடுகளின் பிரதிநிதிகளும் கடந்த நான்கரை வருடங்களாக, மிகச் சிறப்பாக தங்கள் பணியைப் புரிந்துள்ள போதிலும், ஐரோப்பிய ஒன்றியத் தடையின் பின்னர், அவர்களது பணி நடுநிலைமையுடையதாக இருக்குமென விடுதலைப் புலிகள் கருதவில்லை. இருப்பினும் இது எமக்குக் கவலையளிக்கும் ஒரு விடயம்தான் - என்றும் அவர் தெரிவித்தார்.

பிறிதொரு கேள்விக்குப் பதிலளித்த பிரட்ஸ்கர், விடுதலைப் புலிகளின் இந்தக் கருத்துக்களால், உடனடியாக யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் ஏற்படாது என்றும் -

தொடர்ந்தும் தங்களது பாதுகாப்பை கண்காணிப்புக் குழவினருக்கு வழங்க விடுதலைப் புலிகள் பூரண சம்மதத்தைத் தெரிவித்துள்ளனர் என்றும் அவர் கூறினார்.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் அதிகரித்திருக்கும் வன்முறைகளைச் சுட்டிக்காட்டிய பிரட்ஸ்கர், பொதுமக்கள் மீதான பல்வேறு தாக்குதல்கள், கெப்பிட்டிக்கொல்லாவ, பேசாலை தாக்குதல்கள் மற்றும் சிறிலங்கா விமானப் படையினரின் விமானக் குண்டுத் தாக்குதல்கள் என்று அனைத் தும் வன்முறைகள் அதிகரித்துச் செல்வதையே காட்டுகின்றன என்றும் - குறிப்பிட்டார். (க)


பரீட்சை வினாத்தாள் விற்பனைக்கு!!
தரம்:5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில்
திரு.கணேசலிங்கம் அவர்களின்
வெற்றித்தேர்வு-7
தரம்:4முதல் தரம்:11வரை
நடுத்தவணைப் பரீட்சை, 8பாடங்கள்.
கிடைக்கும் இடங்கள்..
பூபாலசிங்கம் புத்தகசாலை.யாழ் நகர்.
கங்கா புத்தகசாலை. திருநெல்வேலி.
செந்தூரன் புத்தகசாலை.சாவகச்சேரி.

SKY COMPUTER'S (PVT) LTD.
Affiliated with Irish International University (U.K)
No, 89, Kandy Road, Chundikuli, Jaffna.
Tel: 021 - 4590325 : Fax: 021 - 4590325

| | |
|---|---|
| Microsoft Office | 2 Month |
| Desktop Publishing | 3 Month |
| Computerized Accounting | 3 Month |
| Hardware Technology | 2 Month |

Internet & E-mail 2 Weeks (1000/=)
தமிழ்மொழியிலும் கற்பிக்கப்படும்
A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளது.
Computer sales
Computer Repair
Computer Parts
Computer Maintanance
கணனி சம்பந்தமான தங்களின் தேவைகளை பூர்த்தி செய்ய நாடுங்கள் (Sky Computer System) நடமாடும் சேவையும் (Mobile Service) உண்டு
E-mail : skycom@WOW.lk
(கச்சேரிக்கு அருகில்)
Today you learn Tomorrow you lead

SCC இன் கணனிப் பயிற்சி நெறிகள்
ஆரம்பம் 25.06.2006
Special Offer 2000/=
கீழுள்ள பயிற்சி நெறிகளில் இரண்டினை 2000ரூபாவுடன் கற்க,
A/L மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்.

| | |
|---|---|
| DIPLOMA IN PROFESSIONAL MS OFFICE 2003 | 4 Months |
| DIPLOMA IN DESKTOP PUBLISHING | 4 Months |
| DIPLOMA IN COMPUTER HARDWARE ENGINEERING | 4 Months |
| DIPLOMA IN NETWORK ENGINEERING | 4 Months |
| DIPLOMA IN WEB DESIGNING | 4 Months |
| DIPLOMA IN COMPUTER SCIENCE | 6 Months |
| DIPLOMA IN INTERNET E-MAIL | 2 Months |

Softview Computer College
Head Office :- 43, Arasady Road, Jaffna.
Branch :- 55, Arasady Road, Jaffna.
T.P: 021 2225170, 0777846811

COLLEGE OF ENGLISH
பிறவுண் வீதி,நீராவியடி,யாழ்.
A\L எடுத்தோர் / ஏனையோர்க்கு
SPOKEN ENGLISH/ GRAMMER
ஆரம்பம் : 24.6.6

| Batch | I | II | III | IV |
|---|---|---|---|---|
| Sat.Sun | 8am. | 9am. | 10am. | 3pm. |
| Mon.Wed | 4pm. | 5pm. | | |

O/L Paper Class
தனிப்பட்ட / பாடசாலை பரீட்சார்த்திகளுக்கு

IDM
Affiliated University College
216,Navalar Road, Jaffna
இலவசக் கணனிக் கருத்தரங்கு
BTEC - Diploma-in-ICT-Edexcel International - u.k.
(Internet, MS-Office, Flash, Dreamweaver, Java, VB, HTML, IT)
இடம் : IDM 216, Navalar Road, Jaffna.
திகதி : 23.06.2006 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி
அனைவரையும் பங்குபற்றிப் பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.
T.P : 021-4591398


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.06.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.